1525

"…arati." Reg. No. M. 291!.

பவ—வைகாசி

1934 மே—ஜூன்.

பாரதி

… THE REGISTRAR … 27 JUN 1934 MADRAS

மாலை 6. மணி 2.

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,

[illegible]

பிரசுராலயம்:-

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

197900

Cardamom Sale Company, Limited.

ஏலக்காய் விற்பனைக்-

-கம்பெனி, லிமிடெட்.,

தேவாரம்

1913-ம் வருஷத்திய 7-வது இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

மூலதனம் ரூ. 2,10,000.

ஏல விவசாயிகளையே அங்கத்தினராகக் கொண்டது. அங்கத்தினர்கள் ஏலத் தோட்டத்தில் விளையும் சரக்குகளை வட இந்தியாவிலிருக்கும் பல முக்கிய பட்டணங்களுக்கு அனுப்பியும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு அனுப்பியும் விற்றுக் கொடுக்கிறோம்.

தங்கள் ஏல சரக்குகளை நல்ல விலைக்கு விற்க வேண்டுமானால், ஏல விவசாயிகள் தங்கள் சரக்குகளை எங்கள் மூலமாய் விற்க வேண்டுகிறோம்.

O. R. கோண்டுலு செட்டியார்,

மானேஜிங் டைரக்டர்,

ஏலக்காய் விற்பனைக் கம்பெனி, லிமிடெட்,

தேவாரம்,

மதுரை ஜில்லா.

27 JUN 1954

"பாரதி"

சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

பவ— சித்திரை முதல் 6-ம் ஆண்டு ஆரம்பம்.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் ஜாதி, மத, கட்சி பேதங்களற்று
இந்தியரனைவரும் பாரத மாதாவின் மக்க
ளென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணம் கமழும் செந்தமிழ் மாஸிகை

"பாரதி" ஒன்றே யாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்

சந்தா விபரம்:

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2/=** அல்லது **3** ஷிலிங்
வெளி நாடுகளுக்கு ,, ரூ **3/=** ,, **5** ,,

போஷக சந்தா குறைந்தது ரூ **100/=**

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.

இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா, S. இந்தியா.

அழகான என்லார்ஜ்மெண்டுகள்! பேர் பெற்ற வேலைகள்!

வருஷாந்திர அறிக்கை.

சில நாட்களுக்கு மட்டும் கீழ் குறிப்பிட்டிருக்கும் போட்டோக்களும், ஆர்டிஸ்டிக் புரோமைட் என்லார்ஜ் மெண்டுகளும் குறைந்த சார்ஜுக்கு படங்கள் எடுத்துக் கொடுக்கப்படும். பழைய சிறிய போட்டோக்களை புதுப்பித்தும், பெரிதாகச் செய்தும் நவநாகரீகத்திற் கேற்றவாறு செய்து கொடுக்கிறோம். இந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள். வேலைப்பாட்டின் திறனை ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

மவுண்டின் அளவு.	படத்தின் அளவு.	காப்பிகள்.	சார்ஜ்.
12×10	$8\frac{1}{2}\times 6\frac{1}{2}$	1-க்கு	ரூ. 3-0-0.
14×10	10×8	1-க்கு	ரூ. 4-0-0.
15×12	12×10	1-க்கு	ரூ. 6-0-0.
20×16	15×12	1-க்கு	ரூ. 8-0-0.

இதற்கு மேற்பட்ட பெரிய சைஸ் தேவையுள்ளோர் கடிதங்களின் மூலமாகவும் நேரிலும் தெரிந்துகொள்ளலாம்.

(Sd.) ***K. M. B. S. Mani Brothers.***
Artists and Photographers,
BODINAYAKANUR P. O.,
Madura Dist., S. India.

குறிப்பு:—ஆர்டர் கொடுப்பவர்கள் அட்வான்ஸ் பாதி ரூபாய் அனுப்ப வேண்டும்.

நம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்.

1.	நெப்போலியன் போனபார்ட்	0—4—0
2.	தென் இந்தியா விவசாய நூல்	1—4—0
3.	பணத சங்கரி (ஓர் துப்பறியும் நவீனம்)	1—0—0
4.	போலந்து நாட்டின் சுதந்திரம்	0—1—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

பாரதிப் புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

"பாரதி"
பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ' வெனப் புகழப்பெற்று, சென்ற 1929-ம் வருஷ முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இந்த பைண்ட் வால்யங்களில் பல பெரியோர்கள் சரிதைகளும், தேசாபிமானச் செல்வர்களின் ஜீவியக் குறிப்புகளும், அவர்தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.

நேர்த்தியான காலிகோ- கில்ட் பிரிண்ட்.

2-ம்	வருட வால்யம்	1-க்கு விலை	ரூ. 2—8—0
3-ம்	,,	,,	ரூ. 2—8—0
4-ம்	,,	,,	ரூ. 2—8—0
5-ம்	,,	,,	ரூ. 2—8—0

3-ம் வருட அனுபந்தம் ரூ. 0—4—0

தபாற் செலவு பிரத்தியேகம்.
வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன் வால்யம் 1-க்கு ரூ. $3\frac{1}{2}$ அல்லது $5\frac{1}{2}$ ஷிலிங்.

"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

பாரத நாட்டின் வீரப் புதல்வி

ஜான்ஸி மகாராணி லக்ஷ்மீ பாய்

ஜீவிய சரித்திரம்.

பி,தி 1-க்கு விலை அணா 0—2—0.

வேண்டுவோர் தபால் செலவுக்கும் சேர்த்து இரண்டரையணா ஸ்டாம்பு அனுப்பி வைக்கவும்.

10 பிரதிகள் வாங்குவோருக்குத் தபாற் செலவு இனும்.

"பாரதி"ப் புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாஸிகை.

பொருள் அடக்கம்.

மாலை 6. பவஹு சித்திரைமீ மணி 2.

தொடர் எண். பக்கம்.

1. சத்தியகாமன் (உண்மைக் கதை)—
ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி" ... 82
2. தேசீயக் கல்வி—திரு. சு. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ... 89
3. புஸ்தக இன்பம்—ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி" 91
4. என் பொன் அண்ணு—
திரு. M. வேலுச்சாமி அவர்கள், B A. ... 95
5. சமீப கால நிகழ்ச்சிகள்—"சர்தார்" 115
6. தள்ளிவிடுதல் (ஒரு சிறு கதை)—
திரு. அரியநாயகம் அவர்கள், B.A., B.D., B.Ed., (Edin.) 119
7. இயற்கை யற்புதம்—
பண்டித திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் ... 131
8. மாங்கனீஸ் உலோகமும் அதன் உபயோகங்களும்—
திரு. O. P. தேசிகன் அவர்கள் ... 131
9. ஏழைச் சின்னன்—
பண்டித ஜனப் K. அப்துல் சுகூர் அவர்கள் ... 141
10. பேச்சு—திரு. V. அனந்தகிருஷ்ணன் அவர்கள், B.A. ... 144
11. அமெரிக்காவில் பத்திரிகைகள்—
திரு. ஸ்ரீநிவாஸ் அயர்கள் ... 145
12. ராஜா கேசவதாஸ்—திரு. K S. சாமி அவர்கள் ... 148
13. ஆராய்ச்சி மேடை— 154
14. ஆசிரியக் குறிப்புகள்— 159

பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர். ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

மாலை 6 | பவ-வைகாசி 1931-வரு மே-ஜூன்மீ | மணி 2

சத்தியகாமன்.

(உண்மைக் கதை.)

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

மாலை நேரம். சூர்யன் மலையில் மறைகிருன். மேகங்கள் ஆகாயத்தில் அற்புதமாய்த் தோன்றுகின்றன. மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், மிருகங்கள், வனங்கள் முதலியவைகள் போன்று எத்தனையோ விதம்விதமான உருவங்கள்! தங்கத்தைக் காய்ச்சி உருக்கிவிட்டதைப் போன்று சில மேகங்கள்! பல நீலம், சில பச்சை, சில கறுப்பு, பல பற்பல நிறங்கள்! இனியும், கண்களைக் கவரும் கலப்பு நிறங்கள்! அடிக்கடி மேகங்கள் மறைகின்றன. புதிய உருவங்களில் புதிய வர்ணங்களில் தோன்று

கின்றன. அழகு மேகங்கள், ஆச்சர்ய மேகங்கள், ஆனந்தத்தை
அளிக்கும் மேகங்கள்! இப்பொழுது சந்திரன் சூரியனை இன்வரவேற்
றுக் கட்டித் தழுவுகிறான். புது நறுஞ் செடிகளாலும், பசிய மரங்களா
லும், சமுத்திரத்தில் வீசும் அலைகளின் திவலைகளாலும் குளிர்ந்த
காற்று மெதுவாக வீசுகிறது. ஆடு மாடுகளை மேய்க்கும் சிறுவர்கள்
ஆனந்தத்துடன் வீடு நோக்கி வந்துகொண் டிருக்கிறார்கள். பகல்
முழுவதும் நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி பாடுபடும் குடியான
வர்களும் பசியைப் போக்கும் ஆவலுடன் வீடுகளை நினைத்து நடந்து
கொண்டிருக்கிறார்கள். கூலி வேலை செய்யும் ஏழை எளியவர்களும்
தங்கள் தங்கள் உறைவிடம் நோக்கி ஓடுகிறார்கள். வீட்டுக் காரியங்
களைப் பார்த்துக்கொண்டு வீட்டில் அடைபட் டிருப்பவர்களும் சந்
தோஷத்துடன் வெளிக் கிளம்புகிறார்கள். புஸ்தகங்களைப் படித்து
அலுத்திருக்கும் மாணவர்கள் விளையாடிக்கொண் டிருக்கிறார்கள்.
இயற்கை அழகுகளையும் விநோதங்களையும் கண்டு மகிழும்பொருட்
டுப் பிரகிருதா தேவியின் அன்பர்கள் வெளியே புறப்படுகிறார்கள்.
புஷ்பங்களிலிருந்து வாசனை பரிமளிக்க ஆரம்பிக்கிறது. சில பட்சி
கள் பாடிக்கொண் டிருக்கின்றன. பல பட்சிகள் தங்கள் தங்கள்
இருப்பிடங்களுக்குச் சென்று அமைதியுடன் இருக்கின்றன. தரித்
திரர்கள் தங்கள் நிலையை எண்ணி எண்ணி வருந்துகிறார்கள். செல்
வர்கள் தங்கள் சுகபோகங்களை நினைத்து நினைத்து மகிழ்கிறார்கள்.
பக்தர்கள் கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்கிறார்கள். ஞானிகள்
தியானம் செய்துகொண் டிருக்கிறார்கள். யோகிகள் யோகத்தில்
அமர்ந்துகொண் டிருக்கிறார்கள், வைதீகர்கள் அனுஷ்டானங்கள்
செய்கிறார்கள். பெண்கள் சமையல் செய்கிறார்கள். காதலர்களும்
காதலிகளும் விரைவில் தங்களுக்குக் கிடைக்கப்போகும் இன்பத்தை
நினைத்து நினைத்து மனோ உலகில் பறக்கிறார்கள்.

மரஞ் செடிகொடிகள் நிறைந்த ஆற்று வசதிகள் பெருகிய ஒரு
பள்ளத்தாக்கில் ஒரு ஆச்சிரமம். அந்த ஆச்சிரமத்தைச் சுற்றிலும்
மூங்கில் புதர்கள். அவைகளின் மீது பிரப்புக் கொடிகள். அவை
களே வேலிகள். அதற்குள் ஒரு தடாகம். அதில் பொற்றாமரைகள்,
அல்லி முதலிய ஜல புஷ்பக் கொடிகள். தடாகத்தைச் சுற்றிலும்
நானாவித பூச்செடிகள், புஷ்ப தருக்கள், பலா, மா, கமுகு, தென்னை
முதலிய மரங்கள் அந்த இடத்தை அலங்கரித்துக்கொண் டிருக்கின்
றன. நறுமணம் வீசும் பூக்கொடிகள் பர்ணசாலையின் மீது படர்ந்து,

செயல் செய்வதே உங்களின் பெரிய நோக்கமாக இருக்கட்டும்.
யோசனை, சங்கற்பம், தியானம் தன்னியில் எந்தச் செயலையும் செய்ய வேண்
டாம். சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கும் வேதாந்தத்தை அடியோடு
ஒழியுங்கள்.

அடர்ந்திருக்கின்றன. அங்கிருந்து பல தொங்கிக்கொண் டிருக்கின்
றன; சில ஆடிக்கொண்டிருக்கின்றன. இவைகள் ஆடுவது ஆச்
சிரமத்திற்கு வருபவர்களை அன்புடன் அழைப்பது போன்றிருக்
கிறது. புஷ்பங்களிலிருந்து சிந்திப் பறந்துகொண்டிருக்கும் மகரந்
தப் பொடிகள் அங்கு மனோஹரமான வாசனை கமழ்ந்துகொண்
டிருக்கும்படி செய்கிறது. அடுத்து ஓடும் நதியின் தண்ணீர்த்
துளிகளுடன் கலந்த மென் காற்று இன்பமாய் வீசுகின்றது. சலசல
வென்று ஓடும் நதியின் சப்தம் மனதிற்குக் களிப்பை உண்டாக்கு
கிறது. அங்கு மான் குட்டிகள் தன் தாய் மான்களை விட்டு விட்டுத்
துள்ளிக் குதித்து ஓடி விளையாடுவதும், வண்ணக் கலாப மயில்கள்
ஆச்சிரமத்தின் மேலிருந்து ஆடுவதும் கண் கவரும் காட்சி. பொது
வாக ஆச்சிரமத்தின் தோற்றமும் அமைப்பும் சாந்தியை அளிக்கி
றது. ஞானிகளின் தியானத்தால் தோன்றும் ஆத்மீக சக்தியானது
அந்த ஆச்சிரமம் முற்றிலும் வியாபித்து, அங்கு வருகிறவர்களைக்
கவர்ச்சித்து, அவர்களுக்கு அமைதியை அளிக்கிறது.

தாங்கள் மேய்க்கக் கொண்டுபோன ஆடு மாடுகளை யெல்லாம்
தொழுவங்களில் அப்பொழுதுதான் அடைத்துவிட்டுத் தங்கள் குரு
நா... வந்து உட்கார்ந்திருக்கிறார்கள் சில மாணவர்கள். ஆச்சிரம
காரியங்களைப் பார்க்கும் பையன்களும் தங்கள் தங்கள் வேலைகளை
முடித்துவிட்டு அங்கு வந்திருக்கிறார்கள். இன்னும் எல்லா மாண
வர்களும் அங்கிருக்கும் சீடர்களும் தங்கள் குருநாதர் அருகில் வந்து
அவரைச் சுற்றி வரிசையாக உட்கார்ந்து அவரது அமிர்த உபதேசங்
களைக் கவனமாய்க் கேட்டுக்கொண் டிருக்கிறார்கள். அப்பொழுது
புஷ்பங்களையும் பழங்களையும் கொண்டுவந்து சமர்ப்பித்து, ஒரு புதிய
வாலிபன் கௌதம புத்த முனிவரது பாதாரவிந்தங்களில் விழுந்து
நமஸ்கரித்தான். எல்லாருடைய பார்வையும் இந்த அழகான இளை
ஞன் மீது சென்றது.

அப்பொழுது புத்தர்:— சந்தோஷம், உனக்கு ஆசீர்வாதம்
கிடைக்கட்டும்! சாந்தி உண்டாகட்டும்! உன் பெயரென்ன? என்ன
காரியமாக இங்கு வந்தாய், பிரிய பிள்ளாய்?

பையன்:— என் பெயர் சத்தியகாமன். உண்மையான
ஞானத்தை அடையும் வழியைக் காணும் பொருட்டுத் தங்களிடம்
நான் வந்திருக்கிறேன். சத்தியத்தைத் தவிர்த்து வேறொன்றிலும்
எனக்கு விருப்பமில்லை. என் மீது கருணை கூர்ந்து, எனக்கு ஞான

உங்கள் தேசத்தை நேசியுங்கள். உங்கள் முன்னோர்கள் வாழ்ந்த நாடு.
உங்கள் முன்னேற்றத்திற்காகக் கடவுளால் உங்களுக்கு அளிக்கப்பட்ட நாடு.
ஆகையால் தேசத்தை மேன்மை அடையச் செய்வது உங்கள் கடமை.

உபதேசம் செய்து, என்னை ரட்சித்து அருளுமாறு தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

புத்தர்:— என்னருமைக் குழந்தாய்! நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன்? உயர்வான ஞானத்தை அடைய பிராமணனே தகுந்தவன்.

சத்தியகாமன்:—முனி சிரேஷ்டரே! நான் என்ன ஜாதியென்று எனக்கே தெரியாது. எங்கள் வீட்டுக்குப் போய் எனது தாயாரைக் கேட்டுத் தெரிந்துகொண்டு வந்து சொல்கிறேன்.

புத்தர்:— ஆச்சர்யம், பேராச்சர்யம்! உன் ஜாதி உனக்குத் தெரியாதா?

சத்தியகாமன்:— ஆம் சுவாமி. என் ஜாதி எனக்குத் தெரியாது. வீட்டிற்குப் போய் வருவதற்குத் தயவுசெய்து எனக்கு அனுமதி கொடுக்க வேண்டுகிறேன்.

புத்தர்:— அப்பா! உனது விருப்பம் போன்று உங்கள் வீட்டிற்குச் சென்று வருவாயாக.

பையன் உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டான். சிற்றாறுகளையும் சிறு சிறு காடுகளையும் கடந்தான். சில மேடு பள்ளங்களில் ஏறி இறங்கிச் சென்றான். கடைசியில் ஒரு மணல் மேட்டின் அருகில் ஒரு பாழடைந்த கிராமத்தின் மூலையிலிருந்த தனது தாயாருடைய குடிசைக்கு வந்தான். வாயற்படியின் அருகில் நின்று தனது அருமைக் குமாரன் வரவை அவன் அன்னை அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். தன் பிரிய மகனை வாஞ்சையுடன் கட்டி அணைத்து, உச்சி மோந்து, முத்தமிட்டு புத்தபிரானிடம் சென்ற சங்கதியைப் பற்றி ஆத்திரத்துடன் விசாரித்தாள்.

சத்தியகாமன்:— என்னுயிரனைய அன்னையே! எனது தகப்பனார் எங்கே இருக்கிறார்?

தாய்:— ஏனப்பா இதைக் கேட்கிறாய்?

சத்தியகாமன்:— வேண்டும்.

தாய்:— உனக்கேன் இந்தக் கவலை?

சத்தியகாமன்:— என் தகப்பனார் எங்கே?

புரோகிதர்கள் கடவுள் பெயரை கடைச் சாமான்கள் போன்று அடிக்கடி விலை கூறி விற்பனை செய்கிறார்கள். வன்மையுள்ளவனுக்குப் புரோகிதர்கள் அஞ்சுகிறார்கள்.

தாய்:— உன்னைக் காப்பாற்ற நான் இருக்கிறேன்! பின் ஏன் இதையெல்லாம் விசாரிக்கிறாய்? என் க்ஷேமநிதியே!

சத்தியகாமன்:— ஏன் தயங்குகிறாய்! உள்ளதைச் சொல்லம்மா?

தாய்:— உனக்குத் தகப்பனாரில்லை.

சத்தியகாமன்:— என் தகப்பனார் இறந்துவிட்டாரா?

தாய்:— உனது தகப்பன் மாண்டு போகவில்லை.

சத்தியகாமன்:— அவர் பெயர் என்ன?

தாய்:— உனக்குத் தந்தையே கிடையாது.

சத்தியகாமன்:— அப்படியா?

தாய்:—ஆம்.

சத்தியகாமன்:— என்னைப் பெற்றது யார்?

தாய்:— உன்னைப் பெற்று வளர்த்தவள் நான்தான்.

சத்தியகாமன்:— நான் என்ன ஜாதி? சொல்லம்மா சொல்.

தாய்:— ஏன் பலவற்றைப்பற்றிக் கேட்கிறாய்? உனக்கு ஏன் இந்த விசாரம்?

சத்தியகாமன்:— என் ஜாதியைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

தாய்:— உயர்வான ஞானத்திற்கும் ஜாதிக்கும் சம்பந்தம் என்ன? ஒன்றுமில்லையே. சந்நியாசிகளுக்கு ஜாதி எதற்கு? எனது செல்வமே! நீ புத்த பகவானிடம் சென்ற சங்கதியைக் குறித்துக் கேட்க எனக்கு அதிக ஆவலாயிருக்கிறது. என்னென்னமோ கேட்கிறாய்? நீ போன விஷயத்தைப் பற்றி முதலில் எனக்குச் சொல்லமாட்டாயா?

சத்தியகாமன்:— "உயர்வான ஞானத்தை அடைய பிராமணனே தகுந்தவன்" என்று சொல்லி என்னை என்ன ஜாதியென்றும் அவர் விசாரித்தார். அம்மா! நான் என்ன ஜாதி? உடனே சொல்லம்மா.

தாய்:— இதைக் கேட்டவுடன் மனம் குழைந்து, கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்து ஓடச் சொல்லுகிறாள். என் வாலி

கடவுள் எல்லா ஜனங்களுக்கும் பொதுவானவர். ஒரு ஜாதிக்காக பிரத்தியேகமாகக் கடவுளில்லை.

பத்தில் நான் மிகுந்த ஏழையா யிருந்தேன். வறுமை என்னை மிகவும் கஷ்டப்படுத்தியது. உடலைக் காப்பாற்றுவது அதிகத் துன்பமா யிருந்தது. என் வாழ்வு கசப்பா யிருந்தது. நான் மகா எளிமையில் இருந்தபடியால், ஒருவரும் என்னை மணக்க முன்வரவில்லை. ஆகையால் எனக்குக் கணவன் கிடையாது. எனக்குப் பல ஆசை நாயகர்கள் இருந்தார்கள். நாதனற்ற எனக்கு நீ புத்திரனாகத் தோன்றினாய். உன்னை வளர்த்துக் காப்பாற்றியவள் நானே. என்னருமை சம்பத்தே! என் வாழ்வை மகிழ்விக்க வந்த பிள்ளைக் கனி அமுதமே! என் ஜீவியத்தின் ஊன்றுகோலே! அறியா வயதில் வறுமையால் குற்றம் செய்தேன். நான் என்ன செய்வேன்! உன் முன் நிற்க நாணமடைகிறேன். இதைப்பற்றி நினைத்தால், என் நெஞ்சம் உடைகிறது. அன்புகூர்ந்து என்னை மன்னிக்குமாறு கெஞ்சுகிறேன்.

சத்தியகாமன்:— என் பிரிய அன்னாய்! நான் உன் துன்பங்களையும் துயரங்களையும் தெரிந்தேன். மனிதர்கள் செய்யும் அநீதிகளை வெறுக்கிறேன். மூடக் கொள்கைகள் கெட்ட வழக்கங்களல்லவா உன்னைக் கெடுத்தது? நீ என் மீது கொண்டிருக்கும் எல்லையற்ற அபார அன்பை நான் அறிவேன். என்னைப் பெற்று அருமையுடன் வளர்த்த மாதாவாகிய உன்னையா மகனாகிய நான் மன்னிப்பது? நல்லது நல்லது! இனி மேல் இதை விட்டுவிடு. புண்ணியம் செய்; அனைவரிடத்திலும் அன்பாயிரு; வருந்தவேண்டாம்; நம்பிக்கைகொள். என் உடம்பில் ஒரு மூச்சு இருக்கும் வரையில் நான் உன்னை மறவேன். நான் உன்னைக் கடவுளிடம் ஒப்படைக்கிறேன்.

II

இந்த யுவன் இவைகளை யெல்லாம் கேட்டுத் தனது பிரிய தாயாருக்காக இரக்கம் கொண்டான். தனது கேவலமான நிலைக்காக வருந்திக் கண்ணீர் வடித்தான். சாரமற்ற உலகத்தை மிகவும் வெறுத்தான். படுத்தான். தூக்கம் வரவில்லை. பிறப்பின் அருத்தமென்ன? வாழ்வின் நோக்கமென்ன? மரணத்திற்குப் பின் மனிதர் நிலையென்ன? என்று எண்ணி எண்ணி ஆராய்ச்சிக் கடலில் ஆழ்ந்தான். சத்தியகாமனது மனத் துயரத்தை ஒழிக்கும்படி சூரியன் பிரகாசமானான். தன் மாதாவை வணங்கினான். உள்ளம் உருகி அவனது அன்னை கண்ணீர் வடித்து, முத்தமிட்டு, அநேக ஆசிகள் அளித்துத் தனது மகனுக்கு வருத்தத்துடன் விடை கொடுத்தாள். பையன்

நம் தேசத்துச் சிறுவர் சிறுமியர் பலரும் மேல் நாட்டினரைப் போல் நடை உடை பாவனைகளை அனுஷ்டிக்க விரும்புகிறார்களே யன்றி, அவர்களைப் போலக் கல்வியும் அறிவும் நமக்கு வேண்டுமென்பதைக் கவனிப்பதில்லை.

நடக்க ஆரம்பித்தான். அக் காலையில் செடி கொடிகளில் மலர்ந்திருக்கும் பன்னிறப் பூக்களின் மீது சூரிய கிரணங்கள் படவே, அவைகள் புத்தழகு பெற்று விளங்கின. இயற்கையோடு இசைந்த வாழ்வு நடத்துவோருக்குச் சூரியன் உதவி கொஞ்சமன்று. பிரகிருதா தேவி தன்னைப் போற்றும் பக்தர்களுக்குச் சதா ஒத்தாசை செய்து கொண்டிருக்கிறாள்.

ஆச்சிரமத்தில் சீடர்கள் அதிகாலையில் தங்கள் தங்கள் காலை வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டு, ஒரு பெரிய மரத்தின் அடியில் சாக்கிய சிம்மனாராம் பகவான் புத்தர் முன்பு வட்டமிட்டு உட்கார்ந்திருந்தார்கள். அவர், அவர்களுக்குப் போதித்துக்கொண் டிருந்தார். ஆத்மஞானம் அடைய அடங்கா ஆவல் கொண்ட சத்தியகாமன் அப்பொழுது வந்து சித்தார்த்தனாரது பாதமலர்களில் விழுந்து தெண்டனிட்டு மௌனமாக நின்றான்.

புத்தர்:— உன் மாதாவிடம் கேட்டாயா?

சத்தியகாமன்:— ஆம் பிரபுவே.

புத்தர்:— இப்பொழுது சொல்லலாம். உன் ஜாதி என்ன?

சத்தியகாமன்:— எனக்குத் தெரியாது.

புத்தர்:— ஆ! இப்படியும் உண்டா. உன் அன்னை சொல்லியது தான் என்ன என்ன?

சத்தியகாமன்:— என் தாயார் சொல்லியதாவது:—"வாலிபத்தில் நான் மிகுந்த ஏழையா யிருந்தேன். வறுமை என்னை மிகவும் கஷ்டப்படுத்தியது. உடலைக் காப்பது துன்பமா யிருந்தது.................................எனக்குக் கணவன் கிடையாது. எனக்குப் பல ஆசை நாயகர்கள் இருந்தார்கள். நாதனற்ற எனக்கு நீ புத்திரனாகத் தோன்றினாய். உன்னை வளர்த்துக் காப்பாற்றியவள் நான்தான்."

இவ் வார்த்தைகளைக் கேட்டவுடன் முணுமுணுக்கும் சப்தம், கோபமுள்ள தேனீக்கள் ரீங்காரம் பாடுவது போன்று, அங்கு கூட்டத்தில் மெதுவாக உண்டாகியது. இப் பையனுடைய மானக்கேட்டைக் கண்டு மாணவர்கள் மெல்லச் சிரித்தார்கள்; குற்றங் கூறினார்

உழைப்பாளிகளின் கூலியோ எல்லாத் தொழில்களிலும் குறைந்து வருவது கண்கூடு. ஜனத் தொகையோ பெருகிக்கொண்டு வருகிறது. ஒவ்வொரு நாட்டிலும் உழைப்பாளிகளின் நிலை நிலையற்று ஆபத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. ஆயிரக் கணக்கான உழைப்பாளிகள் அடிக்கடி வேலை யில்லாமல் சும்மா யிருக்கும் சீரழிந்த நிலை சகஜமாகிவிட்டது.

கள். குற்றங் குறைகளிருந்தால் எப்பொழுதும் மாணவர் கூட்டங்களி லிருந்து தப்புவது கஷ்டமே.

சத்தியகாமன் உருக்கத்துடன் சொன்ன இந்த உண்மையான வார்த்தைகள் கௌதம புத்தரது காதுகளில் விழுந்தன. உடனே அவர் அளப்பரிய அன்பால் தனது ஆசனத்தை விட்டுத் தாவி எழுந்து, தன் இரு கைகளையும் விரித்து, வாரி எடுத்து, அவனைக் கட்டித் தழுவிச் சொல்லியதாவது:— என் அரிய குழந்தாய்! எல்லா பிராமணர்களிலும் நீயே மேலானவன். உண்மை பேசுகிறவன் எவனோ, அவனே உத்தம பிராமணன். மகா உயர்ந்த சத்தியம் உன்னிடம் பிரகாசிக்கிறது. நீ சத்தியவந்தன். உன் பெயர் உனக்கே தகும். நீ எனக்கு இனிமேல் சீடனே. நான் உன்னைக் கண்டடைந்தது எனது பாக்கியமே. உன் போன்ற சீடர்களை யல்லவா நான் தேடிக்கொண் டிருக்கிறேன். எங்கும் போகாதே. இங்கேயே என்னிடம் சந்தோஷமா யிரு. உனக்கு விரைவில் சாந்தி கிடைக்கட்டும்! உன் போன்ற வாலிபமணிகளாலல்லவா பாதகண் டம் சிறப்படைந்து கொண்டிருக்கிறது?

மற்ற சீடர்களைப் பார்த்து கௌதமர் "நீங்கள் சிரித்தீர்கள்; முணுமுணுத்தீர்கள். நான் உங்கள் மனதை அறிந்தேன். பிறப் பால் உயர்வு தாழ்வு கிடையவே கிடையாது. அவரவர்களுடைய செய்கைகளால் தான் உயர்வு தாழ்வு அவரவர்களுக்கு உண்டாகிறது. ஜாதிகளை உண்டாக்கியவன் மனிதன் தான். கேவலம் பிறப்பால் உண்டான ஜாதி பேதங்களை அறவே அகற்றுங்கள். உண்மை, ஜீவ காருண்யம், அன்பு, நீதி முதலிய உயரிய குணங்களுக்கு மரியாதை செய்யுங்கள். நன்மை செய்வதே உங்கள் மதமா யிருக்கட்டும்; உலகமே உங்கள் தேசமா யிருக்கட்டும்" என்றார்.

இது புத்தர் காலத்துக் கதை—பண்டை உண்மைக் கதை.

இக் காலத்துத் தமிழ்ப் புலவர் பெருமான் சுப்ரமண்ய பாரதி யார் சொல்லுகிறார்:

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்தமதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

உன் ஜீவியத்தின் முதற் படியிலேயே ஒப்பற்ற தீர்மானங்களைக் கொள். உன் காரியம் ஆரம்பவரையில் உழைத்துக்கொண்டிரு. வெற்றி உனக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்.

தேசீயக் கல்வி.

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

நமது நாட்டில் தற்காலம் ஒருசிலருக்கு மாத்தி ரம் பயன் தரும் என்று கருதப்படும் முறையிலன்றிப் பலருக்கும் பயன்பட்டு வந்த ஒரு கல்வி இருந்துதான் வந்தது. அம் முறை எக்காரணம் கொண்டோ அழிக் கப்பட இப்பொழுது "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்" என்பதுபோல, "நமது பழைய முறை" என்பதைவிட்டுத் "தேசீயக் கல்வி முறை" என்று சொல்லிக்கொண்டு ஒரு முறையை ஆராயத் தொடங்கியுள்ளோம். தேசீயக் கல்வி என் பதற்கு நாம் கூறும் பொருள் "தேசத்தார் அனைவருக்கும் கிடைக்கக் கூடிய கல்வி" என்பதுதான். எந்தத் தேசத்திலே அந்தத் தேச மக்கள் பேசும் சுயபாஷையில் கல்வி கற்பிக்கப்படுகிறதோ, அந்தத் தேசம்தான் தேசீயக் கல்வியைக் கற்பிக்கின்றது என்று சொல்லத் தகும் உரிமையினை யுடையது. ஏனைய நாடு அவ் வுரிமையைப் பெறும் தகுதி யுடையதன்று. சிறிது காலத்திற்குள் ஜப்பான் மேன்னத நிலைமையை எய்தத் துணை செய்ததும் இம் முறையே. இதைப்பற்றிப் பல பேசலாம். எனினும், நாம் இன்று அங்ஙனம் கூறாது நமது அரும் பெரும் தலைவர்களுள் ஒருவராயிருந்து, காலஞ் சென்ற பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் அவர்கள் இத் தலைப் பிற் கூறிய ஒரு பகுதியை ஈண்டு கூறி, இக் கட்டுரையை முடிக்கி றோம். நேயர்கள் கூர்ந்து கவனித்துக்கொள்வார்களாக.

"தேசீயக் கல்வி என்றால் என்னவென்று பலர் எழுதியும் பேசியும் இருக்கின்றனர். ஆனால் அனைத்தையும்விட அதற்குற்ற இலகுவான பொருள் என்னவென்றால், வாழ்க்கையாகிய போராட் டத்தில் ஒரு சமூகத்தாருக்கு உற்ற துணையாக இருப்பதும், தேவை களைப் பூர்த்தி செய்யக்கூடியதும், எதிரிகளின் கையிலிருந்து விடு தலை அடைந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளத் துணை செய்யக் கூடியதுமேயாம் என்பேன். இனித் தேவைகளைக் கவனிப்போம். நமது இளைஞர்களிடத்தில் உற்சாகமும், ஊக்கமும் விளங்கு

நீ எவ்வளவுதான் அறிந்திருந்த போதிலும், இன்னும் நீ அறியாதவை எவ்வளவோ இருக்குமென்று நீ அறிந்துகொள்.

கின்றன. அவர்களது விருப்பத்தை முகங்கள் தெரிவிக்கின்றன.
உண்மையாகச் சொல்லின் நாளும் பரிசுத்த இந்தியர்களாக நமது
சிறுர்கள் வாழவேண்டும். நல்ல இந்தியர்களுக்குரிய தகுதிபாட்டை
அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். இம் முறையில் பழகு
வோர்க்குத் தேவைகள் தாமே புலனும். தாய், தந்தை, ஆசிரியன்
இம் மூவரையும் உள்ளன்புடன் கொண்டாடுவதில் எல்லாம் அடங்
கிக் கிடக்கின்றது. மனம், மொழி, மெய் இம் மூன்றுலும் சுத்தர்க
ளாகப் பழகவேண்டும். சுயேச்சைப் புத்தியுடன் இருப்பதோடு
பெரியார்களிடம் மரியாதையாகவும் அடக்கமாகவும் இருத்தல் வேண்
டும். பொருளாளராக வேண்டும் என்று முயலுவதைவிட நல்லவர்
களாகவும், சுக சரீரமுள்ளவர்களாகவும் இருக்கப் பாடுபடவேண்டும்.
ஆண்மையற்ற கோழைகளாகவோ, அடிமைகளாகவோ இராமல் அஞ்
சாமை மிக்கவர்களாகவும், உறுதியுள்ள பலவான்களாகவும் இருத்தல்
வேண்டும். தங்களது பாம்பரைப் பெருமையை மேலும் மேலும்
பெருக்க முயல்பவரா யிருத்தல்வேண்டும். தேசத்தின் உயர் நிலையை
எண்ணுபவர்களா யிருத்தல் வேண்டும். தங்களது புராதன—மேலான
நாகரீகத்தைப் பின்பற்றி உபயோகமுள்ளவர்களாக மாறல் வேண்டும்.
பொருளிலும் சமூகம், நாடு, மக்கள் இவற்றையே மேலாகக் கருது
தல் வேண்டும். தன்னல மறுப்பாகிய தியாக புத்தி வளரவேண்டும்.
இத்தகைய நோக்கங்களுடன் கற்பிக்கப்படுவதே தேசீயக் கல்வி
யாம்."

"பாரதி"ப் பத்திரிகையும்,
நமது வெளியீடுகளான புஸ்தகங்களும் மலேயா நாடுகளில்
கீழ் குறிப்பிட்டுள்ளவர்களிடம் கிடைக்கும்.

Messrs. T. Subramanyam & Co.,
7, Batu Road,
KUALA LUMPUR, F. M. S.

The Manager, "India Novel Depot,"
71, Serangoon Road,
SINGAPORE, S. S.

எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்களையே உடைத்தா யிரு; உயர்ந்த
விஷயங்களையே பேசு; சாதாரண ஜனங்களுடன் சகவாசம் செய்.

OFFICE OF THE REGISTRAR
27 JUN 1934
MADRAS

புஸ்தக இன்பம்.*

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

"பரந்ததோர் கானகத்திலே மரச்செறிவிலே கஞ்சிக் கலயமும், மொந்தைக் கள்ளும், கவி நிறைந்த நூலும், (காதலியாகிய) நீ என்னருகே இருந்து பாடும் இனிய கானமும் இன்பமயமன்றே?" எனக் கவி உமார்காயம் கூறியுள்ளார். இங்கு நாம் கஞ்சிக் கலயத்தையும், மொந்தைக் கள்ளையும் விட்டு விட்டு, கவி நிறைந்த நூலைப் பற்றி ஆராய்வோம்.

நூல்கள் நிறைந்த ஓர் நூல் நிலயத்தில் நாம் நுழைந்தால், உலகக் கவலைகளை யெல்லாம் மறந்து, மனதுக்குகந்த ஓர் புதிய உலகத்தில் புகுந்ததாக நாம் உணர்வோம். சில வேளைகளில் சதா உழன்றுகொண்டிருக்கும் இவ் வுலகு சலிப்பைத் தருகின்றது. ஜனங்களது வெறும் பேச்சும், வீண் பேச்சும், சண்டை சச்சரவுகளும் வெறுப்பை உண்டாக்குகின்றன. ஆகலால் அறிஞர்கள் நூல் உலகிற்குச் சென்று, நுண்ணிய பொருட்களை ஆராய்ந்து இன்பம் நுகர்கிருர்கள்.

நூலைப்பற்றி மான்டெயின் என்னும் பெரியார் "எனது முதிர்ந்த வயதிலும் அது எனக்கு இன்பமளிக்கிறது. சோம்பேறித்தனத்தால் உண்டாகும் மனப்பாரத்தை நீக்குகிறது. நான் விரும்பாத நண்பர்களினின்றும் நீங்கி யிருக்க அது உதவி செய்கிறது. எனது வாழ்க்கையின் பிரயாணத்தில் எனக்கு இதமளிக்கும் கட்டுச்சோறுதும் இவ் வின்ப நூல்" என்று புகழ்கின்றுர். அனடோல் பிரான்ஸ் என்ற பிரன்ச் நாட்டு நூலறிஞர் "நூல் என்பது ஒரு மாய சூஸ்திரமாகும். அதிலிருந்து அநேக உருவங்கள், அநேக தோற்றங்கள், அநேக யுகங்கள், அநேக எண்ணங்கள், சிந்தனைகள் யாவும் தோன்றி மனத்தை கலைத்து, இதயத்தைப் பண்படுத்தும். நூல் என்பது சென்ற கால உலகிற்கும் ஏனைய சிறந்த உலகங்களுக்கும் நம்மைத் தூக்கிச் செல்லும் ஓர் மாயக் கருவி" என்று கூறுகிறுர்.

---

* சிட்னி டார்க் என்ற அறிஞர் எழுதியிருப்பதைத் தழுவி எழுதப்பெற்றது.

உட்சோதி

தெய்வீகமளிக்கும் நூல் நிலையத்திலே நாம் புகுந்ததும் நம்மிடமுள்ள கீழ்மையான நிலையற்ற அற்பமான குணங்கள் யாவும் மறைகின்றன. நித்தியமான, அற்புதமான, மற்ற சிறந்த குணங்கள் பரிணமித்து வளர ஆரம்பிக்கின்றன. ஒவ்வொரு மனிதனது இதயத்திலும் தெய்வத் திருவொளி திகழ்கின்றது. அவ்வொளியைக் காணாதபடியே அவன் வாழ்ந்தாலும் மாண்டாலும் அவ்வொளி மனிதன் இதயத்தில் புதைந்தே இருக்கின்றது. நமது உண்மை நிலையை அறியும் நண்பர்களை நாம் நூல் நிலையத்தில் நட்புக் கொள்கிறோம். டாக்டர் ஹரி ராபர்ட்ஸ் சொன்னபடி நூல் நிலையம் மனித உலகிற்கு அளிக்கும் நன்மை யாதெனில், அது நாட்டு அறிஞர்களின் வாழ்க்கையையும் சிந்தனைகளையும் நாட்டுச் சாதாரண ஜனங்களது அன்றன்று நடைபெறும் வாழ்க்கை, அன்றன்று நடைபெறும் வேலைகள், அவர்களது எண்ணங்கள், செய்கைகள் முதலிய இவைகளையும் சம்பந்தப்படுத்துகிறது.

பயனுள்ள நூல்கள்

நல்ல இதமான வாழ்க்கை நடத்துவதற்கு நமது சொந்த அறிவும், அறிவுடையோர் போதனைகளும் அவசியமாகும். நாம் அறிவை வளர்ப்பதற்கு நாம் நூல்கள் பல கற்க வேண்டும்; அறிவாளிகள் போதனைகளைக் கேட்க வேண்டும். இவ் வழியில் பெறும் அறிவால்தான் நம் அனுபவம் முதிர்ச்சி யடையும். நம் எண்ணங்கள் பெருமிதமுறும். வீணான விஷயங்களில் காலத்தைச் செலவழிப்பது போலவே, நூல் நிலையத்திலும் எத்தனையோ மணி நேரங்களைக் கழிக்கலாம். அதிலும் ஆயிரக் கணக்கான நூல்கள் உள்ள இடத்தில் இன்ன நூலைத்தான் படிப்பது என்று தெரிந்தெடுப்பது கஷ்டமாகும். படிப்பவர்கள் புஸ்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

எல்லா மனிதரும் எல்லா நூல்களையும் படித்துவிட முடியாது. குறிப்பிட்ட பல நூல்களிலிருந்து தான் மனிதன் தனக்கு வேண்டிய மன உணவு அருந்த முடியும். மனோநிலைக்குப் பொருத்த

ஒவ்வொரு நாட்டிலும் சிறுபான்மையோரே நிலம், நாணயம், முதலை உடையவர்கள்; ஆனால் பெருந் திரளான பாமரர்களுக்கோ அவர் கைகளைத் தவிர வேறு கதியில்லை. ஆகையால் அச் செல்வவான்களுக்கு ஊழியம் செய்ய வற்புறுத்தப்படுகிறார்கள். தங்கள் ஜீவனத்திற்காக எந்தச் சம்பளத்திற்காவது நாள் முழுவதும் உற்சாகமற்ற ஒரே தொழில் செய்யும்படி நேரிடுகின்றது.

மான நூல்கள் அவன் மனதைக் கிளர்ச்சியுறச் செய்கிறது. "நாம் படிக்க விரும்பும் புஸ்தகமே நாம் படிக்க வேண்டிய புஸ்தகம்" என்று ஸ்டீவன்ஸன் எழுதுகிறார். தோரு என்னும் பெரியார் "முதலாவது சிறந்த நூல்களைப் பயில வேண்டும். இல்லையெனில் அவைகளைப் படிக்க உனக்குச் சந்தர்ப்பம் வாய்க்காது" என்கிறார்.

ஆகையால் எவை எவை நல்ல நூல்கள் என்று தீர்மானிப்பது அவசியம். அதற்கு நூலாராய்ச்சியில் அனுபவசாலிகளாயுள்ள அறிஞர்களது அபிப்பிராயத்தைக் கொள்ளவேண்டும். உண்மைக்கு உறைவிடமாயுள்ள நூல் நிலையமாகிய அரண்மனையில் தங்க ஒருவன் ஆசை கொண்டானானால், அவன் அறிவுத் துறையில் இறங்கி உழைக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். சில சமயம் இது அவனுக்கு மிகக் கடினமாக இருக்கலாம். அறிவின் மீது ஆவல் அதிகமிருந்தால், அதன் முடிவை அவன் இலகுவாக அடைவான்.

சில ஜனங்கள் ஓய்ந்த நேரங்களில் கிடைத்த ஏதாவது ஒரு நூலை எடுத்துப் படிக்கின்றனர். இவர்கள் அதிக அறிவு வளர்க்கக் கூடிய நூல் எது என்பதைக் கருதாது பொழுது போக்கிற்காகக் கையில் வந்த நூல்களைப் படிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். "மனதிற்கு இதம் மட்டும் கொடுக்கும் நூல்கள் மனிதனது மனதைப் பூரிக்கச் செய்து, உன்னதமான திடுக்கிடச் செய்யும் புதிய புதிய சிந்தனைகளைக் கொண்டுள்ள நூல்களே சிறந்த நூல்களாகும். சோம்பேறியால் அவைகளைப் படிக்க முடியாது. பயங்கொள்ளி அவைகளைக் கண்டு அஞ்சுவான்" என்று தோரு சொல்லுகிறார்.

நூல் நிலையத்திலிருந்து நூலாராய்ச்சி செய்யப் புகுவோன் சுறுசுறுப்பு, தைரியம், துணிவு இவைகளை உடையவனாயிருக்க வேண்டும். புதையலை எடுக்க விரும்புகிறவன் படுகிற பாடு நூலாராய்ச்சி செய்பவனும் பட நேரிடும். அநேக தடவைகளில் ஏமாற்றமடையலாம். ஆனால் விடா முயற்சியுடன் வேலை செய்ய வேண்டும். ஜார்ஜ் சாந்தாயனா என்னும் பெரியார் "உலகில் நடைபெறும் சம்பவங்களை உண்மை வழியாகத் தெரிவிப்பது இலக்கியத்தின் பண்பாகும்" என்று வரைகிறார். எவ்வளவோ சம்பவங்களுக்கிடையில் நாம் வாழ்கின்றோம். ஆனால் அவைகளின் உண்மை

வாலிபா! உன் நெஞ்சிலே புது ஊக்கம் கொள். சலியாது முயற்சி செய். நீ சிந்தித்தது உன் நாளில் ஓர் காலத்தில் சித்தித்துவிடுமென்று நம்பு. தீரம் வகி. ஊக்கமுள்ளவனாயிரு. நீ ஒரு பெரிய ஜனத் தலைவனாக வரக்கூடாதா? ஒரு பெரிய சிறந்த கர்த்தாவாக விளங்க முடியாதா? கீர்த்தி பெற்ற உத்தியோக புருஷனாகக் கூடாதா? ஒரு பிரஸித்தி பெற்ற பத்திராதிபராக நீ ஏன் தயாராக முடியாது? ஒரு பெரிய ராஜதந்திரியாகக் கூடாதா?

நிகழ்ச்சிகளை நாம் அறியாதிருக்கிறோம். நாம் வாழ்க்கையில் அறிந்த அனுபவங்களை எல்லாம் பெரிய நூல்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இவ்வித நூல்கள் நமது வாழ்க்கையின் உண்மைகளைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றன. அவைகள் நமக்கு விசால புத்தியையும் தெளிந்த அறிவையும் தருகின்றன. மனிதர்களது குணங்களை நன்று அறியும் திறமையையும் நியாய அநியாயங்களைப் பகுத்தறியும் வன்மையையும் அவர்களாலேயே நாம் பெறுகிறோம். எக்காலத்துமுள்ள பெரியார்களது உயரிய சிந்தனைகளையும் அவர்களது அரிய அனுபவங்களையும் நமக்குத் தெரிவிக்கின்றன. "கடந்த காலங்களுடன் எங்களை ஒன்றுபடுத்தும் திருமொழியே! இவ்வுலகை நீத்த பெரியோர்களுடன் பேசும் பாக்கியம் நின்னாலேயே கிடைத்தது. உனது வன்மையாலேயே நாங்கள் உணரும் உணர்ச்சிகளையும் எங்களுக்கு நேரிடும் சம்பவங்களையும் எங்களது சந்ததிகள் அறிய முடியும்" என்று கருத்துக்கொண்ட கவியொன்று இருக்கிறது.

திருப்தி அளிப்பது எது?

நவீன நாகரிகத்தின் பயனாக நமக்குக் கிடைத்த கிராமபோன், மோட்டார், ஆகாசத் தந்தி முதலிய வசதி தரும் கருவிகள் இருந்தபோதிலும், நமது மூதாதைகளைவிட நாம் வாழும் வாழ்க்கை தாழ்வானதே. வருஷம் முழுவதும் ஒரே வேலையைச் செய்கிறோம். ஒரேவிதமான மனிதர்களைச் சந்திக்கிறோம். ஒரே இடத்தில் இருக்கிறோம். உபயோகித்தவைகளையே திரும்பத் திரும்ப உபயோகிக்கிறோம். நவீன ஆராய்ச்சி முறைகளெல்லாம் நமக்குக் குதூகலமளிக்கலாம். ஆனால் அவைகள் யாவும் மாயக் கருவிகளே. நான் முன் சொன்னபடி நூல் நிலையம் உண்மைக்கு உறைவிடமான அரண்மனையாகும். மனிதன் தன்னைத் தானே அடிக்கடி சந்திக்கிறான். இங்கு கவிகளிடமிருந்தும், கலைஞர்களிடமிருந்தும் யுகம் யுகமாக மனிதவர்க்கம் கண்ட கனவையும் கொண்ட துயரையும், வாழ்ந்த வாழ்வையும் அதன் ஜெயாபஜெயங்களையும் தெரிந்துகொள்கிறான். கீர்த்திக்கு முன்னதாக ஒருவன் வாழ்க்கையில் அடையவேண்டிய கவலைகளையும் வாழ்க்கைப் போரில் மனிதன் எவ்வளவு துணிவுடன் இருக்க வேண்டுமென்பதையும் அறிகிறான். இன்னும் ஏனைய நாட்டினர் அவர்களது நாகரீகம், அவர்களது கலை, மதம் யாவையும் அவன் அறிவதால், அவன் மனம் அதிக விரிவடைகிறது.

நமது பாமர சகோதரர்கள் கஷ்டம் அனுபவிக்குங்கால் நாம் மௌனமாக இருப்பது நியாயமா?

என் பொன் அண்ணா.

திரு. M. வேலுச்சாமி அவர்கள், B. A.,

மதுரையில் குறுகிய சந்தொன்றில் ஓர் இரண்டடுக்கு வீடு. அதன் மாடியில் ஒரு குடும்பத்தாரும் கீழ் வீட்டில் ஓர் குடும்பத்தாரும் குடிக்கூலிக்கு வசித்தனர். மாடியில் வசித்தவர்கள் கீழிருப்பவர்களோடு பேசுவதே தங்களுக்குக் கௌரவக் குறைவு என்று எண்ணினார்கள். சந்தித்தாலும் முகத்தைத் திருப்பிக்கொள்வார்கள்.

அவனுக்கு ஆவல் அதிகரிக்க அதிகரிக்க நூலின் மேல் பெரியதோர் தாகம் உண்டாகிறது. சர். ஆர்தர் கானன்டாயில் என்பவர் தனது "மாயக் கதவு வழியே" என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிறார்:— உனது புஸ்தக நிலையம் எவ்வளவு சிறிதாக இருந்தபோதிலும் சரி, அதைப்பற்றி உனக்கு அக்கரையில்லை. அறைக்குள் நுழைந்து தாளிட்டுக்கொள். கதவை அடைக்கும் பொழுதே உலகக் கவலை, விசாரங்களையெல்லாம் வெளியே பறக்க விட்டுவிடு. மாண்டு சென்ற அறிஞர்களது இனிய கூட்டத்திற்குள் செல். கவலை, துன்பம், துயரம் முதலியவைகள் நுழையாத இன்ப உலகிலே நீ இருப்பவனைக் காண்பாய். வெளியில் இதுவரை உன்னுடன் இருந்த கேவல மனிதர்கள் மறைந்து விடுவார்கள். சாந்தமும் அறிவும் குடிகொண்ட மூதறிஞர்கள் உனக்காக அங்கு காத்துக்கொண்டிருப்பார்கள். அங்கு அடுக்கியிருக்கும் அவர்களது நூல்களிலே உன் கண்ணைச் செலுத்து. நீ விரும்பும் மனிதனைத் தேர்ந்தெடு. அம்மனிதனது நூலைக் கையில் எடுத்ததும், அது உன்னைச் சொற்பன உலகிற்குக் கொண்டுபோய்விடும்.

நாம் விரும்பிய அறிஞருடன் புதிய புதிய உலகங்களுக்குச் செல்லலாம். இதுதான் புஸ்தகசாலை நமக்களிக்கும் பேறு. இது தைரியமுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் தனித்தனி அளிக்கும் பேறாகும்.

பலத்தைக் கண்டு அஞ்சாதேயுங்கள்.

கீழ் வீட்டில் இரண்டு சிறு அறைகளும், அவைகளுக்கும் சிறியதான சமையல் அறை ஒன்றும் உண்டு. அச் சிறு மடைப்பள்ளியில் ஒரு மாது பார்லி (Barley)க் கஞ்சி வைத்துக்கொண்டிருக்கிறாள். பக்கத்தில் ஒரு தட்டில் கறி காய்களும் இன்னும் கொஞ்ச தூரத்தில் ஒரு பாத்திரத்தில் அரிசியும் இருக்கின்றன.

படுக்கை யறையிலிருந்து ஒரு தீனக்குரல் "அம்மா! இன்னிக்கி வரமாட்டியோ? எனக்கு என்னமாப் பசிக்கிறது தெரியுமா?" என்றது. "இதோ முடிந்தது; இரண்டு நிமிஷம் பொறடாப்பா" என்று கனிந்து மொழிந்தாள் அம்மாது. பின்னவள் வருந்தித் தனக்குள் "என் கண்மணிக்கு ஒரு காண்டியளேவனும் பால் வாங்கிக் கொடுக்கச் சக்தியில்லாதவளாயிருக்கிறேன். இந்தப் பார்லி (Barley)த் தெளிவைக் குடித்து என் குழந்தை என்று தெளிவான்? ஐயோ! ஈசா! என் தரித்திரம் என் குழந்தைகட்குமா?" என்று அங்கலாய்த்தாள். இதற்குள் ஒரு பெண் "அம்மா! அம்பி அழறான்; பசிக்கிறதாம். எனக்கும் பசிக்கிறதம்மா; ஏதாவது கொடு" என்று கூறிக்கொண்டு அறைக்குள் வந்தாள். அப் பெண்ணிற்குப் பத்து வயதிருக்கும். "முத்து! (அப் பெண்ணின் பெயர்) இதில் கொஞ்சம் நனைத்த அவல் இருக்கிறது. இதை நீ தின்னு; அப்பாவிற்கு இந்த அடைகளிருக்கட்டும்" என்று கூறி, அவல் வைத்திருந்த அலுமினியத் தட்டைக் கொடுத்தாள். முத்து உடனே அதை வாங்கி அவலைத் தின்ன ஆரம்பித்தாள். அவ் வீட்டில் தாய், பெண், ஏன், நோய்வாய்ப்பட்ட அச் சிறுவனுங்கூட 'அப்பாவிற்குப் போகத்தான் நமக்கு' என்று எண்ணினார்கள். இதற்கு அவர்கள் ஒருநாளும் முணுமுணுத்தது கிடையாது. சில சமயங்களில் 'கிட்டு' அழுவான். ஆனால் முத்துவோ சற்று பெரியவளானபடியால், தன் அன்னையின் துயரறிந்து வாடிய வதனத்துடன் வாளாயிருப்பாள். சுசிமுஹி (அம்மாதின் பெயர்)யோ இராப் பகலாய் 'மாடாய்' உழைத்தாள். பாயும் படுக்கையுமாயிருந்த 'கிட்டுவின் சில்லறைத் தொந்திரவுகளுக்கெல்லாம்' ஈடுகொடுத்தாள். கணவன் கடுமொழிகளையெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொள்வாள். சில சமயங்களில் அவளது பொறுமை அணை கடந்து ஓரிரண்டு வார்த்தைகள் பதிலுக்குக் கூறிவிடுவதுமுண்டு.

நாம் செய்கிற தொண்டில் உற்சாகமற்றுப் போகும்படி சோதனைகள் அடிக்கடி வரலாம். கைமாறு கருதாமல் பொதுஜன சேவைக்காக உழைப்பவர்கள் அந்த ஜனங்களின் அறியாமையால் அல்லது நன்றியற்ற தன்மையால் அதைரியப்பட நேரிடலாம். நாம் எவருக்கென்று உழைக்கிறோமோ அவர்களே நமக்கு விரோதிகளாய்த் திரும்பிவிடலாம். மற்றவர் நம்மை அவதூறு செய்யலாம். நமது முயற்சியில் கிறிது அபஜெயம் ஏற்படலாம். இப்படிப்பட்ட சமயங்களில் நாம் விடா முயற்சியாய் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் கொண்டு செய்ய வேண்டும்.

சுசிமுஹி அடுப்பிலிருந்த பார்லியை இறக்கி மற்றொரு பாத்திரத்தில் அதன் தெளிவை யூற்றினாள். "கொஞ்சம் சர்க்கரை யெடு முத்து! அந்தத் தட்டில் ஒரு எலிமிச்சம் பழமிருக்கிறதா பார்?" என்றாள்.

"எப்படியம்மா இருக்கும்? நேற்று வைத்த பாதியைக் காலையிலே எடுத்தாச்சே" என்றாள் முத்து.

தாய் பெருமூச்சு விட்டு, பார்லிக் கஞ்சியுடன் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து, அதை எடுத்துக்கொண்டு "முத்து, நான் கிட்டுவிற்குக் கஞ்சி கொடுக்கிறேன். நீ சாதத்திற்கு உலை வை. அப்பா வருவார்" என்றெழுந்து கிட்டுவிடஞ் சென்றாள். முத்து வாய் நிறைய அவலிருந்ததால் சரியென்று தலையசைத்தாள். முத்து சிறு பெண்ணாயினும் தன் தாய்க்கு அதிக உதவியாக இருந்தாள். இல்லாது போனால் சுசிக்குக் கிட்டுவின் அழுகையைச் சாந்தப்படுத்தவே பொழுது சரியாயிருந்திருக்கும்.

"இத்தனாழி கழிச்சு வரியே நேக்கு ஒண்ணும் வேண்டாம் போ" என்று வெடுவெடுப்பாய்க் கூறினான் கிட்டு.

சுசி "எப்பவும் இத்தனாழிக்குத்தானே கிட்டு சாப்பிடுவாய். எழுந்திரம்மா! என் கண்ணல்லவா! இன்னும் அப்பாகூட வரல்லியே" என்று கனிவாய்க் கூறினாள்.

கிட்டு எழுந்து உட்கார்ந்துகொண்டே "அம்மா! அப்பா இன்னிக்கிப் பிஸ்கோத்து வாங்கீண்டு வராட்டப் பாரு. நித்யம் நாளைக்கு நாளைக்கின்றார். இன்னிக்கு என்ன சொன்னாலுங் கேக்கமாட்டேன்." சுசி ஒன்றும் பதிலுரையாது அறையைப் பெருக்க ஆரம்பித்தாள். இரண்டு அறைகளும் அந்த வாழ்வோரின் செல்வத்தை விளக்கின. அறை மத்தியில் ஒரு கட்டில் கிடந்தது. இரண்டு 'காலண்டர்'களும் ஒரு கண்ணாடியும் சுவரை யலங்கரித்தன. படுக்கை விரிப்பு முதலிய யாவும் ஒரு காலத்தில் புதிதாய்த்தானிருந்திருக்கும். சுசி ஒரு

தேசாபிமானம், பாஷாபிமானம், பத்திரிகாபிமானம் முதலிய நற்குணங்கள் நமக்குண்டாக வேண்டும். பிறர் செய்யட்டுமென்று பார்த்துக் கொண்டிருப்பதும், பிறர்க்கு வரும் பத்திரிகைகளைப் படித்துவிட்டுக் காலங் கழிப்பதும் ஒழுங்கன்று. ஒற்றுமைப்படுவதிலும் பிரிவினைப்படுவதிலேயே நாம் கண்ணாயிருக்கிறோம். ஹரிஜனங்களாகிய நமது சகோதரர்களைத் தீண்டாதவர்கள் என்று நாம் ஒதுக்கிவிட்டு மலம் உண்ணும் நாய்களை நமது மடியின் மீது உட்காருவித்து நாம் கொஞ்சுகிறோம். இவைகளை நாம் ஏனோ கவனிக்கிறதில்லை?

காகிதத்தில் பெருக்கிய குப்பையைச் சுருட்டி வெளியில் எறிந்து விட்டுச் சமையலறைக்குட் சென்றாள். முத்து உலை வைத்துவிட்டு அரிசியை அரித்துக்கொண் டிருந்தாள்.

"நான் இனிப் பார்த்துக்கொள்கிறேன்; நீ கிட்டுவண்டை போ முத்து" என்றாள் தாய். சமையலறைக் குள்ளிருந்து பார்த்தால், மாடிக்குப் போகும் படிகள் தெரியும். ஒரு வாலிபன் அப் படிகள் வழியாக மேலே போய்க்கொண் டிருந்தான். பின்னலொருவன் ஒரு பெட்டியைச் சுமந்துகொண்டு சென்றான். "பாரம்மா அவர் மிட்டாய் விற்க மறுபடியும் வந்திருக்கிறார்" என்றாள் முத்து. "ஏனம்மா இவர் இப்படிச் செய்யவேண்டும்? எங்காவது ஆபீஸில் வேலை பார்க்கக் கூடாதா?" என்றாள் சிறுமி.

"அவர் செய்வதுதான் சரி. இப்போ எங்கே வேலை கிடைக்கிறது? ஒரு வேலை கிடைக்குமுன் 'அப்ளிகேஷன்' (மனு) எழுத ஒரு கட்டுக் காகிதமும், இரண்டொரு புட்டி இங்கியும், அரை டஜன் பேனுக்களும் வேண்டும். ஆபீஸ்களுக்கு ஓயாமல் நடக்க உறுதியான கால்கள் வேண்டும். துரைகளுக்குச் சலாம் போடச் சலியாத கைகள் வேண்டும். இதற்கெல்லா முதலில் 'அப்ளிக்கேஷனை'க் கிழித்தெறியாமல் தயை செய்வதற்குத் தலைமைக் குமஸ்தாவிற்கு ஒரு நோட்டாவது கொடுக்கவேண்டும். படித்துக் கெட்ட கண்ணிற்குக் கண்ணாடி போட வகையின்றித் திண்டாடும் ஏழை வாலிபர்கள் இதற்கெல்லாம் எங்கு போவார்கள்? மானங்கெட்டு வாழ்வதிலும் இது மரியாதையான தொழில்" என்று கூறினாள் சுசி. முத்துவிற்கு இதெல்லாம் விளங்கிற்றோ என்னவோ?

அந்த வாலிபன் சிறிது தாமதித்தான். "அம்மா! உங்களுக்கு மிட்டாய் வேண்டுமா? என்னிடம் பல வகைகள் இருக்கின்றன" என்று வணக்கமா யுரைத்தான். முத்து தன் தாய் மிட்டாய் வாங்கியதை என்றுங் கண்டிலள். சுசி வேண்டாமென்று தலையசைத்தாள். வாலிபன் மாடிக்குச் சென்றான். முத்து தன் தப்பியிடம் ஓடினாள்.

அதே சமயம் முத்துவின் பிதாவான சுந்தரேசர் வீட்டுள் பிரவேசித்தார். "கொஞ்சம் தண்ணீர் கொடு. வெளியில் ஒருவர் நிற்கிறார்" என்று சமையலறைமுன் நின்றுகொண்டு கேட்டார்.

சுசி தண்ணீர் கொடுக்கும்போதே "யார் நிற்பது வெளியில், யாராவது கடன்காரர்களோ?" என்றாள்.

நமது சமூகக் குறைகளோ அநேகம். அவைகளைச் சீர்திருத்துவதற்கு நமக்கு தைரியம் வருவது எக்காலமோ? பால்ய விதவைகளை வதைக்கிறோம். தன் மனைவியை அநியாயமாக நடத்தும் ஒருவனைப் பார்த்து ஏனென்று கேட்க வாயற்றிருக்கிறோம்.

"கடன்காரனில்லாமல் உன் பெரியண்ணுவா நம் வீட்டு வாசலில் வந்து நிற்பான்? ஏதாவது வாங்கினுயா?" என்றார்.

"எப்படி வாங்குவேன்? இரண்டு அடைகள் வைத்திருக்கிறேன்" என்றாள் சுசி.

"இருக்கட்டும், அந்த மனுஷனை அனுப்பிவிட்டு வருகிறேன்" என்று அந்தக் கண்ணாடி டம்ளரை எடுத்துக்கொண்டு வெளியிற் சென்றார். சுசி தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள். கிட்டு அலட்டும், முத்து சாந்தப்படுத்தும் சத்தமும் அவள் காதில் விழுந்தன. அரை மணிக்குப் பின் சுந்தரேசர் திரும்பி வீட்டுள் வந்தார். 'எங்கே அந்த அடைகள்? பசிதான் என்னை இதையெல்லாந் தின்னும்படி தூண்டுகிறது. இதையும் மனிதன் தின்பானு?' என்று கூறி, சுசியின் முகத்தைப் பார்த்தார். சுசி பதிலுரையாது ஒரு மணை எடுத்துப் போட்டுப் பக்கத்தில் ஒரு கிளாஸில் தண்ணீர் கொண்டு வந்து வைத்தாள். சுந்தரேசர் அடைகளைப் புசிக்க ஆரம்பித்தார். அதற்குள் கிட்டு படுக்கையில் கிடந்தபடியே "உங்களுக்கு வேண்டியதெல்லாங் கிடைக்கிறது எனக்குப் பார்லித் தண்ணிதான் கிடைக்கிறது. எனக்கு நித்யம் நாளைக்குத்தான் பிஸ்கோத்து வருகிறது!" என்றான். சுந்தரேசர் மனங்கசிந்து சிரித்தார். "இவர்களெல்லாம் நான் ஹல்வாவும் குலேப்ஜானும் தின்னுகிறேன் என்று நினைக்கிறார்கள். கொஞ்சமும் கவலையில்லாத மடையர்கள்" என்று சினந்து கூறினார். அறியாக் குழந்தைகளைப்பற்றி அவர் கூறியது சுசிக்குப் பிடிக்கவில்லை. "குழந்தைகள்தானே; அவர்களுக்கு என்ன தெரியும்? பாவம் முத்து பத்து நாள் பட்டினியானாலும், வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்லமாட்டாள். கிட்டு பாயும் படுக்கையுமா யிருப்பதால், என்னமோ சிடுசிடுவென்று ஏதாவது சொல்வான்" என்று சாந்தமாய்க் கூறினாள்.

"எங்கள் குடும்பத்தில் இப்படி நலிந்த பிள்ளைகள் பிறந்ததே கிடையாது. எல்லாஞ் சுகஜீவிகள். அப்பா! இந்தக் குழந்தைகளைப் பார்; சுகமாயிருந்த நாள் ஒரு நாளில்லை."

சுசிக்கு இது பொறுக்க முடியவில்லை. "இருக்கட்டும்! இருக்கட்டும்! இந்த சுகஜீவிகள் குடும்பத்தில் நான் வந்து என் வீட்டு நோயெல்லாம் என் பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டேன். நம் பிள்

உன் நெஞ்சிலே புதிய ஊக்கம் பிரவேசித்து ஓடுமாகில், எதுதான் உனக்குக் கஷ்டமானது எதுதான் உனக்குச் சித்திக்காது? உன்னில் தெய்வ கதியாய்த் தோன்றிய புதிய ஊக்கம் உனக்குப் புதிய உயிரைக் கொடுக்கும். நவசக்தியை உண்டுபண்ணும். உலகத்தையே உனக்கு வசப்படுத்திவிடும்.

லைகளிடமிருக்கிற 'நல்ல'தெல்லாம் உங்கள் குடும்பத்திலிருந்து வந்தவை. 'கெட்ட'தெல்லாம் நான் கொண்டு வந்ததையானாலும், என்னைத் தவிர யாரும் உங்கள் வீட்டில் வந்து இப்படி நாயாய் உழைக்கவில்லையென்று சற்று கடுகடுத்துக் கூறினாள்.

சுந்தரேசர் அடைகளைத் தின்றுவிட்டுத் தண்ணீர் கிளாஸைக் கையில் எடுத்துக்கொண்டு 'சண்டைக்குக் கச்சை கட்டிவிட்டாய்' என்றார். சுசி பேசவில்லை. இதற்குப் பதில் வந்தால், பின் முடிவில்லை. இருக்கிற துயரமும் இணக்கமின்மையும் போதும்! சுந்தரேசர் எழுந்து சமையலறையை விட்டு வெளியில் வந்தார். சுசி படுக்கையறையுள் நின்றாள். புருடர்கள் குற்றங் கண்டுபிடிக்க ஆரம்பித்தால் அதற்கோர் எல்லை வைப்பதில்லை.

"இந்த அறைகளையாவது கொஞ்சம் சுத்தமாய் வைத்திருக்கக் கூடாதா? என்ன கெட்டக்கேடு! இது மனித ஜன்மம் வாழுமிடமா, பன்றிக் குழியா?" என்றார்.

"சுத்தப்பண்ண எனக்குச் சக்தியுமில்லை; சுத்தம்பண்ணுவதற்கு இந்த இடமும் தகுதியற்றது" என்றாள்.

"எதற்குத்தான் உனக்குச் சக்தி இருக்கிறது? இன்னொருவன் மாடாய் உழைக்கிறான் என்பதை நீ கடுகளவேனும் நினைக்கிறாயா? எனக்குக்கூடச் சக்தியில்லை என்று வேலையை விட்டுவிட்டு வீட்டில் வந்து குந்திக்கொள்ளலாமாவென்றிருக்கிறது."

"மஹாராஜராய் விட்டுவிடுங்கள்" என்று கூறி எழுந்தாள் சுசி. அதற்குள் அவள் கணவர் "போறு, நான் சொன்னபடி உன் சிற்றப்பாவிற்கு எழுதினாயா?"

"இல்லை" என்றாள்.

"ஏன்?" என்று கோபமாய் வினவினார். "புருடன் சொல் கேட்பது கூடாதென்றோ" சுசி மனதில் படபடவென்று பல எழுந்தாலும் அடக்கிக்கொண்டு "என்னிடம் கார்டும் இல்லை, கவரும் இல்லை. எப்படி எழுதுவேன்? நான் போகிறேன். அடுப்பிலிருப்பதைக் கவனிக்க வேண்டும்" என்றாள்.

புதிய ஊக்கம் பெறு. எப்பொழுதும் ஊக்கமுள்ளவனாக இரு. ஒரு அரசனாக இருக்க வேண்டுமென்று சிந்தனை கொள்ளாவிடினும், அதற்கடுத்த படியில் உன்னை யேன் வைத்துக்கொள்ளக் கூடாது? கிடைத்தற்கரிய மானிட சரீரத்தை நீ பெற்றுவிட்டதற்குப் பிறகு, உன்னால் எந்தக் காரியம் தான் ஆகாது? எதுதான் நடவாது? முயற்சியுள்ளவனுக்கு எதுதான் சித்திக்காது? புதிய ஊக்கம் உள்ளத்திலே ததும்பப் பெற்றவனுக்குப் புது நிலைகள் புதிய பதவிகள் உண்டாவதும் ஒரு புதுமையா?

"முத்துவை 'ஹரிக்கேன்' லாந்தரைக் கொண்டுவரச் சொல். இருட்டாய் விட்டது."

சுசி சமையலறைக்குட் சென்று விளக்கேற்றி முத்துவிடம் கொடுத்தனுப்பினாள்.

ஏழைகள் வாழ்வில் மாற்றமேது? ஏமாற்றந்தான். குழந்தைகள் சில சமயம் சுகமாயிருக்கும். சில சமயங்கள் சுகவீனமாயிருக்கும். சமயாசமயங்களில் தரித்திரம் காரணமாய்ப் புருடன்—மனைவி சச்சரவுகளுண்டாகும். இவைகள்தான். விமோசனமோ சமீபத்திலிருப்பதாக நம்ப இடமில்லை. [ஏன் 'இல்லை' என்று கூறிவிடலாகாதோ என்பீர்கள். நம்பிக்கையே வாழ்வின் பிரதானம். நம்பிக்கை போனால் பிராணன் போய்விடும். தூக்கில் தொங்கு மட்டும் கைதி எங்கிருந்தோ விடுதலை வருமென்றுதான் உயிரோடிருக்கிறான். உயிருள்ளவரை 'விடுதலை' நம்பிக்கையுண்டு. நம்பிக்கை போய்விட்டால்.........!] மகிழ்வென்பது வறியோர்க்கு முயற்கொம்பு. 'எங்காவது சென்று ஒரு நாள் சந்தோஷமாய்க் கழிப்போம்' என்னும் எண்ணங்கூட அவர்கள் கனவிலும் வர இடமில்லை. அவர்கள் உறவு பாராட்ட ஒரு வீட்டிற்கும் போவதுமில்லை. எந்த உறவினரும் அவர்கள் வீட்டிற்கும் வருவதுமில்லை.

முத்துமாத்திரம் வாரத்தில் இரண்டொரு தடவை அடுத்த வீட்டிற் புதிதாய் வந்திருக்கும் நாட்டுப் பெண்ணிடம் போய்ச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து வருவாள். அப் பெண் முத்துவை அடிக்கடி காண விரும்பினும், அவர்கள் வீட்டுப் பாட்டி வைவார்கள் என்ற பயத்தால் முத்து போவதில்லை.

மறுநாள் வழக்கம்போல் சுந்தரேசர் ஆபீஸிற்குப் போகப் புறப்பட்டார். "இதோ பார்! சுசி, உன்னிடம் ஒன்று கூறவேண்டும். உன்னிடம் ஏதாவது சொல்வதே கஷ்டமாயிருக்கிறது. பேச ஆரம்பித்தால், வெடுக்கென்று கண்ணைப் பிடுங்கி விடுகிறாய். எனக்கு இப்பொழுது வெகு நெருக்கடியான நிலைமை. என் வேலைகூடப் போனாலும் போய்விடும்" என்று பீடிகை போட்டார் சுந்தரேசர். இந்த ஆரம்பமே சுசியைப் பிரமாதமாகப் பயமுறுத்தியது. அவர்கள் ஏற்

புதிய ஊக்கம் திடீரென்று பிறக்கும்—உதிக்கும். உடனே அதை நீ கைப்பற்றிக்கொள். ஏதோ ஒரு காரியத்தில் நீ யோசனையாயிருக்கும் பொழுது, திடீரென்று வேறொரு நூதன யோசனை உனக்குத் தென்பட்டு, என்றும் காணாத ஒரு புதிய ஊக்கத்தை உன்னிலே தோற்றுவிக்கும். உடனே நீ புதிய மனிதனாகிவிடுவாய். அந்த நிமிஷ முதல் நீ புதிய உருவமே. புதிய ஊக்கத்தின் ஜோதியே யாவாய். அன்று முதல் உன் வாழ்வுக்கு ஒரு நற்காலமே.

கெனவே தரித்திரா தேவியின் செல்வக் குழந்தைக ளென்பதைக்
கடவுளறிவார். அத்துடன் சுந்தரேசர் வேலையும் போய்விட்டால்
பின்னர் இரண்டே படிதான்—பசி! மரணம்!! 'அது என்ன' என்று
நடுக்கத்துடன் கேட்டாள் சுசி. "சென்ற சித்திரையில் கிட்டுவிற்கு
வெகு அபாயமா யிருக்கும்பொழுது, ஒரு மார்வாடி (மார்வாரி)யிடம்
முன்னூறு ரூபாய் வாங்கினோமல்லவா? அதற்கு இதுவரையில்
வட்டிகூடச் செலுத்தவில்லை. இப்பொழுது வட்டியும் முதலுமாக
நானூறு ரூபாய் கொடுக்கவேண்டும். அவன் 'இனித் தாமதிக்க முடி
யாது; கோர்ட்டில் போடுவேன்' என்கிறான். கோர்ட்டிற்குப் போனால்
நிச்சயமாக 'டிக்ரி' ஆய்விடும். என் மேலுத்தியோகஸ்தனோ மிகவும்
கண்டிப்புக்காரன். போன வருஷம் இதே காரணத்தினால்தான் விஸ்
வேஸ்வரரை 'டிஸ்மிஸ்' செய்தான். என்னைமாத்திரம் சும்மா விட்டு
விடுவான் என்று எண்ண ஏதுவில்லை."

சுசிக்குக் கண்ணீர் பெருகிற்று. "ஆ! கடவுளே, இதுவென்ன
சங்கடம்! இனி என்ன செய்வோம்! என் வீட்டிலுள்ள பொருள்க
ளெல்லாம் வைத்தாலும் ஒரு நூறு ரூபாய்கள் வராதே. என்னிடம்
என் அன்னை முத்துவிற்குச் செய்து போட்ட சிறிய சங்கிலிதா னிருக்
கிறது. அது அறுபது ரூபாய்கள் பெறும். அதிகமானால் எழுபது
பெறும். அது எதற்காகும்?" என்று ஏங்கினாள்.

"அதைக் கொடுத்தால் ஒரு மாதம் பேசாதிருப்பான். பின்
மறுபடியுங் கேட்பான். மாதா மாதம் இவ்வளவு கட்டிவிடுகிறேன்
என்றால் அதற்கு ஒருவேளை சம்மதிப்பான். ஆனால் அப்படிச் செய்
வதற்கு வழியில்லை. வேறு வகையில்லாததால் நீதான் உன் அண்ணா
விற்கு எழுதவேண்டும். இதோ இருக்கிறார் சொக்கிகுளத்தில்."

இதைக் கேட்டதும் சுசியின் முகம் இன்னும் வாடியது. "அவர்
கள் நம்மை யொருநாளும் கவனித்ததேயில்லை. இப்பொழுது எப்படி
அவரைக் கேட்பது?" என்று மெதுவாக ஆரம்பித்தாள் சுசி. இதற்
குள் சுந்தரேசருக்குக் கோபம் வந்துவிட்டது. "பிச்சைக்காரர்க
ளுக்கு இதெல்லாம் ஆகாது. என் வேலை போனபின் உனக்கு இந்தப்
பெருமை எத்தனை நாளைக்கு? பிறகு தெருத் தெருவாய்ப் பிச்சை
எடுக்கவேண்டும். சித்திரைத் திருவிழா வருகிறது. அவரை இங்கு
வந்துபோகும்படி வேண்டிக்கொள். சந்தர்ப்பம் பார்த்து மெதுவாக
நமது நிலையைக் கூறு. அவர் நல்லவர். கட்டாயம் உதவி செய்வார்.
உன் 'கர்வம்' அவருக்குப் பிடிக்காது. அண்ணாவிடம் தங்கை ஏற்ப

ஒருவன் மனோவிருத்தி அடைவதற்கு அவனது பொருளாதார நிலை
மாறுதல் அடைய வேண்டியதவசியம்.

தில் இகழ்ச்சி ஒன்றுமில்லை" என்று சற்று கோபமாய் ஆரம்பித்து
இதமாய் முடித்தார்.

"அதற்குள் அண்ணி கூறிய கொடுஞ் சொற்களை மறந்துவிட்டீர்
கள்?" என்றாள் சுசி. "அதை மனதில் வைப்பதில் பயன் என்ன?
வசை ஏழைகளின் ஆஸ்தி. இளைத்தோரை இகழ்தல் உலகில் வெகு
சாதாரணம். இதுவெல்லாம் வீண் பேச்சு. எனக்கு உதவி செய்ய
உனக்கு விருப்பமில்லை. நாமெல்லாம் தெருவில் விடப்படும்பொழுது
என்னைக் குறை சொல்லாதேயம்மா!" என்று கூறிவிட்டுக் கோப
மாய்ப் போய்விட்டார்.

"முத்து, அப்பா அவசரத்தில் குடையை வைத்துவிட்டுப்
போகிறார். இதோ போகிறார் ஓடு" என்று கூறிவிட்டுச் சுசி கிட்டு
விடம் சென்றாள். முத்து குடையை எடுத்துக்கொண்டு ஓடினாள்.

குழந்தைகள் சாப்பிட்டபின் சுசி தானுண்பதை மறந்து மடைப்
பள்ளி வாயிலில் மனநொந் தயர்ந்திருந்தாள். அவள் துன்பத்தையே
ஸ்திரீதனமாகப் பெற்றவள். இத்தனை நாள் அப் பேதையை வருத்
திய விதி இன்னும் பூரண திருப்தி யடையவில்லைபோலும். இவ்வ
ளவுதானோ? இன்னுமுண்டா ஈசா! என்றேங்கினாள் அவ்வேழை.
உண்மையில் சுந்தரேசர்க்கு வேலை போய்விட்டால் சுசியும் அவளது
பரிதாபக் குழந்தைகளும் ஒதுங்க நிழல் இல்லை. எங்கு செல்வர்?
எவர்க் குரைப்பர்? கடைசியாக அவள் கணவன் கூறிய கடுமொழி
சுசியின் மனதை மிகவும் வருத்திற்று. அவளால் உதவி செய்ய
முடியுமென்று அவர் நம்புகிறார். இருப்பினும் சுசி அவ்வாறு செய்ய
இசையாள். அந்தோ அவர்மாத்திரம் சுசியின் மாசற்ற மனதை ஒரு
சிறிது உணர்ந்தாராயின், அப்படிக் கூறியிருக்க மாட்டார். அவள்
கூடுமானால் தன் கணவன் நிலையைக் காக்க கண்ணியமான எதையும்
செய்யத் தயாராயிருந்தாள். செல்வவந்தர்களாய அவர்களது உறவி
னர்கள் உதவி செய்வார்கள் என்பது தெரிந்தால் அவர்கள் காலில்
விழக்கூட அவளது கணவன்பொருட்டுத் துணிந்துதான் இருந்தாள்.
உண்மையில் அவர்களது உறவினர்கள் அறுத்த கைச்குச் சுண்ணாம்பு
உதவா அவ்வளவு இரக்கச் சித்தமுடையவர்கள். இதைச் சுந்தரேசர்
அறியார்.

II

சுசி காலடிச் சத்தங் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். "அந்த"
வாலிபன் மாடிக்குப் போய்க்கொண் டிருந்தான். இன்று அந்த

ஜனங்களின் பொருளாதார நிலை மாறினால் ஒழிய சர்வஜனக் கல்வி
யின் இட்டம் ஒரு நாளும் சாத்தியமாகாது.

வேலைக்காரன் கூட இல்லை. துயரத்தின் பரிதாபப் பாவைபோ லமர்ந்திருந்த சுசியைப் பார்த்த அவ் வாலிபன் தட்டென்று நின்றான். அவன் மாடியிலுள்ளவர்கள் மூலமாய்ச் சுசியின் குடும்ப நிலையை அறிந்திருந்தான். அத்துடன் வறுமையின் கொடுமைகளை அனுபவத்தில் அறிந்தவன. அவன் தன்னையே பார்ப்பதை யறிந்த சுசி சற்று வெறுப்புடன் "எங்களுக்கு மிட்டாய் வேண்டாமையா, ஏன் நிற்கிறீர்?" என்றாள். அந்த யுவன் மறுமொழி சொல்லத் தோன்றாது முறுவலித்தான். பின் "அதற்காக நிற்கவில்லையம்மா. தாங்கள் மிகவும் துயரமடைந்திருப்பதாகத் தெரிகிறது. நான் தங்களுக்கு ஏதேனும் என்னாற் கூடுமான உதவியைச் செய்கிறேன்."

சுசியின் கண்களில் நீர் ததும்பியது. துன்பமும் துயரமும் அவளது நெடுநாள் தோழர்கள். இரக்கம், கிருபை அவளுக்குப் புதிதாயிருந்தது. சுந்தரேசருக்கும் அதிக உழைப்பு. சுசிக்கோ ஓய்வு கிடையாது. ஆகையால் பரஸ்பர அன்போடு ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லி அளவளாவியதில்லை. சுந்தரேசருக்குக் கொஞ்சம் சரீர தத்துவ சாஸ்திரம் தெரியாவிட்டால் சுசிக்கு இருதயம் இருப்பதாக ஒப்புக்கொள்ளவே மாட்டார். சுசிக்கோ அவர்மீது சொல்லக் குறைந்தது ஐந்து வண்டி குறைகளிருந்தன. எனவே அவர்களது பரஸ்பர அன்பு வறுமையால் ஆழப் புதைக்கப்பட்டிருந்தது. ஆறுதல் எதிர்பாராத இடத்திற் றோன்றியது சுசியைத் தடுமாறச் செய்தது. சுசி துயராற் கம்மிய குரலைச் சற்று திருத்திக் கொண்டு, "ஈசனே எங்களுக்கு உதவி செய்ய முடியுமையா! மனிதரால் எங்களுக்கு என்ன செய்ய முடியும்?" என்று கூறினாள்.

அந்த வாலிபன் கீழிறங்கிச் சமீபத்தில் வந்தான். "தாயே! யான் அன்னியன்; நீங்களும் எனக்கு அன்னியர். ஆயினும் தங்கள் முகத்தில் பிரதிபலிக்கும் தரித்திரத்தின் சாயை என் மனதில் பழைய நிலைமையைத் திரும்பக் கொண்டுவருகிறது. ஒருசமயம் நான் தற்கொலை செய்துகொள்ளவும் துணிந்தேன்! கடவுளே என்னைக் கைவிட்டார் என்று எண்ணும்படியாயிருந்தது என்னிலைமை. ஆயினும் அன்னையே! இதோ நான் உயிருடன் உங்கள் முன் நிற்கிறேன். அம்மா! இன்னும் நம்பிக்கை இருக்கிறது. அவன்மீது நம்பிக்கை மாத்திரம் போய்விடக் கூடாது" என்று பணிவாய்க் கூறினான்.

"ஆயினும் ஐயா, எங்கள் கஷ்டத்தினின்றும் நீங்க எனக்கு வழி தோன்றவில்லை. என் கணவருக்கு 35 ரூபாய் சம்பளம். அது

தொழிலாளிகளின் விடுதலையுடன் பெண்களின் விடுதலையும் இணைக்க வேண்டும்.

தினம் இரண்டொரு வேளை உணவிற்கும், இக் கந்தல்களுக்கும், இந்தப் பாழ்பட்ட உறைவிடத்தின் குடிக்கூலிக்கும் போதவில்லை. இந்த வாழ்விற்கும் இப்பொழுது ஆபத்து வந்திருக்கிறது. கடன் தொல்லையால் என் கணவன் உத்தியோகமே போய்விடும்போ லிருக்கிறது. இனி எங்கள் கதி யென்னவாகும்?" எனச் சுசி வருந்தினாள்.

"மாதத்திற்கு ஒரு சிறு தொகையாகக் கடனைக் கழித்துவிடக் கூடாதா, அம்மா? எந்தக் கடன்காரரும் இதற்குச் சம்மதிப்பார்களே" என்று அந்த வாலிபன் சாந்தமாக வினவினான்

"எங்கள் அளவிட்ட வரும்படியாகிய 35-ற்குள் எவ்வளவு மீதி வைக்க முடியும் அய்யா? மதுரையில் மூச்சு விடுவதற்குக்கூடத் துட்டு. நாங்கள் நான்கு பேர். எங்கள் பையன் நோயாளி" என்று சுசி அந்த வாலிபன் அன்னியன் என்பதைக்கூட மறந்து, தன் துயரை மனம் விட்டுக் கூறினாள். நமது துயரை உண்மையாகவே உணரும் ஒரு ஆள் அகப்பட்டால், அவனிடம் நமது மனப் பெட்டகத்தடங்கிய மட்டில்லாத துயரை வாரிக் கொட்டுகிறோம். அதனால் ஆறுதல் அடைகிறோம்.

"நீங்கள் உங்களது வரும்படியை ஏன் அதிகப்படுத்திக்கொள்ளக்கூடாது? நீங்களும் ஏதாவது சம்பாதிக்கலாமே?"

"நான் எவ்வாறு சம்பாதிப்பது? பரம வைதீகர்களாய என் தாய் தந்தையர் என்னைப் பள்ளிக்கு வைக்கவில்லை. நன்றாக எழுத்தறியாத யான் எப்படி உபாத்தியாயினி ஆக முடியும்? மேலும் எனக்கு நேரமே கிடையாது. அத்துடன் சிறையிலிருப்பதுபோ லிருக்கிறேன் இந்தக் 'கைநிமிர்ந்த' பெண்ணும், பாய் நீங்காப் பையனும் இருக்கின்றனர். ஒரு நிமிடமும் இவர்களை விட்டுப் பிரிய வழியில்லை. அவ் விடைஞ்சல்களில்லாதுபோனால் சமையற்காரியாகவோ பணிப் பெண்ணாகவோ கூட உழைக்க எனக்குச் சம்மதந்தான்."

"வருமானத்திற்குப் பல வழிகளிருக்கின்றன அம்மா. அவைகளையெல்லாங் கூறுவதற்கு எனக்கு நேரமில்லை. நீங்கள் அனுமதி தந்தால் நான் மறுபடியும் நாளைக்கு வருகிறேன். உங்களுக்கு உதவி செய்ய முடியுமென்று நம்புகிறேன் அம்மா" என்று கூறி அவ் வாலிபன் சென்றான்.

தெய்வீகக் காதலிலே வெற்றி பெறு. எவ்விதத்தும் முனைந்து நில். நீ கோரிய பெண்மணியையே உன் வாழுள் யாத்திரைக்குக் கண்மணியாக்கி, காதலில் வெற்றி கொண்டு களித்திடு.

சுசியின் மனதிலிருந்து ஒரு பெருஞ்சுமை யிறங்கியதுபோ லிருந்தது. அந்த இளைஞன் உதவி செய்வான் என்று சுசி நம்பிவிட வில்லை. இருப்பினும் உலகில் தன் துயரை உணரக்கூடிய மற்றொரு ஆத்மா இருக்கிறதென்பதில் அவளுக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டது.

சுந்தரேசர் ஆபீஸிலிருந்து திரும்பியதும் "சுசி! முத்துவைச் சமையலறைக்குள் அனுப்பிவிட்டு, நீ இங்கே கொஞ்சம் வா" என்றார். கிட்டுவிற்கு இன்று சற்று சௌக்கியம். அவன் எழுந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

"மார்வாரியிடம் ஒரு ஏற்பாடு செய்துகொண்டேன். மாதந்தோறும் 20 ரூபாய் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறான். என் சம்பளத்தி லிருந்து அந்தத் தொகை கொடுக்க முடியாதென்று எனக்கு நிச்சய மாகத் தெரியும். முத்துவின் சங்கிலியை விற்று இந்த மாதத்திய தொகையைக் கட்டிவிடுவோம்."

சுசி அறைக்குட் சென்று, பெட்டியிலிருந்து முத்து குழந்தை யாயிருந்தபொழுது அவளது பாட்டி செய்துபோட்ட சிறு தங்கச் சங்கிலியை எடுத்துக்கொண்டு வந்து தன் கணவன் கரத்திற் கொடுத்து, "இந்தாருங்கள், ஒரு கடைக்கு நாலு கடை பார்த்து வில்லுங்கள். காசுக் கடையில் ஏமாற்றிவிடுவார்கள்" என்றாள்.

சங்கிலியைப் பெற்றுக்கொண்டு சென்ற சுந்தரேசர் இரவில் வெகுநேரங் கழித்துத் திரும்பி வந்தார். குழந்தைகள் உண்டு உறங் கிவிட்டனர். சுசி தன் நாதனுக்காகக் காத்திருந்தாள். சுந்தரேசர் ஆறு பத்து ரூபாய் நோட்டுக்களை சுசியின் மடியில் எறிந்தார். "அவ் வளவுதான்; தங்கம் கொஞ்சம் மாற்றுக் குறை. நாளைக்கு ஐம்பது ரூபாய் கொண்டுபோய்க் கொடுத்துவிடுகிறேன். மீதி பத்து ரூபா யைப் பத்திரமாக வைத்திரு. அது ஒரு முக்கியமான செலவிற்கு வேண்டியதிருக்கும்."

சுசி பெட்டியிற் பணத்தை வைத்துப் பூட்டிவிட்டுப் படுக்கச் சென்றாள்.

மறுநாட் காலை சுந்தரேசர் ஐம்பது ரூபாயுடன் ஆபீஸிற்குச் சென்றார். அன்று நடுப்பகலில் சுசி சமையலறை வாயிலில் அமர்ந்து கிட்டுவின் கிழிந்த சொக்காயைத் தைத்துக்கொண்டிருந்தாள். அந்த வாலிபன் வருவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் குறித்த வேளையில் அவ் விளைஞன் தோன்றினான். அவன் பின் வந்த வேலைக்காரன் பெட்டியுடன் மாடிக்குச் சென்றான். பின்

தியாகம், முயற்சி, அன்பு வழியாயுள்ள யோக்கியதையை நீங்கள் அடைந்தால் ஒழிய உரிமைகளை அடையப் போவதில்லை.

அவன் சுசி இட்ட மணையில் அமர்ந்தான். "அம்மா, என் பெயர் கேசவன். பி.ஏ. (B.A.) பட்டம் பெற்றிருக்கிறேன். ஆயினும் இந்த மிட்டாய் விற்குந் தொழிலை மேற்கொண்டிருப்பது தங்களுக்குத் தெரி யும். இதை கௌரவக் குறைவென்று நான் நினைக்கவில்லை. ஆனால் என் நண்பர்களிற் பெரும்பாலர் என்னைத் தங்கள் தோழன் எனக் கூற வெட்கப்படுகிறார்கள் என்பதை நானறிவேன். இதை விட்டு 30 ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு குமஸ்தாவாகி மாதாமாதம் அவர்களிடம் இரண்டொரு ரூபாய் கடன் கேட்கப் போனாலும், என்னை மதிக்க மாட்டார்கள். ஆகையால் எனக்கு இரண்டும் ஒன்றுதான். நேர்மை யோடு செய்யும் எந்தத் தொழிலாவது கேவலமானதென்று தாங்கள் நினைக்கிறீர்களா?"

"நிச்சயமாயில்லை. இரப்பது இழிவு. தொழிலின்மையால் பட் டினியால் இறப்பதும் இழிவு. உழைப்பில் இகழ்ச்சி ஏது?"

"நல்லது அம்மா, பக்ஷணங்கள் செய்வதற்கு வேண்டிய யாவும் இதோ கொண்டுவந் திருக்கிறேன். உங்களுக்குப் பல வகைகள் செய்யத் தெரியும். எதுவானாலுஞ் சரி. அவைகளை நான் நாளைக் காலையில் வந்து எடுத்துக்கொண்டு செல்கிறேன். அவைகளைப் பக லில் விற்று மாலையில் பணத்தைக் கொண்டு வருகிறேன்."

சுசிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. "நான் பக்ஷணங் களைத் தொட்டுப் பல வருஷங்கள் ஆய்விட்டன. ஆனால் சிறு பெண் ணாயிருக்கும்பொழுது எனக்கிட்ட பெயர் பொருந்தும் என்னும்படி என் பக்ஷணங்கள் சுசீகரமா யிருந்தனவாம். உங்கள் பொருள்களைக் கெடுத்துவிடுவேன் என்றஞ்சுகிறேன்."

"பாதகமில்லை அம்மா. முதல் நாள் அவைகள் நன்றாயில்லா விடில் அதற்காக நீங்கள் அதைரியப்பட வேண்டாம். அவைகளை நான் குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறேன். இன்று நான் அதிகமா யொன்றுங் கொண்டுவரவில்லை. நாள் செல்லச் செல்லக் கை திருந்தி விடும் அம்மா" என்று வணக்கமாய்க் கூறினான் கேசவன். அதற் குள் மாடிக்குச் சென்ற வேலைக்காரன் இறங்கிவந்தான். கேசவன், வேலையாள் கொண்டுவந்த பெட்டியை இறக்கிப் பக்ஷணங்கள் செய்ய வேண்டியவற்றை அளந்து கொடுத்தான். "அம்மா உங்களுக்கு இவற்றைச் செய்வதற்கு நேரமுண்டோ" என்று கேசவன் வினவி னான்.

"மாலையில் எனக்கு ஓய்வுண்டு."

நீங்கள் எந்த தேசத்தில் இருந்தபோதிலும் சரி, உரிமை, சத்தியம், நீதிக்காக போர் புரியும் ஒவ்வொருவரும் உங்கள் சகோதரனே.

கேசவன் போய்விட்டான். சுசி "காத்துட்டாவது சம்பாதிக்க வழியுண்டாயிற்றே! ஈசா நீ அநாதைகளைக் கைவிடுவதில்லை. மனிதருள்ளத்தே நீ அமைத்திருக்கும் 'அன்பு' என்னும் விசித்திர சக்தி நீயே என்பதை அடியாள் அறிந்தேன்! உனக்குத் தோத்திரம்" என்று வணங்கி மகிழ்ந்தாள். தினம் ஒரு ரூபாய் கிடைக்குமானால்.........! முத்துவைத் தனக்கு உதவி செய்யுமாறு அழைத்தாள். முத்து சமையலறைக்குள் நுழைந்ததும் "அம்மா!" என்று வாயைத் திறந்தவள் சிறிது நேரம் மூடவேயில்லை. "இவைகளெல்லாம் ஏதம்மா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"முத்து! ஒருவர் இதைச் செய்து தரும்படி கூறிவிட்டுச் சென்றார். அப்பாவிடம் சொல்லாதே முத்து."

அப்பா பேசினாற் பதிற் சொல்வதைத் தவிரத் தானே பேசும் வழக்கம் முத்துவிடமில்லை. "சரி" என்று தலையசைத்தாள். சுந்தரேசர் ஆபீஸிலிருந்து வருமுன் எல்லாம் முடிந்தது.

"நல்லவேளை கிட்டு வீட்டில் இல்லை. இல்லாவிட்டால் 'ஒன்னாவது கொடம்மா' என்று இறைவான்" என்றாள் சுசி. "அம்மா, கிட்டுவிற்கு ஒன்று கொடுத்தால் அந்த ஆள் கண்டுபிடித்துவிடுவார், இல்லையாம்மா?" என்று கேட்டாள் முத்து.

"இன்னொருவர் பொருளைத் தொடக்கூடாது முத்து" என்று சாந்தமாய்க் கூறினாள் சுசி.

காலையில் கேசவன் வந்து பக்ஷணங்களை எடுத்துக்கொண்டு போனான். போகும்பொழுது "அம்மா நான் 'பலகார சாஸ்திரம்' ஒன்று கொண்டுவருகிறேன். அதில் பக்ஷண முறைகள் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது" என்றான்.

அன்று சுந்தரேசர் சாப்பிட வரும்பொழுது சுசி முகம் மலர்ந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். "என்னடி சமாச்சாரம்? உன் முகத்தின் முறுவல் கண்டு எத்தனை யுகங்களாச்சு. நீ இள முறுவலை மறந்துவிட்டாய் என்றல்லவோ எண்ணினேன்" என்றார்.

"சித்திரைத் திருவிழா வருகிறதல்லவா; அதற்குத்தான் இந்தச் சிரிப்பு."

"அது வந்தால் நமக்கென்ன சுசி? ஏழைக்கேது திருநாள்? என்றும் கண்ட சாதம்தான் அன்றும்; என்றும் கட்டிய கந்தைதான்

கடவுளின் அன்பு விசாலமானது. மனிதன் தன்மட்டான மனதினால் அதை அளக்க முடியாது.

அன்றும். காரியாலயத்தில் ஓரிரண்டு நாள் விடுமுறை கிடைக்கும். அதுவும் நன்மைக்கல்ல. ஆபீஸிலிருந்தாலும் வீட்டுக் கவலையை விட்டு வேலையில் மனதைச் செலுத்தலாம். வீட்டிலிருக்கும்பொழுதெல்லாம் 'ஐயோ என்செய்வோம்?' என்று அங்கலாய்ப்புத்தான். ஈசா! அந்தமானிலோ சைபீரியாவிலோ 'ஜன்ம' தண்டனையடைந்த கைதிகூட 'நாளை என்செய்வோம்' என்ற கவலையில்லாமல் நிம்மதியாய் உண்டு உறங்குகிறான். வறிய குடும்ப வாழ்க்கை அதனினும் கொடிய தண்டனை. இதைக்கூட வெளியிற் சொல்வதற்குப் பயங்கரமாயிருக்கிறது. காருண்ய சர்க்கார் இந்த உண்மையை அறிந்தால் பிரமச்சாரிக் கைதிகளுக்குக் கலியாண விலங்கைப் பூட்டிக் குடும்பச் சிறைக்குட் தள்ளிவிடுவார்கள். ஆப்பிரிக்காவில் 'சூடானி'ன் ஒரு பாகத்தில் யாராவது ஒருவனைத் தண்டிக்க விரும்பினால், காட்டில் ஓரிடத்தில் முளைகளடித்துக் கைகால்களை அசைக்க முடியாதபடி கட்டிவிடுவார்களாம். சில நிமிஷங்களுள் ஆயிரக் கணக்கான கரிய எறும்புகள் அவன் சரீரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்துத் தின்று சில மணி நேரங்களுக்குள் வெள்ளெலும்புகளை மாத்திரம் மீதிவைக்குமாம். உயிருடன் அவ்வாறு உண்ணப்படுவது எவ்வளவு சுகமாயிருக்கும் பார்! அதைவிட இனியது இந்தத் தரித்திரக் குடும்ப வாழ்க்கை. இதை யுணர்ந்துதான் கார்ல் மார்க்ஸ் "இக்காலத்திய உலக வாழ்வில் தரித்திரம், மரண தண்டனைக்கும் கொடியது" என்று கூறினார் போலும். ஏது இன்று இப்படியெல்லாம் பேச ஆரம்பித்துவிட்டேன். வறியோனுக்கு வாயேது. என்னவோ நினைத்தேன். என்னவோ சொல்லுகிறேன். இந்த வருஷம் திருவிழாவிற்கு உன் அண்ணாவை அழைக்கவேண்டியதுதான். அதுவும் ஒரு வியாபாரந்தான் என்று தானாகவே பேசிக்கொண்டார். ஏனெனில் சுசி பக்கத்தில் அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாள். எனினும் அவள் மனம் எங்கெல்லாமோ சென்றது. சுந்தரேசர் கடைசியாகக் கூறியதைக் கேட்ட உடன் சுசி முகத்தைச் சுழித்துக்கொண்டு எழுந்து போய் விட்டாள். அவளது கணவனின் திருவிழா ஏற்பாடு சுசிக்குப் பிடிக்கவில்லை. சுந்தரேசர் தன் (சுசியின்) அண்ணனிடம் ஏதாவது பெறலாம் என்ற நோக்கத்துடன் அண்ணாவைத் திருவிழாவிற்கு அழைக்க எண்ணினார். இப்பொழுதுதான் வாழ்க்கைப் போரில் இடங்கொண்டு போரிட ஆயுதம் ஒன்று கிடைத்திருக்கிறது. சுசி இனி வறுமைக்குப் பணிவதில்லையெனத் துணிந்துவிட்டாள்.

III

அன்று மாலை விளக்கேற்றுவதற்குச் சற்று முன் கேசவன் வந்தான். "இன்று இவ்வளவுதானம்மா" என்று ஒரு ரூபாய்

துதியினாலோ தோல்வியினாலோ கடமையினின்றும் நாம் தளரக் கூடாது.

பன்னிரண்டணாவைக் கையிற் கொடுத்தான். "நீங்கள் மனந்தளர வேண்டாம். இன்னும் அதிகமாக விற்கும். இதோ இது மீதம். குழந்தைகளுக்குக் கொடுங்கள்" என்றான்.

சுசி அசைவற்று நின்றாள். தினம் இரண்டு ரூபாய் சம்பாதிக்க முடியும்! நெஞ்சில் ஈரமில்லாத அந்த மார்வாடி! அக் கடன்காரன் தொல்லை இனி இல்லை. ஆ! என்ன நன்றியில்லாதவளா யிருக்கிறேன். இதோ வானதூதன்போல் நிற்கிறானே கேசவன்! ஒருக்கால் தஞ்சம் என்று கூவிய யானையரசிற்கு அஞ்சேல் என்று அபயமளித்த ஆதிகேசவன் தானோ இவன்! என்று மனத்தினுள் சொல்லிக்கொண்டாள். இவனுக்கு நான் என்ன கைமாறு செய்வேன்? என்று நன்றிபொலிந்த முகத்தோடு கேசவனைப் பார்த்தாள்.

கேசவன் சுசியின் எண்ணத்தை யறிந்தான். அம்மா! நீங்கள் என்க்கு நன்றி செலுத்தவேண்டிய அவசியமில்லை. நான் என் கடமையைச் செய்தேன். என்னைக் கடைத்தேற்றிய புண்ணிய புருடர் ஒருவருக்கு என்னைப்போல் வருந்துபவர்களாகிய பத்துப் பேர்களுக்கு வாழ்க்கைத் துறை காட்டுவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். அதனையே நான் நிறைவேற்றினேன். மேலும் வழக்கமாய் எனக்குச் சேரவேண்டிய லாபத்தையும் இதனின்றும் எடுத்துக்கொண்டேன். தாங்களும் தயவுசெய்து நம்போன்றவர்கட்கு உதவி செய்ய வேண்டும் அம்மா. திக்கற்றவர்கட்குச் செய்யும் சேவையே தெய்வ சேவை! என்று கேசவன் கூறினான்.

அன்று கிட்டுவிற்கும் முத்துவிற்கும் தீபாவளிதான் (புத்தாடைகள் தான் பாக்கி). இவைகள் ஒன்றும் சுந்தரேசர் அறியார்.

நாட்கள் சென்றன. தினமும் சுசிக்கு இத்தகைய வருமானம் கிடைத்தது. அதையெல்லாம் சுசி ஒரு பையிற் கட்டித் தன் பெட்டிக்குள் மறைத்து வைத்தாள். அதிலிருந்து ஒரு பைசாவேனுந் தொடவில்லை.

சித்திரைத் திருவிழா நெருங்கியது. அயலகத்துச் சிறுவர் சிறுமிகளெல்லாம் புதுச் சொக்காய் பாவாடைகளைப் பற்றித்தான் பேசினர். கிட்டு 'அம்மா நேக்கு சொக்காயே இல்லே. சுந்து இன்னிக்கே கோடிச் சட்டே போட்டிட்டிருக்கான்.' முத்துகூட ஒரு பாவாடையுந் தாவணியும் எடுக்க வேண்டினாள். ஊரில் உள்ள குழந்தைகளெல்லாம் புதிய உடையணிந்து மகிழ, தன் பிள்ளைகள்

அன்பில் வெற்று பெறு. அன்பு மயமாய் நில். அன்புருவாக ஆகிவிடுவாய். அன்பே சிவம்; சிவமே அன்பு. அன்பே பிரதானம். அதுவே வெகுமானம். உன் ஜீவிய காலம் அதன் வழியில் செல்லட்டும். அதுவே உன் வாழ்நாளில் பெறவேண்டிய வெற்றி.

பாத்திரம் கந்தை கட்டிக்கொண்டிருக்கவா என்றெண்ணினாள் சுசி. மெதுவாக "முத்து சங்கிலி விற்றதில் பத்து ரூபாய் மீதியிருக்கிறதே அதைக் கொண்டு குழந்தைகளுக்கு ஏதாவது வாங்கக் கூடாதா" என்று தன் கணவனைக் கேட்டாள்.

"போடி பைத்தியக்காரி! நான் அந்த பத்து ரூபாயை எதற்கு வைத்திருக்கிறேன். உன் பிள்ளைகளுக்கு கோடி வஸ்திரமில்லாவிட்டால் திருவிழா நின்றுவிடுமோ?" என்று கடுகடுப்பாய் கூறினார்.

சுசி தன் பணத்திலிருந்து குழந்தைகளுக்கு ஏதாவது தைக்கலாமா வென்று யோசித்தாள். ஆயினும் அது கூடாது என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டாள். "அடுத்த வருஷம்! இந்த வருஷம் வேண்டாம்" கேசவன் தினமும் காலை மாலை வந்து போய்க்கொண்டிருந்தான். "அம்மா பக்ஷணம் செய்வதோடு இன்னும் ஏதாவது செய்யலாம். தங்களுக்குத் தையல் வேலை தெரியுமா?" என்று வினவினான்.

சுசி "அவ்வளவு நன்றாய் தெரியாது. நான் தைத்ததை வாங்குபவர்கள் இருக்க மாட்டார்கள்"

கேசவன் "எதையும் விற்கலாம் அம்மா. எதை எங்கே எப்படி விற்கிறதென்று மட்டும் தெரிய வேண்டும். இங்கு எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களும் சட்டை போடத்தான் செய்கிறார்கள். தையற்காரனுக்கு கூலி கொடுக்க முடியுமா அம்மா? குறைந்த விலைப் பொருள்கள் தான் அதிகமாக விற்கும். உங்களுக்குக் கைக்குட்டைகள் தைக்கத் தெரிந்தாலும் போதும். கையினால் தைக்கப்பட்ட கைத்துண்டுகளுக்குத் தேவை யதிகம்."

சுசி "எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு யார் அதற்கு வேண்டியவற்றை வாங்கித் தருவது? நான் என் கணவரிடம் எதையுஞ் சொல்வதில்லை"

கேசவன் "அம்மா என்னால் அவைகளை வாங்கித் தரமுடியும். ஆனால் என் கையில் இப்பொழுது பணமில்லை. சித்திரைத் திருவிழாச் சமயத்தில் விற்பதற்காகக் கையிலிருந்த பணத்திற் கெல்லாம் சரக்குகள் வாங்கிவிட்டேன்."

ஒருவரிடம் மனம் வைத்து, நெஞ்சம் கலந்து பழகிய பிறகு, எத்தனை மனஸ்தாபங்கள் வரினும் எவ்வளவு கஷ்ட நஷ்டம் உறினும் பிரிவினைக்கு ஆளாகாது, பின்னும் அந்த நட்பை இழுத்து இழுத்துப் பிடித்து அதில் வெற்றி கொள். நட்பையும் அறிமுகத்தையும் பகுத்தறிந்து வெற்றி கொள்.

சுசி "மார்வாடி கடன் திரும்வரை தன் பணத்தில் ஒரு பைசாவும் தொடுவதில்லை என்று பிரதிக்ஞை செய்துகொண்டிருந்தாள். சிறிது நேரம் யோசித்துப் பின் உள்ளே சென்று ஒரு பத்து ரூபாய் நோட்டை (சுந்தரேசர் கொடுத்து வைத்தது)க் கொண்டுவந்து கேசவனிடம் தந்தாள். "குழந்தைகளுக்குக் குப்பாயங்களும் (Froches) சொக்காய்களும் தைப்பதற்கு ஏற்ற அச்சடித் துணிகளாவது சீட்டித் துணிகளாவது வாங்கி வந்தால் நல்லது.

கேசவன் மறு நாள் துணி வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தான். சுசி மிகவும் கவனமாக அவைகளைத் தைத்தாள். துணியில் அழுக்குப்படாதபடி சுத்தமாக வைத்துக்கொண்டாள் "அழகர் ஆற்றில் இறங்குவதற்கு இரண்டு நாளைக்கு முன் அவைகளையெல்லாம் தைத்து முடித்தாள். அத்துடன் முத்துவிற்கொரு சட்டையும், கிட்டுவிற்கொரு சொக்காயும் தைத்துக்கொண்டாள்.

கிட்டுவிற்கும் முத்துவிற்கும் ஆநந்தம் அளவிட முடியாது. கேசவன் அவைகளை ஒரு நம்பிக்கையான வியாபாரியிடம் விற்கக் கொடுத்தான்.

"அம்மா! இனி நீங்கள் மறுபடியும் பக்ஷணங்கள் செய்ய வேண்டும். இப்பொழுது அதிகமாக விற்கும்" என்றாள். சுசியின் சட்டைகள் நல்ல இலாபத்திற்கு விற்றன. மார்வாடிக்குக் கட்டவேண்டிய தவணைப் பணத்திற்கு அதிகமாகவே இப்பொழுது பெட்டியிலிருக்கிறது.

IV

சுந்தரேசர் "இன்றிரவு மைசூர் மகாராஜா திருவிழா, நான் ஒரு குதிரை வண்டி அமர்த்திக்கொண்டு வருகிறேன். நீ முத்துவையும் கிட்டுவையும் அழைத்துக்கொண்டு சொக்கிகுளத்திற்கு போய் உன் அண்ணாவை விருந்திற்கு அழைத்துவிட்டு வா. வேண்டிய சாமான்களை நான் தயார் செய்கிறேன். போவாயா மாட்டாயா?" என்றார்.

என்ன சொல்வாள் சுசி? "சரி, போகிறேன்" என்று சொல்லவேண்டியதாயிற்று. சுசியின் அண்ணா நல்ல(?) தனவந்தர். சொக்கிகுளத்தில் ஒரு விசாலமான மாளிகையில் (பங்களா) வசித்து வந்தார். சுசி வண்டியிலிருந்திறங்கியதும் குழந்தைகளை இறக்கிக் கூட்டிக்கொண்டு உள்ளே பிரவேசித்தாள். நிசப்தமாயிருந்தது.

கோபத்தின் மீதே வெற்றி கொள். அக் கோபம் உன் மீது வெற்றி கொள்ள விடாதே. வெளிக்குக் கோபாக்னி ஜ்வலிக்கட்டும். உள்ளுக்கோ அக் கோபத்துடன் எவ்வித பற்றுதலு மற்றவனாய் குளிர்ந்த மனதோடு இரு.

மாடியிலிருப்பார்கள் என்று மாடிப் படிகளின் வழியாக ஏறினாள். அதற்குள் "யாரது?" என்று உறுமிக்கொண்டு வேலைக்காரி சுப்பம்மாள் வந்தாள். "ஓ! அம்மாவா? எஜமான் வீட்டிலில்லை" என்று மிடுக்காய் சொன்னாள்.

சுசி முஹிந்து இந்த உபசார வார்த்தைகளைக் கேட்டவுடன் என்ன செய்வதென்று தோன்றவில்லை. "அண்ணி இரு......ப்......பா......ர்......க......?" தூங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்றாள் வேலைக்காரி. சுசியின் காலடியிலிருந்த படிகள் சுழல்வது போல்த் தோன்றின.

"கீழே இறங்கம்மா. வண்டி இன்னும் அங்கு நிற்கிறது" என்றாள் முத்து. "அத்தையாம்மா! இது கருமண்டம் போலிருக்காளே?" என்றாள் கிட்டு. சுசி பேசாது இறங்கி வெளியே வந்துவிட்டாள். அவள் வீட்டிற்கு வந்து நெடுநேரம் வரையிலும் பூமி சுழல்வதாகவே யெண்ணினாள். பின் நெட்டுயிர்த்து நிம்மதியாயிருந்தாள்.

"போனாயா?"

"ஆம்?"

சுசி சமையலறையில் 'தடபுடலாய்' வேலை செய்கிறாள். சுந்தரேசர் "ஏதடி பத்து ரூபாயையும் தீர்த்துவிட்டாயா? என்ன ராஜ விருந்தா?" என்று சமையலறைக்குள் எட்டிப் பார்த்துக்கொண்டே கூறினார்.

"பொன்னண்ணாவிற்கு விருந்தென்றால் சாமான்யமா?" என்று கண் சிமிட்டினாள்.

"ஓஹோ! சாலாக்ஷி பாட்டியிடம் கைமாற்று வாங்கினாயாக்கும்? சரி கொடுத்து விடலாம். அந்த நோட்டை எடுத்துக் கொண்டு வா. உன் அண்ணாவிற்கு ஒரு அங்கவஸ்திரம் எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்றார். சுசி மௌனமாய் நோட்டை எடுத்து நீட்டினாள். சுந்தரேசர் கடைக்குச் சென்றார்.

விளக்கேற்றியாயிற்று. சுந்தரேசர் விரைவாய் வீட்டிற்குள் வந்தார். சமையலறைக்குட் சென்று "உங்களண்ணா வந்துவிட்

உனக்குப் பிறர் இழைக்கும் கெடுதிக்கு நல்லதே செய்து அவர்களை நாண வைத்து, அன்னோரையும் நல்வழிப்படுத்தி, அவ் வகையில் நீ வெற்றி கொள். தீமைக்குத் தீமை செய்வது மிருக குணம். நன்மைக்கு நன்மை செய்வது மனித குணம். தீமைக்கு நன்மை செய்வது தேவ குணம்.

டாரா? என்று ஆத்திரத்தோடு கேட்டார். சுசி இன்னும் சமைய லறைக்குள் வேலையாயிருந்தாள். "வந்துவிட்டார்; அதோ அறைக் குள் இருக்கிறார்" என்றாள்.

சுந்தரேசர் ஒரு தாண்டாய்த் தாண்டி அறைக்குட் சென்றார். பணக்கார அத்தானைப் பார்க்க வேண்டாமா? அங்கிருந்த விருந்தின ரைப் பார்த்ததும் சுந்தரேசர் திகைத்துப் போனார். விருந்தினர் மிட்டாய்க் கேசவன் என்று சொல்லவும் வேண்டுமா? கேசவன் எழுந்திருந்து நமஸ்காரம் செய்தான். "நான் இங்கிருப்பதாக அக்காள் சொல்லவில்லையா?" என்று சாந்தமாய்க் கேட்டான். வனெனில் திருட்டுப் பிரயாணி 'டிக்கட்' பரிசோதகரைக் கண்டு விழிப்பது போல் விழித்தார் சுந்தரேசர்.

சுந்தரேசர் புன்முறுவல் செய்ய முயன்றார். (அது கொஞ்சம் கஷ்டந்தான். அதிக நாள் கண்ணாடி முன் அப்பியாசம் வேண்டும். இல்லாவிட்டால் புன்சிரிப்பிற்குப் பதில் அழுகைதான் வரும். அகத்தின் கண்ணாடியன்றோ முகம்?) ஹெக்ஹெ! மறந்துவிட்டாள் போலிருக்கிறது. அதற்கென்ன உட்காருங்கள்" கூளறினார்.

சமையலறைக்கு வாயு வேகமாய் வந்தார்.

"இந்த ஆளை யேன் அழைத்தாய்? உங்கண்ணா எங்கே?" யென்று கோபத்தோடு ஆனால் மெதுவாகக் கேட்டார்.

"அண்ணா அவர் பங்களாவில் குஷாலாய் இருப்பார். இவர் தான் என் போன் அண்ணா. "நீ பிச்சை யெடு" என்று யோசனை சொல்பவன் உடற் பிறப்பாயினும் பகைவனே."

"என்னடி என்னமோ உளறுகிறாய்!" என்று எரிந்து விழுந் தார் சுந்தரேசர்.

"நான் உளரவில்லை யென்பது சீக்கிரம் தெரிந்துவிடும். உள்ளே போய் அவரிடம் பேசிக்கொண்டிருங்கள். நான் இதோ இலைகளை எடுத்துக்கொண்டு வருகிறேன்."

சுந்தரேசர் ஒன்றுந் தோன்றாது கேசவனிடம் சென்றார்.

உன் சத்துருக்களை அலட்சியம் செய். வாயைத் திறவாதே. உன் மௌனத்தாலேயே அவர்களை அடக்கிவிடு. சேவையான பார்வையில் அவர் களை நோக்கு. ஒரு சிறு துரும்பு போல் அவர்களை மதி. வலிய அவர்கள் வரினும் லட்சியம் செய்யாதே. அவர்களைக் காலின் கீழ் மிதித்து, அடக்கி யாண்டு, வெற்றிச் சிங்கம் எனப் பெயர் எடு.

சமீபகால நிகழ்ச்சிகள்.

"சர்தார்."

மார்ச்சு மாதந்தோறும் நம் நாட்டிலுள்ள சட்டசபைகளெல்லாம் தங்கள் எல்லைக்குட்பட்ட வரவு செலவு திட்டத்தை வாதித்தல் மேனாட் டாரிடமிருந்து நாம் கைக்கொண்டுள்ள ஓர் வழக் கம். தற்கால நிலைமையில் அது நம் நாட்டுச் சாரமற்ற சம்பிரதா யங்களில் ஒன்றா யிருக்கிறதேயொழியப் பலனுள்ளதாய்க் காணோம்.

சென்னைச் சட்டசபையும் அச் சடங்கை இவ் வருடத்திற்கு நிறைவேற்றிவிட்டது. இவ் வாண்டின் சடங்கில் குறிப்பிடத்தக்க சம்பவம் நிலவரி வஜாவைப் பற்றியது. சட்ட வரம்பிற் குட்பட்ட எல்லா முறைகளையும் கையாண்டு நிலவரி வஜா வற்புறுத்தப் பெற் றது. இந்திய விவசாயி எப்போதுமே வறுமையின் உருவம். சென்ற சில வருடங்களாக விலை வாசிகள் வெகுவாக வீழ்ந்துவிட்ட தாலும், கால மழையின்மை, புயற்காற்று முதலியவற்றாலும் விவ சாயிகளின் துன்பங்கள் பெருகிவிட்டன. பயிர் செய்து தங்கள் வயிற்றைக் கழுவவேண்டி யிருப்பவர்களுக்கெல்லாம் அன்ன விசா ரமே பெரிய விசாரமாகிவிட்டது. நிலத்தின் வருவாய் நிலவரிக் குக்கூடப் போதவில்லை. வயிற்றுக்கு உணவு எங்கிருந்து வரும்? நாடோடியாய்த் திரியும் குருவிக்காரக் கூட்டத்தாரைக் கண்டு நடுத் தர அந்தஸ்துள்ளவர்களும் பெருமூச்செறியும் காலம் கிட்டிவிட்ட தென்றால் அது மிகையாகாது. ஏதோ மானத்திற்கஞ்சி இன்னும் தேசாந்திரியாகப் போகாமல் இருக்கிறார்கள். எத்தனை நாளுக்குத் தான் இந்தக் கஷ்டம்?

அஞ்சு ஏக்கர் வைத்திருப்பவன் முதல் ஆயிரம் வேலி வைத் திருப்பவன்வரை இந்தத் துன்பந்தான். எனவே மகாநாடுகள்,

---

உன் குழந்தைகளை வெற்றிக்கனிகளாக்கு. அவர்களை எவ்வெவ் வழி யில் முன்னுக்குக் கொண்டுவர ஆதியில் நினைத்தனையோ அந்த எண்ணத் தைக் கடைசிவரையும் நிறைவேற்றிவிடு. சோர்ந்து விடாதே. அந்த வெற்றி உனது அந்தியகாலத்தில் அதிக நிம்மதியை—திருப்தியைக் கொடுக் கும்.

நம் நாட்டில் தோல் பதனிடும் தொழிலை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பதனிடாத தோல் ஏற்றுமதியின் மேல் சில வருஷங்களாக, வரி நிர்ணயக் கமிட்டியின் சிபார்சின்படி வரி விதித்திருந்தனர். அதையும் இப்பொழுது நீக்கிவிடத் தீர்மானித்துள்ளனர். ஏற்றுமதி வரி நீக்கப்பட்டால் நம் நாட்டிலிருந்து பதனிடாத தோல் அதிகமாகப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகும். இங்கு பதனிடும் தொழில் க்ஷீணிக்கும். இதெல்லாம் சர்க்காருக்குத் தெரியாதென்று சொல்வதற்கில்லை. நம் நன்மையை அவர்கள் பிரதானமாகக் கருதவில்லையென்றுதான கூறவேண்டும்.

சென்ற சில மாதங்களாய் வெளிநாட்டு அரிசி, கப்பல் கப்பலாய் இங்கு கொண்டுவந்து குவிக்கப்படுகிறது. இவ் வரிசி இறக்குமதியின் பயனாய்த் தேசத்தில் அரிசியின் விலை வீழ்ந்து, விவசாயம் வெகுவாய்ப் பாதிக்கப்பட்டுள்ளது. அதையும் காருண்ய சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. சர்க்காரோ சாவதானமாக யோசனை செய்துகொண்டும், அவ் வந்நிய நாட்டுச் சர்க்கார்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்திவருவதாய்ச் சொல்லிக்கொண்டு மிருக்கிறார்கள். 'செட்டியார் சிங்காரிப்பதற்குள் பட்டணம் பறிபோகும்'போல் இருக்கிறது.

ஜப்பான், இந்தோ-சைனா, பர்மா, சயாம் முதலிய நாடுகள் நம் உணவிற்கு அரிசி சப்ளை செய்யக் கருணைகூர்ந்துள்ளன. உடைக்கு இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகள் துணி அனுப்பக் காத்திருக்கின்றன. ஆம்! இன்னும் என்ன என்ன வேண்டுமோ அதையெல்லாம் நம்மைச் சும்மா உட்கார வைத்துவிட்டுப் பிறநாடுகள் செய்து கொடுக்கத் தயாரா யிருக்கின்றன. சர்க்காரும் நம் உடம்பு நோவதைப் பார்க்கச் சகியாதவர்களாய் நம் நாட்டுப் பொருள்களின் உற்பத்தியில் பாராமுகமாய் இருக்கின்றனர். எத்தனை நாளைக்குத்தான் இப்படியே போய்க்கொண் டிருக்க முடியும்? எல்லாத் தொழிலையும் வெளிநாட்டாருக்கு விட்டுவிட்டால், அவர்களிட மிருந்து நமக்குத் தேவையான பொருளை வாங்கக் காசு எங்கிருந்து வரும்?

இச் சமீபகால நிகழ்ச்சிகளி னின்றாகிலும் நமக்குப் புத்தி வரவேண்டும். 'கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பது நமக்குப் பயன்படாது. மனிதன் தான் விரும்புகிற எதையும் அடைவதில்லை. எதற்காகச் சதா ஓயாது உழைத்துத் தன்னைத் தகுதியாக்கிக்கொள்ளுகிறானோ அதையே அவன் அடைகிறான். யாதொரு தகுதியான

உன் வகையில் ஒரு கடன் ஏற்பட்டாலும், பெரியோர்கள் கடன் வைத்துச் சென்றிருந்தாலும் தீரத்துடனே நில். என் நீண்ட வாளுளில் இந்தக் கடன் எனக்கு எந்த மூலை என்று துணிந்துகொள். உன் கடனை வெளிக்கு வாராதபடியே வைத்து, அக் கடனை யடைத்துத் தொலைத்துவிடு.

தள்ளிவிடுதல்.

(ஒரு சிறு கதை.)

திரு. அரியநாயகம் அவர்கள், B. A., B. D., B. Ed. (Edin.)

பங்குனி மாதம். முதலாம் பௌரணமி. புதிய வசந்த காலம். சுகமான காற்று மாம் பூக்களின் அரிய வாசனையுடன் வீசிக்கொண் டிருந்தது. குளக்கரையிலிருக்கும் ஒரு முதிர்ந்த பெரிய அரச மரத்தின் கிளைகளுக்கு ஊடே இலைகளுக்கு மத்தியில் நித்திரை யற்ற ஒரு குயில்ப் பட்சியுடைய இனிமையான சங்கீத ஓசை முகர்ஜியின் அமைதியற்ற படுக்கை அறைக்குப் பிரவேசித்துக்கொண்டிருந்தது. ஹேமந்தா என்னும் வாலிபன் சஞ்சலிப்புடைய மனத்துடன் தன்னுடைய மனைவியின் முடிந்து கட்டிய கொண்டையிலிருந்து சில சமயங்களில் மயிர்களில் சிலவற்றைப் பிரித்தெடுத்துத் தன்னுடைய விரல்களை அம் மயிர்களூட் செலுத்திக் குழப்புவதும், அவளது கையிலிருக்கும் காப்பையும் வளையல்களையும் ஒன்றோடொன்று அடித்து "ரிங் ரிங்"கென்று சப்தம் பண்ணுவதும், கொண்டையி லிருக்கும் புஷ்ப மாலையை இழுத்து அவளுடைய வாயின் மேல் போடுவதுமாக விருந்தான்.

சாயுங்காலம் கொஞ்சமேனும் ஆட்டல் அசைவில்லாமல் சப்தமின்றி நிற்கும் புஷ்ப மரத்தைக் காற்று இப் பக்கத்திலிருந்து அப் பக்கமும், அப் பக்கத்திலிருந்து இப் பக்கமுமாக எவ் வண்ணம் அடித்து அலைத்துக்கொண் டிருக்கிறதோ, அவ்வண்ணமே ஹேமந்தாவினுடைய மனோநிலையும் இருந்தது. ஆனால் அவனது மனைவியாகிய குஷும்தேவி பூர்ணச் சந்திரனது ஒளி நிறைந்த மிக விஸ்தீரணமான பரந்த ஆகாயத்தின் மத்தியிலிருக்கும் நட்சத்திரங்களைப்

நலனையும் கெஞ்சிப் பெறமுடியாதென்னும் உண்மையை உணர வேண்டும். அன்றுதான் உங்கள் உரிமையைப் பெறுவீர்கள். 'சொந்த வலிவுடையார் இன்ப வாழ்வுடையார்; இந்த வார்த்தையில் மோசமில்லை.'

நம் நாட்டில் தோல் பதனிடும் தொழிலை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பதனிடாத தோல் ஏற்றுமதியின் மேல் சில வருஷங்களாக, வரி நிர்ணயக் கமிட்டியின் சிபார்சின்படி வரி விதித்திருந்தனர். அதையும் இப்பொழுது நீக்கிவிடத் தீர்மானித்துள்ளனர். ஏற்றுமதி வரி நீக்கப்பட்டால் நம் நாட்டிலிருந்து பதனிடாத தோல் அதிகமாகப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகும். இங்கு பதனிடும் தொழில் க்ஷீணிக்கும். இதெல்லாம் சர்க்காருக்குத் தெரியாதென்று சொல்வதற்கில்லை. நம் நன்மையை அவர்கள் பிரதானமாகக் கருதவில்லையென்றுதான கூறவேண்டும்.

சென்ற சில மாதங்களாய் வெளிநாட்டு அரிசி, கப்பல் கப்பலாய் இங்கு கொண்டுவந்து குவிக்கப்படுகிறது. இவ் வரிசி இறக்குமதியின் பயனாய்த் தேசத்தில் அரிசியின் விலை வீழ்ந்து, விவசாயம் வெகுவாய்ப் பாதிக்கப்பட்டுள்ளது. அதையும் காருண்ய சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. சர்க்காரோ சாவதானமாக யோசனை செய்துகொண்டும், அவ் வந்நிய நாட்டுச் சர்க்கார்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்திவருவதாய்ச் சொல்லிக்கொண்டு மிருக்கிறார்கள். 'செட்டியார் சிங்காரிப்பதற்குள் பட்டணம் பறிபோகும்'போல் இருக்கிறது.

ஜப்பான், இந்தோ-சைனா, பர்மா, சயாம் முதலிய நாடுகள் நம் உணவிற்கு அரிசி சப்ளை செய்யக் கருணைகூர்ந்துள்ளன. உடைக்கு இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகள் துணி அனுப்பக் காத்திருக்கின்றன. ஆம்! இன்னும் என்ன என்ன வேண்டுமோ அதையெல்லாம் நம்மைச் சும்மா உட்கார வைத்துவிட்டுப் பிறநாடுகள் செய்து கொடுக்கத் தயாராயிருக்கின்றன. சர்க்காரும் நம் உடம்பு நோவதைப் பார்க்கச் சகியாதவர்களாய் நம் நாட்டுப் பொருள்களின் உற்பத்தியில் பாராமுகமாய் இருக்கின்றனர். எத்தனை நாளைக்குத்தான் இப்படியே போய்க்கொண்டிருக்க முடியும்? எல்லாத் தொழிலையும் வெளிநாட்டாருக்கு விட்டுவிட்டால், அவர்களிட மிருந்து நமக்குத் தேவையான பொருளை வாங்கக் காசு எங்கிருந்து வரும்?

இச் சமீபகால நிகழ்ச்சிகளினின்றாகிலும் நமக்குப் புத்தி வர வேண்டும். 'கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பது நமக்குப் பயன்படாது. மனிதன் தான் விரும்புகிற எதையும் அடைவதில்லை. எதற்காகச் சதா ஓயாது உழைத்துத் தன்னைத் தகுதியாக்கிக்கொள்ளுகிறானோ அதையே அவன் அடைகிறான். யாதொரு தகுதியான

உன் வகையில் ஒரு கடன் ஏற்பட்டாலும், பெரியோர்கள் கடன் வைத்துச் சென்றிருந்தாலும் தீரத்துடனே நில். என் நீண்ட வாழ்நாளில் இந்தக் கடன் எனக்கு எந்த மூலை என்று துணிந்துகொள். உன் கடனை வெளிக்கு வாராதபடியே வைத்து, அக் கடனை யடைத்துத் தொலைத்துவிடு.

தள்ளிவிடுதல்.

(ஒரு சிறு கதை.)

திரு. அரியநாயகம் அவர்கள், B. A., B. D., B. Ed. (Edin.)

பங்குனி மாதம். முதலாம் பௌரணமி. புதிய வசந்த காலம். சுகமான காற்று மாம் பூக்களின் அரிய வாசனையுடன் வீசிக்கொண்டிருந்தது. குளக்கரையிலிருக்கும் ஒரு முதிர்ந்த பெரிய அரச மரத்தின் கிளைகளுக்கு ஊடே இலைகளுக்கு மத்தியில் நித்திரையற்ற ஒரு குயில்ப் பட்சியுடைய இனிமையான சங்கீத ஓசை முகர்ஜியின் அமைதியற்ற படுக்கை அறைக்குப் பிரவேசித்துக்கொண்டிருந்தது. ஹேமந்தா என்னும் வாலிபன் சஞ்சலிப்புடைய மனத்துடன் தன்னுடைய மனைவியின் முடிந்து கட்டிய கொண்டையிலிருந்து சில சமயங்களில் மயிர்களில் சிலவற்றைப் பிரித்தெடுத்துத் தன்னுடைய விரல்களை அம் மயிர்களுட் செலுத்திக் குழப்புவதும், அவளது கையிலிருக்கும் காப்பையும் வளையல்களையும் ஒன்றோடொன்று அடித்து "ரிங் ரிங்"கென்று சப்தம் பண்ணுவதும், கொண்டையி லிருக்கும் புஷ்ப மாலையை இழுத்து அவளுடைய வாயின் மேல் போடுவதுமாக விருந்தான்.

சாயுங்காலம் கொஞ்சமேனும் ஆட்டல் அசைவில்லாமல் சப்தமின்றி நிற்கும் புஷ்ப மரத்தைக் காற்று இப் பக்கத்திலிருந்து அப் பக்கமும், அப் பக்கத்திலிருந்து இப் பக்கமுமாக எவ் வண்ணம் அடித்து அலைத்துக்கொண்டிருக்கிறதோ, அவ்வண்ணமே ஹேமந்தாவினுடைய மனோநிலையும் இருந்தது. ஆனால் அவனது மனைவியாகிய குஸும்தேவி பூர்ணச் சந்திரனது ஒளி நிறைந்த மிக விஸ்தீரணமான பரந்த ஆகாயத்தின் மத்தியிலிருக்கும் நட்சத்திரங்களைப்

நலனையும் கெஞ்சிப் பெறமுடியாதென்னும் உண்மையை உணர வேண்டும். அன்றுதான் உங்கள் உரிமையைப் பெறுவீர்கள். 'சொந்த வலிவுடையார் இன்ப வாழ்வுடையார்; இந்த வார்த்தையில் மோசமில்லை.'

பார்த்த வண்ணமாக அசையாமல் உட்கார்ந்திருந்தாள். ஆழுத
லற்ற கணவனுடைய சஞ்சலமும் மனக் குழப்பமும் பெரிய பல
மான அலை போல் அவள் மேல் மோதி அடித்து உத்தரவின்றித்
திரும்பிப் போய்க்கொண்டிருந்தது. மனக் குழப்பம் தாங்க ஆற்
றுமல் கடைசியாக ஹேமந்தா குஷாமுடைய இரு கைகளையும் பிடித்து
உரமாகக் குலுக்கி "குஷாம், நீ இப்பொழுது எங்கே யிருக்கிறாய்?
எய்யப்பட்ட அம்பு எவ்வண்ணம் மிகவும் தூரத்துக்குச் சென்று ஒரு
சிறிய பொட்டுப் போல் தோன்றுகிறதோ, அவ்வண்ணமே நீயும்
இப்போது ஏதோ மிகவும் தூரமான ஒரு தேசம் போயிருக்கிறாய்
போல் எனக்குத் தோன்றுகிறது. இன்றிரவு நீ கூடியமட்டும் என்
ளுடன் நெருங்கி இருக்கவேண்டுமென்பதே என்னுடைய விருப்
பம். அதோ பார் என்ன அழகான இரவு!" என்று தன் காதலை வெளி
யிட்டான். அப்பொழுது குஷாம் தன் முகத்தை ஆகாயத்திலிருந்து
திருப்பித் தன்னுடைய கணவன் முகத்தைப் பார்த்து, "பிராண
நாதா! இவ்வளவு அழகான நிலாவுள்ள இரவு, வசந்தகால சோலை,
சுகமான காற்று, நறுமலர்ச் சோலை வாசம் முதலிய இன்பங்கள்
எல்லாம் ஒரு முகூர்த்தத்திலேயே பொய்யாகி மாயை போல்
மறைந்து அழிந்து போகச் செய்யக்கூடிய ஒரு மந்திரம் எனக்குத்
தெரியும். ஆகையால் "நிலையற்ற உலக இன்பங்களில் மயங்குவது
புத்தியீனம்" என்றாள். அதைக் கேட்டதும் ஹேமந்தா அதிசயப்
பட்டு "அப்படியான மந்திரம் உனக்குத் தெரிந்திருக்கக் கூடுமானால்,
அதை இப்போது உச்சரிக்காதே. ஆனால் வாரத்தில் மூன்று அல்லது
நாலு ஞாயிற்றுக்கிழமை வருவிக்கக்கூடிய சக்தியுள்ள மந்திரத்தை
அல்லது சாயங்காலம் ஐந்து ஐந்தரை மணி வரையிலும் இராக்
காலமாயிருக்கச் செய்யக்கூடியதான மந்திரத்தை நீ அறிந்திருந்தால்
அவைகளை உச்சாரணஞ் செய். நான் அவ்வித மந்திரம் கேட்கப்
பேராசையுள்ளவனாயிருக்கிறேன்" என்று சொல்லிக் குஷாமை இன்
னும் தனக்குச் சமீபமாக நெருங்கி வரும்படி அன்புடன் இழுத்தான்.
குஷாம் இவ் வாதாவினால் சமீபத்தில் இன்பமுடன் சுகமாக அருகில்
வராமல் "மரணத்துக்கு முன் நான் உமக்குச் சொல்ல வேண்டு
மென்று நினைத்த சில சங்கதிகளை இன்று உமக்குச் சொல்ல வேண்
டும் என்ற விருப்பம் எனக்குத் தோன்றுகிறது. எனக்கு எவ்வ
ளவு தண்டனைகளைத் தாங்கள் கொடுத்தாலும், இன்று நான் அவை
களைத் தாங்கிக்கொள்ளக் கூடும் போல் என் மனதிற் தோன்று
கிறது" என்றாள். தண்டனைகளைப் பற்றிக் கவி ஜெயதேவருடைய
பாடல்களிலிருந்து சில சுலோகங்களை அவ் வேளையில் பாடிப் பாடிப்
பகடிக் கதை பேசும் உத்தேசம் ஹேமந்தாவுக்கு எழுந்தது. அந்த

எந்தக் காரியத்திற்குச் சென்றனையோ அதை வெற்றியுடன் முடித்துக்
கொண்டு வா.

ரோத்தில் சோட்டுச் செருப்பின் சட் சட் என்ற சப்தம் சமீபித்துச் சமீபித்து வந்துகொண்டிருந்தது. அது ஹேமந்தாவினுடைய பிதா ஹரிஹர முகர்ஜியின் பாதங்களினின்று எழுந்த சப்தம். பிதாவின் வரவைக் கண்டதும் ஹேமந்தா திடுக்கிட்டு அவதியுடன் எழுந்தான்.

ஹரிஹரர் கதவின் சமீபமாக வந்து இடி முழக்கம் போன்ற சப்தத்துடன் "அடே, ஹேமந்தா! உன் மனைவியை இந்த நிமிஷமே நமது வீட்டிலிருந்து வெளியே அனுப்பிவிடு" என்று கோபத்துடன் சொல்லிவிட்டுச் சென்றார். ஹேமந்தா தனது அருமை மனைவியுடைய முகத்தைப் பார்த்தான். மனைவியின் முகத்திற் சிறிதளவாவது வாட்டமோ கோட்டமோ தோன்றவில்லை. பிறகு அவனும் வெளியே போய்விட்டான். குஷாம்தேவி இரண்டு கரங்களினிடையே முகத்தை வைத்து அழுதுகொண்டு தன்னை முற்றும் வெறுத்துத் தற்கொலை செய்யப் பெரிதும் விரும்பினாள். தென்றல் காற்றுடன் கோகிலப் பட்சியின் பாட்டுத் தொனி இடைவிடாது அறைக்குள் பிரவேசித்துக் கொண்டே இருந்தது; ஆனால் அது ஒருவருடைய காதிலும் விழவில்லை. "இவ்வுலகம் எவ்வளவு அழகுடையதாயிருந்தாலும், அதுவும் மாயமாய் இலகுவில் துக்கசாகரத்தில் அமிழ்ந்துவிடுகிறது" எனத் தனக்குள் சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

II

ஹேமந்தா வெளியிலிருந்து திரும்பி வந்து தன்னுடைய மனைவியைக் கண்டு மாயையான நிலையற்ற உலக அனுபவங்களின் முடிவை அவள் விஸ்தரித்துக் கூறியபொழுது, அவன் கவனமாய்க் கேட்டான். பின்பு அவன் அளவற்ற அதிசயத்தோடு "இது உண்மைதானா? இவ்வளவு நாளும் நீ ஏன் எனக்கு இதைச் சொல்லவில்லை?" என்று கேட்டான். குஷாம்தேவி மறுமொழியாக "அநேக முறை சொல்லப் பிரயாசைப்பட்டேன். ஆனால் சொல்லிக்கொள்ள முடியாமல் விட்டுவிட்டேன். நான் பெரிய பாவி; தயவு செய்து மன்னியுங்கள்" என்று தன்னை நொந்து நின்றாள். ஹேமந்தா "அப்படியானால் எல்லாவற்றையும் இன்று திறந்து சொல்" என்றான். உடனே குஷாம்தேவி பயபக்தியுடன் ஆழ்ந்த குரலில் எல்லாவற்றையும் திறந்து வெளியில் சொன்னாள். அப்பொழுது ஹேமந்தாவுக்கு அக்கினியில் வெறும் பாதங்களுடன் நடந்து போவது போலத் தோன்றிற்று. ஆனால் எவ்வளவு கடுங் காயங்கள் பட்டனவென்பது ஒருவருக்குந் தெரியாது. சகல விஷயங்களையும் கவன

உன்னை ஒரு கலகத்தின் இடையே மத்தியஸ்தம் கோரினால், எவ்விதத்தும் ஸமரஸப்படுத்தி வைத்துப் பொது ஜனங்களுக்குத் திருப்தி செய்.

மாய்க் கேட்டுக்கொண்டு ஹேமந்தா எழுந்து போய்விட்டான். எழுந்து போன தன் கணவனைத்தான் ஒருபோதும் திரும்பப் பெற்றுக்கொள்ளப் போவதில்லையென்று குஷாம்தேவி நினைத்துக்கொண்டாள். ஆனால் சிறிதேனும் குஷாம்தேவி ஆச்சரியப்படவில்லை. இச் சம்பவம் தினந்தோறும் நடந்து வரும் சம்பவங்களைப் போன்ற சாதாரணமான சம்பவமேயன்றி வித்தியாசமாகத் தோன்றவில்லை. உலகமும் மனிதருக்குள் இருக்கும் அன்பு, பணம் ஆகிய இவைகளெல்லாம் பொய்யும் நிலையற்றன வென்று மனதில் நிச்சயித்துக்கொண்டாள். அவ்வேளை ஹேமந்தா பேசிய சகல அன்பான வார்த்தைகளும் குஷாம்தேவியின் மனதைத் துன்பப்படுத்தும் வம்பான செய்கைகள் போற் காணப்பட்டன. அவன் வெறுப்பும் சந்தோஷமற்றதுமான புன்னகையொன்று கூர்மையான சொடிய கத்தியைப் போல் இரு பக்கத்திலும் கடுமையான காயங்களை உண்டாக்கிக் குஷாம்தேவியினுடைய மனதை ஊடுருவிச் சென்றது. இவ்வன்பு எவ்வளவு வல்லமையுள்ளது! எவ்வளவு அருமையான ஆதரிப்பு! எவ்வளவு அருமையான நேசம்! கொஞ்சமேனும் பிரிந்திருக்க நேரிட்டால் எவ்வளவு மனவருத்தம்! ஒரு முகூர்த்தத்திலேயே ஆழ்ந்த ஆனந்தத்தில் அமிழுஞ் சக்தி! அழிவற்றது! எல்லையில்லாதது! ஜென்ம ஜென்மாந்திரத்திலே அவ் வன்பின் அழகின் முடிவை வர்ணித்துக்காட்ட ஓவியத்துறையில் மிகுந்த திறமையுடையவராலும் முடியாது. அப்படியான அன்பு இதுதானா? இந்த அற்பத்தின் மேல்தானா எங்களுடைய நம்பிக்கை செல்கின்றது? மனிதர் கேடொன்று செய்தவுடன் அளவற்ற அன்பு முழுவதும் உடைந்து விழுந்து எரிந்து சாம்பலாகிவிடுமா? சற்று நேரத்திற்கு முன் ஹேமந்தா காதுக்கு இனிமையாகப் பலவற்றையும் குசுகுசுத்துச் சொன்னானே? "என்ன அழகான இரா!" அந்த இரா இன்னும் முடிந்துபோகவில்லை. இப்போதும் கோகிலப் பட்சி பாடிக்கொண்டேயிருக்கிறது. தென்றல் காற்று கொசு வலையை ஆட்டிக்கொண்டிருக்கிறது. நிலா மிகவும் சாந்தமும் சவுந்தரியமும் உடைய ஒரு பெண்ணைப் போலக் கட்டிலின் ஒரு மூலையில் சுருண்டு படுத்திருக்கிறதே. சகலமும் பொய்! மித்தைவாதினி! என்னிலும் அன்பு மிகவும் நிலையற்றது என்னும் எண்ணங்களும் ஒருவேளை அவள் மனதிலே வந்திருக்கலாம்.

III

அடுத்த நாள் அதிகாலையில் நித்திரையற்ற ஹேமந்தா பயித்தியக்காரனைப்போலக் குஷாம்தேவியின் தந்தையாகிய பரிசங்கர் கோஷா

விவசாய அபிவிருத்திக்காகச் செலவு செய்யப்படும் ஒவ்வொரு பைசாவும் நூறு மடங்கு அதிகமாகத் திரும்பி வருகிறது.

னுடைய வீட்டுக்குப் போனான். அவனைக் கண்டதும் பரிசங்கர் "என்ன தம்பி, என்ன சங்கதி?" என்று கேட்டபொழுது, ஹேமந்தா கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப்போலக் கொதித்தெழும்பி நெடுமூச்செறிந்து சரீரம் முழுவதும் நடுங்க, படபடப்பாய் விம்மி "நீர் எங்களுடைய சாதியைக் குலைத்து அழித்துவிட்டாய்; சர்வநாசஞ் செய்துவிட்டாய்; இதன் தண்டனையை நீ அடைந்தே தீருவாய்" என்று சொல்லிச் சீறினான். இவ்வண்ணம் பேசப் பேச ஹேமந்தா மனதில் கோபாவேசம் அதிகரித்துக்கொண்டேயிருந்தது. பரிசங்கர் புன்னகையுடன் "நீங்கள் மாத்திரம் என்னுடைய சாதியைப் பாதுகாத்துப் போட்டீர்கள்! முதுகில் தட்டி எனக்கு மிகவும் உற்சாகமுங் கொடுத்துவிட்டீர்கள்! நீங்கள் எனக்கு எவ்வளவு ஆதரவும் அன்பும் பாராட்டிப் போட்டீர்கள்!" என்று சொன்னார். இவைகளைக் கேட்டவுடனே தன்னிலிருக்கும் பிராமண அபிமானத்தால் அந்நேரமே பரிசங்கரைச் சாம்பலாக்கி விடும் ரோஷம் ஹேமந்தா மனதிலுண்டானது. அந்த அபிமானத்தாலேயே ஹேமந்தா அக்கினியைப் போல் எரிந்தெழும்பினான். ஆயினும் பரிசங்கர் சற்றேனும் பயமற்றவராய் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

ஹேமந்தா படபடப்பும் கோபமான முகத்துடன் "நான் உனக்கு என்ன குற்றஞ் செய்தேன்? நீ ஏன் என்னைத் தாழ்ந்த சாதியுடன் கலக்கும்படி செய்து விட்டாய்?" என்று கூக்குரல் போட்டுக்கொண்டு நின்றான். பரிசங்கர் தாழ்ந்த குரலோடு சொன்னதாவது "நான் சொல்வதைப் பொறுமையோடு கேளும். எனக்கு ஒரே ஒரு புத்திரி தவிர வேறு சந்தானமில்லை. அவள் உம்முடைய பிதாவுக்கு என்ன குற்றஞ் செய்தாள்? பழைய சம்பவங்களை ஆராய வேண்டும். நீர் அப்போது சிறு பையன். அப்பொழுது நீர் அவைகளை அறியாமலிருக்கலாம். ஆனபடியால் நான் அச் சம்பவங்களைச் சொல்லுகிறேன். முழு மனதையுஞ் செலுத்திக் கேளும். அவசரப்படாதேயும், தம்பி. இந்தச் சம்பவங்களிலிருக்கும் [illegible] யறிந்த பிற்பாடு நீர் மிகவும் சந்தோஷமடைவீர்."

"என்னுடைய மருமகன் நவகாந்தா என்னுடைய மகளின் நகைகளைத் திருடிக்கொண்டு இங்கிலாந்து தேசத்துக்கு ஓடிப்போன காலத்தில் நீர் சிறு குழந்தையாயிருந்தீர். ஐந்து வருஷத்தின் பின் அவர் பாரிஸ்டர் பட்டம் பெற்றுக்கொண்டு சுயதேசத்திற்குத் திரும்பி வந்தார். அப்போது கிராமத்திலே குழப்பம் உண்டாயிற்று. இதைப்பற்றி உமக்கும் ஒருவேளை கொஞ்சம் கொஞ்சம் ஞாபகம் இருக்கக்கூடும். ஒருவேளை நீர் அவைகளை முழுவதும்

பசி, கஷ்டம், பிணி, சங்கடம் இவைகளே நம் தேசத்து விவசாயிகளின் நிலை.

அறியாமலும் இருக்கக்கூடும். நீர் அந்த நாட்களிலே கல்கத்தாவில் ஒரு பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்தீர். உம்முடைய பிதாவாகிய முகர்ஜியார் கிராமத்தின் தலைவராக எழும்பி "உன்னுடைய மகளைப் புருஷனுடைய வீட்டுக்கு அனுப்பும் அபிப்பிராயமிருக்கக் கூடுமானால், அந்தப் பெண்பிள்ளையைத் திருப்பவும் சமூகத்திற்குள் அங்கீகரித்துக்கொள்ள முடியாது" என்று என்னை எச்சரித்தார். உடனே நான் அவருடைய கைகாலைப் பிடித்துக் கையெடுத்துக் கும்பிட்டு "அண்ணா, இத் தடவைமட்டும் நீர் இதை மன்னித்துவிடுங்கள். வாலிபனை நான் பசுச் சாணி சாப்பிடச் செய்து, வேண்டிய பிராயச்சித்தம் செய்து வைப்பேன். நீங்கள் அவனைச் சாதி ஜனத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று மன்றாடினேன். உம்முடைய தகப்பனார் கொஞ்சமும் அதை மதிக்கவில்லை. நானும் என்னுடைய ஒரே ஒரு மகளை வேண்டாமென்று தள்ளிவிட முடியாதவனாயிருந்தேன். சாதியை விட்டு, ஊரை விட்டு கல்கத்தாவுக்கு வந்து வாசஞ்செய்தேன். இங்கே வந்தபிறகும் தொந்திரவுகள் முழுவதும் அடங்கிப் போகவில்லை. என்னுடைய தமயனாரின் புத்திரனுடைய கல்யாண சடங்குகளுக்கு வேண்டிய சகல ஆயத்தங்களும் செய்துகொண்டிருக்கும்போது, உம்முடைய தகப்பனார் கன்னிகையின் பெற்றோர்களுடைய மனதில் எங்கள் குடும்பத்தைப்பற்றி வேறுபாடு உண்டாக்கிச் சடங்கில் குழப்பம் செய்துவிட்டார். இதற்குத் தகுந்த பழி வாங்காதபோனால், நான் பிராமணனுக்குப் பிறந்த ஆண்பிள்ளை யல்லவென்று நான் சபதஞ் செய்துகொண்டேன். இப்பொழுது தங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் விளங்கிக்கொண்டிருக்கும் என்று நம்புகிறேன். ஆனால் இன்னும் சிறிது நேரம் சாந்தமாய் இருங்கள். சம்பவங்கள் முழுவதையும் கேட்டால் சந்தோஷப்படுவீர்கள். இவைகளில் ஆனந்தம் உண்டு! நீங்கள் கல்லூரியில் படிக்கும்பொழுது, உங்களுடைய வீட்டுக்குச் சமீபத்தில் விப்ரதாஸ் சாட்டர்ஜி என்னும் விருத்தாப்பிய பிராமணோத்தமர் குடியிருந்தார். அவர் இப்பொழுது காலம் சென்றுவிட்டார். சாட்டர்ஜியுடைய வீட்டில் குஸும்தேவி என்னும் பெயருள்ள ஒரு காயஸ்த அநாதைக் குழந்தை விதவை தஞ்சமடைந்திருந்தது. அக் குழந்தை தன் பருவ காலத்தில் மிகவும் அழகான வாலிப ஸ்திரீயாயிருந்தாள். விருத்தாப்பியமுள்ள பிராமணன், கல்லூரியில் படிக்கும் வாலிபர்களுடைய கண்களின் பார்வையிலிருந்து இப் பெண்மணியைக் காப்

ஒரு பிரயாணம் செய்ய நினைத்தால், புறப்படுகிற தினத்தைத் தூரத் தள்ளிவைக்க வேண்டி வரும். தடைகள் அநேகம் குறுக்கிடும். நினைத்த போதே செய்யக் கூடியபடி நீ பழகிவிட்டால், இத் தடைகள் யாவும் பஞ்சாய்ப் பறந்துவிடும். உன் பிரயாணமும் வெற்றியுடன் உன்னைத் திரும்பவும் வீடு கொண்டுவந்து சேர்க்கும்.

பாற்றிக்கொள்ளும் வண்ணம் சிறிது கவனமுள்ள சிந்தையுடையவராய் இருந்தார். ஆனால் கிழவனை ஏமாற்றிவிடுவது வாலிப ஸ்திரீக்குக் கொஞ்சமும் கஷ்டமான காரியமல்ல. இந்தப் பெண்மணி கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் சீலை காயப்போடுவதற்காக அவ் வீட்டின் மேல் மாடத்திற்கு ஏறுவதுண்டு. அப்போது நீர் அவள் மேல் காதல்கொள்ள ஆரம்பித்தீர். என்னுடைய எண்ணத்தின்படி வீட்டின் மேல் மாடத்தில் அவள் ஏறிக்கொண்டு திரிந்ததனாலேயே, நீரும் பாடங்களை மனப்பாடம் பண்ணிக்கொள்ள முடியாமலிருந்தீர். அந் நாட்களிலே உங்கள் வீட்டின் மேல் மாடத்திலிருந்து நீங்களிருவரும் ஒருவரோடொருவர் ஏதாவது சம்பாஷித்தீர்களோ அல்லவோ அது உங்களுக்கே தெரியும். ஆனால் பெண்மணியின் மாதிரிகளைப் பார்த்துக் கிழவனுடைய மனதில் சந்தேகம் உண்டாயிற்று. காரணமென்னவென்றால், படிப்படியாக அவள் தன்னுடைய கடமைகளைச் சரியாகச் செய்யாமலிருந்தாள். அது மாத்திரமன்றி தபஸினி கௌரிதேவியைப்போல் நித்திரை ஆகாரம் இவைகளின்மேல் வெறுப்பு அதிகமாய் அதிகரித்துக்கொண்டு வந்தது. சிற்சில நாட்களின் சாயந்தர வேளையில் கிழவனுடைய சமூகத்திலேயே ஒரு காரணமுமில்லாமல் தாரை தாரையாகக் கண்ணீர் சொரிவாள். அதை அடக்கிக்கொள்ளவும் அவளால் இயலாமலிருந்தது. பல சமயங்களிலே நீங்களிருவரும் வீட்டின் மேல் மாடத்தில் கள்ளத்தனமாகச் சந்தித்துச் சம்பாஷித்து வருகிறீர்களென்று கிழவர் கடைசியாகக் கண்டுபிடித்தார். என்ன நினைக்கிறீர்! நீர் கல்லூரிக்குப் போகாமல் மத்தியான வேளையிலே கோபுர அறையின் பக்கத்து நிழலில் ஒரு மூலையில் கையில் புஸ்தகத்துடன் படிக்கிற பாவனையாக உட்கார்ந்திருப்பீர். அவ்வளவு ஆச்சர்யமான உற்சாகம் உம்மில் காணப்பட்டது. விப்ரதாஸ் சாட்டர்ஜி இவ் விஷயத்தைப்பற்றி என்னுடன் ஆலோசிக்க வந்தபோது, நான் அவருடன் இதமாகப் பேசி "மாமா, நீர் அதிக காலமாகத் திருக்காசி வாசம் செய்வதற்காகப் போகவேண்டுமென்று மனதுடையவராயிருக்கிறீர். ஆகையால் நீர் அப் பெண்ணை என்னுடன் விட்டுவிட்டுத் தீர்த்தவாசம் பண்ணப் போம். பெண்ணுடைய பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்றேன். விப்ரதாஸ் தீர்த்தமாடத் திருக்காசிக்குச் சென்றுவிட்டார். நான் பெண்ணை ஸ்ரீபதி சாட்டர்ஜியினுடைய வீட்டில் விட்டு அவரையே பெண்ணின் தகப்பனாரென்று சொல்லி வழங்கி வந்தேன். அதன் பிற்பாடு என்ன நடந்ததென்று உமக்கே தெரியும். சகல சம்பவங்க

உனக்கு வியாதி வந்துவிட்டால் தைரியத்தை விடாதே. குணப்படாதென்று நினைக்காதே. கடைசிவரையில் பிழைக்க முடியுமென்றே எதிர்பார். வைத்திய உதவிகள் ஆனவரையில் செய். பூரண சுகம் தந்தருளுமாறு கடவுளை நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்.

ளையும் உமக்கு விஸ்தாரமாகத் திறந்து சொல்லி இப்பொழுது ஆனந்தமடைகிறேன். இது ஒரு உப கதையைப்போலத் தோன்றுகிறது. சகல சம்பவங்களையும் அழகாக எழுதி ஒரு புஸ்தகம் அச்சிட வேண்டுமென்ற ஆவல் என் மனதிலிருக்கின்றது. சுத்தமான பாஷையில் அழகாக எழுதும் சக்தி எனக்கில்லை. என்னுடைய தமையனுடைய மகனொருவன் கொஞ்சங் கொஞ்சம் எழுதும் சக்தியுள்ளவனென்று கேள்வி. அவனிடம் கொடுத்து எழுதுவிக்க நினைக்கிறேன். அவனும் நீரும் சேர்ந்து எழுதினால், எல்லாவற்றிலும் நலம். ஏனென்றால் கதையின் முடிவென்னவென்று எனக்கு நன்றாகத் தெரியாது" என்றார்.

ஹேமந்தர் பரிசங்கருடைய இக் கடைசி வார்த்தைகளைக் கவனமாகக் காது கொடுத்துக் கேட்காமல் கேட்டு, "அக் காலத்தில் இந்த விவாக சம்பந்தத்தைப் பற்றி குஷும்தேவி ஒருவிதமான விருப்பவீனமும் காட்டவில்லையோ?" என்று கேட்டான். பரிசங்கர் விருப்பவீன மிருந்ததோ இல்லையோ வென்று விளங்கிக் கொள்வது மிகவும் கஷ்டமென்றார். "தம்பி! இது எவரும் அறிந்த காரியம். பெண்களுடைய மனம் "இல்லை" யென்று சொல்லும்போது 'ஆம்' என்று விளங்கிக் கொள்ள வேண்டும். குஷும்தேவி புதிய வீட்டிற்குப் போன பிற்பாடு சில நாட்களாக உம்மைக் காணாமல் பைத்தியக்காரியைப் போலிருந்தாள். எவ்வண்ணமோ தெரியாது நீரும் பிற்பாடு இப் பெண் வசிக்கும் வீட்டை அறிந்துவிட்டீர். அநேகமாய் ஒவ்வொரு நாளும் கையில் புஸ்தகங்களுடன் கல்லூரிக்குப் போகும் வழியை நீர் தவற விட்டு விடுவதுண்டு. இன்னும் ஸ்ரீபதி வீட்டிற்கு முன்னே வந்து அங்கே ஏதோ ஒரு அருமையான பொருளை இழந்துவிட்டவன் அதை ஆத்திரத்துடன் தேடித் திரிவது போல நீர் உலாவுவீர். உள்ளபடி பிரசிடென்சி கல்லூரிக்குப் போகும் ரோட்டைத் தேடுகிறவரைப் போலத் தோன்றவில்லை. ஏனென்றால் பெரிய மனிதருடைய வீட்டின் ஜன்னலுக் கூடாகக் கரிய வண்டுகளும் தலைக் குழப்பமுள்ள வாலிபருந் தவிர வேறொருவருங் கண்ணூன்றிப் பார்க்கிறதில்லை. இவைகளைப் பார்க்கவும் கேட்கவும் எனக்கு மிகவும் துக்கமாயிருந்தது. வாலிபனுடைய படிப்பு நாசமாய்ப் போகிறதென்றும் பெண்மணியின் நிலையும் பரிதாபப்படக்கூடியதென்றும் கண்டேன்."

ஒரு நாள் குஷும் தேவியைக் கூப்பிட்டு "நான் வயது போன மனிதன். என் முன்னிலையில் நீ வெட்கப்பட வேண்டிய நியாய

தடையில்லா வியாபாரமானது இந்தியாவில் உள்ள ஜனங்களில் இரவு பகலாய் உழைக்கும் விவசாயிகளின் வாழ்வு வர வர அதிக கஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டு வருகிறது.

மில்லை. விவாகத்திற்கு நீ யாரை மனதில் சிந்தித்துப் பிரார்த்தனை செய்து வருகிறாயென்று நானறிவேன். நீ கவனித்திருக்கும் வாலிபனும் அந்த யோசனையினால் நாசமாய்ப் போகும் அவஸ்தைக்குள்ளாகிறான். நீங்களிருவரும் ஒன்றாகச் சேருவதே என்னுடைய விருப்பம்" என்றேன். இவ் வார்த்தைகளைக் கேட்டவுடன் குஷும்தேவி மனமுடைந்து அழுதுகொண்டு ஓடி மறைந்து விட்டாள். இவ்வண்ணம் சாயந்திரத்தில் இடைக்கிடை ஸ்ரீபதி சாட்டர்ஜியுடைய வீட்டிற்குப் போய் குஷுமைக் கூப்பிட்டு உம்முடைய சங்கதிகளைச் சொல்லிப் படிப்படியாக அவளுடைய வெட்கத்தைப் போக்கினேன். நாளாவட்டத்தில் இவ்வண்ணம் ஆலோசனை செய்து கடைசியாக 'நீ பிற்காலம் சீராய் வாழ்வதற்கு விவாகமேயன்றி உனக்கு வேறு வழியே காணவில்லை' என்பதாக வற்புறுத்தி அவளுக்கு உணர்த்தினேன். 'நீங்களிருவரும் ஒன்று சேர்ந்து கொள்ளும் உபாயம் இதைத் தவிர வேறொன்றுமில்லை' என்றேன். இதைக் கேட்டதும் குலத்தைப் பற்றிய எண்ணமுடையவளாய் 'எல்லாம் சரிதான். ஆனால் இது எப்படி நிறைவேறக் கூடும்' என்று குஷும்தேவி கேட்டாள். அதற்கு மறுமொழியாக 'உன்னைக் குலின் பிராமணப் பெண்மணியென்று சொல்லி விவாகத்தை ஒழுங்குபண்ணுவேன்' என்று நான் தைரியம் சொன்னேன். நெடுநேரம் தர்க்கம் புரிந்த பிறகு, இவ் விஷயத்தைப் பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்னவென்று விசாரிக்கும்படி குஷும்தேவி கேட்டாள். அதற்கு நான் "வாலிபன் இப்போதே பைத்தியக் கோலமாயிருக்கிறார். அப்படிப்பட்ட நிலவரத்தில் அவருக்கு இந்தச் சங்கதிகளெல்லாவற்றையும் அறிவிக்க வேண்டிய அவசரமென்ன? கருமம் ஒருவிதமான ஆபத்துமின்றி நிறைவேறிப் போய்விட்டால் எல்லாவிதத்தாலும் மேன்மைதான். விசேஷமாக இந்தச் சாதியைப் பற்றிய பிரிவினைச் சமாச்சாரம் ஒரு காலத்திலும் வெளிவரப் போவதில்லை. அப்படிப்பட்ட நம்பிக்கையிருப்பதால் அவதிப்படாமல் விவாகத்தை இலகுவாய் ஒழுங்குபண்ணிக் கொள்ளலாம்" என்று சொன்னேன். என் சாதியோடு சம்பந்தப்பட்ட விஷயங்களை வாலிபனுக்குச் சொல்லி ஜீவிய கால முழுவதும் மறக்கக் கூடாத ஒரு துக்கத்தை அவன் மனதில் இறுத்த வேண்டுமென்ற எண்ணம் என் மனதில் உண்டு.

குஷும் தேவிக்கு இது விளங்கிக்கொண்டதோ இல்லையோ என்று எனக்குத் தெரியாது. சில வேளைகளில் கண்ணீர் விட்டு அழு

நம் நாட்டில் விவசாய அபிவிருத்தியை உத்தேசித்து விவசாயிகளுக்குப் பண வசதிக்கான காரியங்களைச் செய்ய வேண்டியது அவஸியத்திலும் அவஸியம்.

வாள். சில வேளைகளில் பேசாமலிருப்பாள். 'இப்படியாக நீ உன்னை வதைக்கிறதானால், இதைப்பற்றிப் பேசுவதிற் பிரயோசனமில்லை. நீ இதைப்பற்றி யோசித்துத் துக்கப்படாதே' என்று நான் ஆற்று மல் சொன்னால், அப்போது மனக் கலக்கமும் சஞ்சலமும் மேலும் அதிகமாய்க் குஷும் தேவிக்குக் காணப்படும். இவ்விதமான அவஸ்தையில் இச் சடங்கைப் பற்றி உம்முடன் பேசும்படி ஸ்ரீபதி சாட்டர்ஜியை அனுப்பி வைத்தேன். சம்மதம் கொடுக்க நீர் கொஞ்சமேனும் தாமதிக்கவில்லை. உடனே விவாகம் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன. ஆனால் விவாகத்தை நிறைவேற்றுவதற்குக் குறித்த நாளுக்குச் சமீபமான நாட்களில் மீளவும் குஷும்தேவி குழப்பத் துவங்கி விட்டாள். கொஞ்சமும் அவள் மனதைத் திருப்ப முடியாமற் போயிற்று. அவள் என்னுடைய கைகால்களைத் தடவிக் கையெடுத்துக் கும்பிட்டு 'பெரியப்பா, இந்தச் சடங்கு வேண்டாம்" என்று சொல்லி மன்றாடத் தொடங்கிவிட்டாள். "இது என்ன சர்வநாசமான பேச்சு! எல்லா ஒழுங்கும் செய்தாயிற்று. இதன் பிறபாடு என்ன காரணத்தைச் சொல்லிக் குழப்ப முடியும்?" என்று மிகுந்த துக்கத்தோடும் ஆத்திரத்தோடும் சொன்னேன். "பெண் சடுதியாக மரித்துப் போனாள் என்று ரிப்போர்ட் செய்து விடும்" என்று குஷும்தேவி சொன்னாள். "இந்த நிமிஷமே என்னை நீங்கள் வேறொரு இடத்திற்கு அனுப்பி வையுங்கள்" என்றும் கெஞ்சினாள். இதைக் கேட்டதும் நான் மிகுந்த துக்கமும் வெட்கமுமடைந்து 'சீச்சீ! நீ பேசுவது பெரிய அநியாயம். கொலைப் பழியாகும். தன் மங்கள விவாகத்தை யெண்ணி யெண்ணி மனம் பூரித்துக் குதூகலத்தோடிருக்கும் வாலிபனுடைய ஸ்திதி எப்படியாகும்? தன்னுடைய புருஷத்துவத்தின் பரம ஆசை நாளையதினம் கைகூடுமென்று ஆனந்த சுவர்க்க லோகத்தில் வாசஞ்செய்யும் அவனுக்கு இன்று நான் சடுதியாக உன்னுடைய மரண அறிக்கையை அனுப்பி வைப்பது பெரும் பாதகமல்லவா? காரியம் அப்படியே சம்பவித்தால் அடுத்த நாளே உனக்கு அவனுடைய மரண அறிக்கை அனுப்ப நேரிடுமென்பதை நீ யேன் நினைக்கக் கூடாது? இன்னும் அன்று சாயந்தரமே என்னிடம் உன்னுடைய மரண அறிக்கை வருமே! இந்த வயது சென்ற காலத்தில் இப்படியான மாதர்கள் வாலிபர்களுடைய மரண சம்பவங்களைக் கேட்கவும் துக்கமநுபவிக்கவும்தான் நான் இந்த உலகத்தில் இருக்கிறேன் என்று எண்ணுகிறாயோ!' என்று சொல்லிக் கலக்கப்பட்டு நின்

தேச ஜனங்களின் தரித்திரத் தன்மையை உத்தேசிக்கையில், தொழில் படிப்பைப் பரவச் செய்ய ஏதேனும் முக்கிய ஏற்பாட்டைச் சர்க்கார் செய்து முடிக்க வேண்டும். அந்த ஏற்பாடானது இத் தேச மக்களின் நிலைக்குப் பொருத்தமுள்ளதா யிருக்க வேண்டும்.

றேன். அதன் பிறகு குஷும் தேவியின் மனது இளகிவிட்டது. விவாகத்திற்குச் சம்மதித்து விட்டாள். சுபலக்கினத்தில் விவாகம் நிறைவேறிற்று. நானும் என்னுடைய உத்தரவாதத்திலிருந்து விடுதலை யடைந்தேன். பின்பு என்ன நடந்ததென்று உமக்கே தெரியும்" என்றார்.

பரிசங்கர் பேசிய விவரமெல்லாவற்றையும் ஹேமந்தா கவனமாய்க் கேட்ட பின் "எங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எல்லாவற்றையும் அக் காலத்தில் நன்றாய்ச் செய்து நிறைவேற்றி விட்டீர். அப்படி யிருக்க என்ன நியாயத்தினால் இப்பொழுது இச் சங்கதியை வெளியே பிரசித்தம் பண்ணினீர்" என்று கேட்டான். பரிசங்கர் அதற்கு மறு மொழியாக "உமது சிறிய மருமகளுடைய சடங்கு முற்றாக ஒழுங்காய் விட்டதென்று கேள்விப்பட்டேன். அப்போது என் மனதிலே பல யோசனைகள் எழுந்தன. முன்பு ஒரு பிராமணனுடைய சாதியை அழித்துவிட்டேன். ஆனால் அதை என்னுடைய உத்திரவாதத்தை நிறைவேற்றும்படி செய்தேன். திரும்பவும் ஒரு பிராமணனுடைய சாதியை அழிப்பதானால் என்னுடைய தருமம் நிவர்த்தியாகும். ஆனபடியால்தான் 'ஹேமந்தா சூத்திரப் பெண்பிள்ளையை விவாகஞ் செய்தா னென்பதற்கு வேண்டிய அத்தாட்சி உண்டு' என்று அவர்களுக்குக் கடிதம் எழுதினேன்" என்றார். ஹேமந்தா மிகவும் கஷ்டத்துடன் தன் கோபத்தை யடக்கி "இந்த ஸ்திரீயை நான் வேண்டாமென்று தள்ளிவிட்டால் அவளுடைய நிலை எப்படி யிருக்கும்? இந்த ஸ்திரீக்கு நீர் அடைக்கலம் கொடுப்பீரா?" என்று கேட்டான். அதற்குப் பரிசங்கர் "செய்ய வேண்டிய கருமங்களை நான் செய்து நிறைவேற்றி விட்டேன். வேண்டாமென்று தள்ளிவிட்ட மனைவிகளைப் பாதுகாப்பது என் வேலையல்ல" என்றார். ஹேமந்தா மிகுந்த வெறுப்போடும் ஆசனம் விட்டெழுந்தான். பரிசங்கர் வேலைக்காரனைக் கூவி யழைத்து "அடே ஹேமந்தா ஐயாவுக்கு ஒரு கிளாஸ் பதமான இளநீர் ஐஸ் போட்டு சீக்கிரத்தில் கொண்டு வா; வெற்றிலை பாக்கும் கொண்டு வா!" என்று ஏவினார். ஹேமந்தர் இந்த அன்பற்ற உபசாரத்தைப் பெற்றுக்கொள்ளா வண்ணம் கொஞ்சமேனும் தாமதஞ் செய்யாமல் விசனத்தோடு போய்விட்டான்.

IV.

அமாவாசை கழிந்து ஐந்தாம் நாள். மிகவும் அந்தகாரமான இரா. பக்ஷிகள் பாடவில்லை. குளக்கரையில் நிற்கும் ஆலமரம் கரிய

குடும்பத்தைக் காப்பாற்ற அசக்தர்கள்கூட பால்ய விவாகத்தைச் செய்துகொண்டு பெருங் குடும்பங்களைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கிறார்கள்.

கெட்டியான துணியின்மேல் விழுந்த கடுங் கரி நிற அடையாளத்தைப் போல ஒரே சமானமா யிருந்தது. தென்றல் காற்று மாத்திரம் இந்த அந்தகாரத்தில் கண்ணில்லாத குருடனைப் போலச் சுற்றிச் சுற்றி வீசிக்கொண்டிருந்தது. ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்திரங்கள் ஆழ்ந்த அமைதியுடன் அந்தகாரத்தின் மத்தியில் ஒரு பெரிய இரகஸியத்தை அறியும் வண்ணம் பிரயாசைப்படுகிறவர்கள் போலத் தோன்றின.

படுக்கை அறையில் தீபமேற்றப்படவில்லை. ஹேமந்தா ஜன்னலுக்குச் சமீபத்தில் கட்டிலின்மே லுட்கார்ந்து வெளியே இருட்டுப் பக்கமாகப் பார்த்துக்கொண் டிருந்தான். குஷும்தேவி தன்னுடைய இரு கரங்களாலும் நிலத்திலிருக்கும் புருஷனுடைய பாதங்களைத் தழுவி யணைத்துப் பாதங்களின் மேல் தன் முகத்தை வைத்துக்கொண்டு படுத்திருந்தாள். காலம் ஆழ்ந்த அமைதியான சமுத்திரம் போல அசையாமலிருப்பதாகத் தோன்றிற்று. எப்படியென்றால் ஒரு கீர்த்தி பெற்ற சித்திரக்காரன் காரிருளின் அந்தகாரத்தின் மேல் நித்திய காலமும் அழியாமலிருக்கக் கூடிய ஒரு படத்தை எழுதி வைத்திருந்தாற் போல நான்கு திசையிலும் பிரளயம். நடுவில் ஒரு நியாயவாதி. அவருடைய பாதத் தண்டையில் ஒரு குற்றவாளிப் பெண். இப்படியான ஒரு காட்சி புலப்பட்டது.

திரும்பவும் சோட்டுச் (செருப்பு) சத்தம் கேட்டது. ஹரிஹர் முகர்ஜி கதவண்டையில் வந்து "மிகவும் நேரம் சென்றுபோய் விட்டது. இன்னும் நேரம் கொடுக்க முடியாது. இந்த நிமிஷமே பெண்ணை வீட்டிலிருந்து துரத்திவிடு" என்றார்.

குஷும்தேவி இக் குரலைக் கேட்டவுடன் நித்தியகாலமும் அழியாத அன்பை ஒரு நிமிஷத்திற் பாராட்டி ஹேமந்தாவினுடைய இரு பாதங்களையும் மிகுந்த பக்தியுடன் இறுகப் பிடித்தாள். பாதங்களைக் கொஞ்சிப் பாதங்களின் தூசியை எடுத்துச் சிரமேற் பூசிப் பாதங்களைக் கைவிட்டுவிட்டாள்.

ஹேமந்தா எழுந்து போய் பிதாவுக்கு முன்னே தைரியமாய் நின்று "நான் மனைவியைத் தள்ளிவிட மாட்டேன்" என்றான். அப்பொழுது ஹரிஹர் முகர்ஜி சிங்கம் போலக் கர்ஜித்தெழுந்து "சாதியைக் குலைத்தழித்து விடுவாயோ" என்று அதட்டினார். ஹேமந்தா "நான் சாதி வித்தியாசம் பார்க்கிறதில்லை. இது நிஜம். பார்க்க வேண்டுமென்று நீர் பிடிவாதமாய் நிற்கிறதானால், உடனே வீட்டை விட்டு வெளியே நீர் போய்விடலாம்" என்று துணிவோடும் சொன்னான்.

இயற்கை யற்புதம்.

பண்டித திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்.

(ஆனந்தக் களிப்பு.)

அற்புதக் காட்சி யிதையா—கண்ணுக்
கானந்தம் ஆனந்தம் ஆனந்தமையா. (அ)

1. பொன்னிறம் காணுதே அண்ணா—ஒளி
பொங்கி மரகதம் மின்னுதே அண்ணா
செங்நெற் கழனியோ அண்ணா—இது
செல்வத் திருவா ழரங்கமோ அண்ணா (அ)

2. மேகம் படருது பாராய்—அதை
வேட்டையாடிச் சுடரோட்டுது பாராய்
ஏக மயமாக வேதான்—உல
கெங்கும் பரஞ்சோதி வீசுது பாராய் (அ)

3. செங்கதிர் செய்யும் விழலில்—மலர்த்
தேனை யுண்ணுதலையுதே வண்டு
தங்கு குளக்கரைத் தாரா—சுற்றித்
தன்னை மறந்து முழங்குதே ஐயா. (அ)

மாங்கனீஸ் உலோகமும் அதன் உபயோகங்களும்.

திரு. O. P. தேசிகன் அவர்கள்.

தொன்றுதொட்டு இந்தியாவின் உலோகக் கனிகள் உலகப் பிரசித்தி யடைந்திருக்கின்றன. உண்மையில் இந்தியாவின்மீது அடுத்தடுத்து அயல் நாட்டார் படையெடுத்து வந்திருப்பதற்கு இந் நாட்டின் கனி வளங்களே பெரும்பாலும் காரணமாகும். எனினும் அவை இன்னும் போதுமான அளவிற்கு அபிவிருத்தி செய்யப்படவில்லை. நமது தேசத்தின் இயற்கை வளங்களையும், உலோகக் கனிகளையும், இன்னும் பொருளாதாய மூலங்களையும் சரிவர அபிவிருத்தி செய்வதற்கான உண்மையான

முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமாயின், அதன் மூலம் நமது நாட்டுப் பொருளாதாரச் செல்வ நிலைமை எவ்வளவோ மேம்பாடடைவதுடன், புதிய புதிய கைத்தொழில் முயற்சிகள் தோன்றிப் பெருகி வளர்ச்சி யடைவதற்கு மிடமேற்பட்டு, அதன் பயனாக லக்ஷக் கணக்கான மக்களின் ஜீவனோபாயத்திற்கு வழியுண்டாகும். இவ் விஷயம் ஏற்கெனவே நூற்றுக் கணக்கான பிரசங்க மேடைகளினின்றும், பத்திரிகைகளின் வாயிலாகவும், திருப்பித் திருப்பிக் கூறப்பட்டு வந்துள்ளதுதான். மிகப் பண்டைக் காலத்திலிருந்தே நம் தேசத்து மன்னர்கள் உள்நாட்டு உலோக மூலாதாயங்களைத் தேசீய செல்வங்களாகக் கருதி, அவற்றை அரசாங்கத்தின் சொந்தச் சொத்துக்களாகப் பாவித்து, அவற்றை யபிவிருத்தி செய்வதன் பொருட்டு விசேஷமான ஆதரவும் ஆக்கமு மளித்து வந்திருக்கிறார்கள். சந்திரகுப்த மௌரியனுடையவும், அசோக சக்கிரவர்த்தியினுடையவும் அரசியலில், கனிஜ வர்க்கங்களை வெட்டியெடுக்கும் வேலைகள் தனி "அத்யக்ஷர்களின்" மேற்பார்வையில் நடைபெற்று வந்தன. சுமார் நூறு வருடங்களுக்கு முன்கூட, படிகாரம் போன்ற ரஸாயன வஸ்துக்களையும், க்ஷாரங்களையும் தயாரிப்பதிலும், தாமிரம், ஈயம், இரும்பு, எஃகு முதலிய உலோகங்களை உற்பத்தி செய்யுந் தொழிலிலும் நமது நாட்டினர் ஈடுபட்டிருந்ததால், உள்நாட்டுக் கைத்தொழில்கள் தமக்கு வேண்டிய சாதனங்களுக்காக இப்பொழுதைப்போல் பிறநாடுகளை யெதிர்பார்த்திருக்க வேண்டிய நிலைமை யேற்படவில்லை. ராஜபுதனம், சோடா நாக்பூர், வஜ்ரகரூர், பதிபூர் முதலிய விடங்களில் ஈயம், தாமிரம், இரும்பு, வைரம், தங்கம், மரகதப் பச்சை முதலிய இனங்களில் சுரங்க வேலைகள் நடந்துவந்தன. ஆனால் இப்பால் காலநிலை வெகுவாக மாறிவிட்டது. ஒரு காலத்தில் உலோகத் தொழிலில் உலகப் பிரசித்தி பெற்றிருந்த இந்தியாவில்—டில்லியிலுள்ள ராஜ தேவஸ்தம்பத்தைப்போன்ற பிரம்மாண்டமான இரும்புத் தூண்களை நாட்டிச் சற்றேறக்குறைய ஆயிரம் வருடங்களுக்குப் பிறகுங்கூடச் சீதோஷ்ண நிலையால் பாதிக்கப்படாமலும், துரு ஏறவொட்டாமலும் அதைப் பாதுகாக்கும் சூட்சுமத்தை யறிந்திருந்த இந்தியாவில்—இது போழ்து அதைக்குறித்துச் சிந்தித்துப் பார்ப்பாருமில்லை. அதற்கு மாறாக, உலோகத் தொழில் என்ற பெயரால் அழைக்கக்கூடிய தொழில் முயற்சிகள் பூர்வீக இந்தியாவில் நடைபெற்று வந்தனவா என்று கேட்கக்கூடிய துர்ப்பாக்கிய நிலைமை தோன்றியிருப்பது பரிதபிக்கத் தக்கதாகும். அன்றியும் எஞ்சியிருந்த அல்பசுவல்ப அடையாளமும் மேனாட்டு வியாபாரத்தினால் இருந்த இடந் தெரியாமல் நசித்துப் போய்விட்டதாகக் கூறவேண்டும்.

பாரத மக்களுக்குப் புதிய ரத்தமும் ரோஷமும் உண்டாக வேண்டும்.

இந்திய உலோகத் தொழிலின் தற்கால நிலைமை

மேனாடுகளில் லக்ஷக் கணக்கான முதலுடன் கூடிய கட்டுப்பாடான வர்த்தக ஸ்தாபனங்கள் பெருவாரியாகத் தமது உற்பத்தியைப் பெருக்கி வந்திருப்பதும், அவ் வுற்பத்தியாளர்களுக்கு இன்றியமையாத சாதனங்களாகிய ஸல்பியூரிக் ஆஸிட் (கந்தகத் திராவகம்), ஆல்களி (க்ஷாரங்கள்) போன்ற இரசாயன மூலப் பொருள்கள் யாவும் மிகவும் மலிவாகவும், சுலபமாகவும் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக விருப்பதாலும், அன்றியும் குறைவான கப்பற் கேழ்வு விகிதங்களும், போக்கு வரத்து வசதிகளும் அவர்களுக்கு அநுகூலமாக விருப்பதாலும், அதனுடன் வர்த்தக யூகமும் தொழிற் திறமையும் அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருப்பதாலும், இன்னோரன்ன பற்பல காரணங்களினால், இந்தியாவின் புராதனமான கைத்தொழில்கள் அவற்றின் கடுமையான போட்டியை யெதிர்த்துச் சமாளிக்க முடியாமல் அடியோடு அழிந்து பாழாய்விட்டன. ஆனால் சமீப காலமாக நமது தேசத்தில் ரயில்வேக்களின் பெருக்கமும், யந்திர விசையினால் இயங்கும் சணற் தொழிற்சாலைகளும், பருத்தி யாலைகளும், மற்றும் பலவித யந்திர ஸ்தாபனங்களும் ஏற்பட்டு, இலாபகரமாக நடைபெற்று வருவதும், மின்சார விசையின் உபயோகம் நாளுக்கு நாள் வெகு வேகமாகப் பாவிக்கொண்டு வருவதும், இரசாயன வஸ்துக்களுக்கும், உலோகப் பொருள்களுக்கும் இந் நாட்டில் பெரியதோர் தேவையை யுண்டாக்கி யிருக்கின்றன. அந்தத் தேவையானது நாளுக்கு நாள் அதிகரித்தவாறே யிருந்து வருகின்றது. இன்னும் சுவல்ப காலத்திற்குள்ளாக இந்தியாவினின்றும் மூலப் பொருள்களாகவே பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகி, அங்கிருந்து தீர்ந்த சரக்குகளாக—வர்த்தகப் பொருள்களாக இந் நாட்டிற்குத் திரும்பவும் ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களின் வியாபாரம் வெகுவாகக் குறைந்து மட்டுப்படலா மென்றும், அதன் மூலம் உள்நாட்டுக் கைத்தொழில்களில் பல இப்பொழுதைக் காட்டிலும் முன்னுக்கு வரக்கூடு மென்றும், இத் தேசத்து முதலாளிகளும், தொழிலாளிகளும் தமது ஊக்கத்தையும், தொழில் நுட்பத்தையும் கிரியாம்சையில் பயன்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வாய்க்கலா மென்றும் நம்புவதற் கிடமுண்டு.

இந்தியாவில் மாங்கனீஸ் கனி வேலை நடைபெறும் இடங்கள்

இந்தியாவின் உலோக மூலாதாயங்களைப்பற்றி 1890-ம் வருடத்திற்கும் முன்பாகவே சர்க்காரால் ஆராய்ச்சி (சர்வே) செய்யப்

இந்தியாவின் விடுதலைக்கு வியாபாரிகளின் ஆதரவு மிகுதியும் வேண்டும்.

பட்டுள்ளது. எனினும் நவீனமான கைத்தொழில்க ளனைத்துக்கும் இன்றியமையாததாகவுள்ள உலோகத் தொழில்களை யபிவிருத்திக்குக் கொண்டுவருவதன் பொருட்டு, அரசாங்கத்தார் போதுமான அளவிற்கு முயற்சியும் சிரத்தையும் எடுத்துக்கொண் டிருப்பதாகக் கூறமுடியாது. தவிரவும் பலமான அஸ்திவாரத்தோடும், ஏராளமான முதலோடுங் கூடிய அயல் நாட்டு வர்த்தகரோடு போட்டி போடக்கூடிய கட்டுப்பாடான வர்த்தகத் தொழில் ஸ்தாபனங்களொன்றும் நமது நாட்டி லிராததன் காரணமாக இத் தொழிலில் நம்மவர் யாதொரு முன்னேற்றமு மடையவில்லை.

அரசாங்க ஆராய்ச்சியின் வாயிலாக நம் நாட்டில் மாங்கனீஸ் உலோகத் தொழில் அபிவிருத்திக்கேற்ற சாதனங்க ளிருப்பதாக வெளிபாயிற்று. நமது தேசத்தில் மத்திய மாகாணத்திலும், மைசூர் சமஸ்தானத்திலும், சென்னை ராஜதானியிலும் மிகவும் உயர்ந்த ரகமுள்ள மாங்கனீஸ் உலோகம் கிடைக்கிற தென்பது பிரசித்தமான விஷயம். பம்பாய் மாகாணத்திலும், மத்திய இந்தியாவிலும் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. சென்னை மாகாணத்தில் விஜய நகரம் ஜமீனிலும், கஞ்சம் ஜில்லாக் கள்ளிக்கோட்டா எஸ்டேட்டிலும், பெல்லாரியிலுள்ள சாந்தார் குன்றுகளிலும் மாங்கனீஸ் சத்துள்ள மண் மிகுதியு மிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இன்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு விசாகப்பட்டணம் ஜில்லாவிலேயே முதன் முதலாக மாங்கனீஸ் சுரங்க வேலைக்கு ஆரம்பம் செய்யப்பட்டது. அந்த வருஷத்தில் 674 டன் மாங்கனீஸை வெட்டி யெடுக்கப்பட்டதாயினும 1900-ம் வருடத்தில் 92,008 டன்களாக உற்பத்தியானது பெருகிற்று. அவ் வருஷத்தில் மத்திய மாகாணங்களிலும் சுரங்க வேலைகள் துவக்கப்பட்டன. விசாகபட்டணம் கனிப் பிரதேசங்களைக் காட்டிலும் இங்கே அதிகமாக உற்பத்தி செய்வதற்குரிய சாதனங்கள் மலிந்திருந்தன. ஆதலின் பெருவாரியான உற்பத்தி அவ் விடத்திலேயே நடைபெற்று வருகிறது. எனினும் ஆரம்ப தசையில் ருஷ்யா தேசத்தின் கடுமையான போட்டியின் காரணமாக, இத் தொழில் எதிர்பார்த்த அளவிற்கு அபிவிருத்தி யடையவில்லை.

எதிர்பாரா அதிர்ஷ்டம்

எதிர்பாரா விதமாக இத் தொழிலுக்கு ஆதரவு ஏற்பட்டது இந்தியாவுக்கு நேர்ந்த அதிர்ஷ்டமென்றே கூறவேண்டும். 1905-ம்

ஒவ்வொரு மனிதனுக்கும் தனது தாய்நாட்டை வசிப்பதற்குத் தகுதியானதாகச் செய்யத் தன்னாலான முயற்சியைச் செய்யவேண்டும்.

வருடத்தில ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தமேற்பட்ட காலத்தில்தான் இந்திய மாங்கனீஸின் நேர்த்தியும், உயர்ந்த ரகமும் வெளிநாடுகளில் பிரபலமடைவதற்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. அதுகாலை கருங்கடல் பிரதேசத்திலிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி வியாபாரம் பெரிதும் தடைப்படுத்தப்படவே, உலக மார்க்கட்டுகளுக்கு இந்திய மாங்கனீஸ் உலோகத்தை யெதிர்பார்க்கவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை தோன்றலாயிற்று. அதுமுதலாகவே இவ் வியாபாரத்தில் முன்னேற்றமானது ஒரே நிதானமாக யிருந்துவருகிறது.

மாங்கனீஸ் உற்பத்தியும் ஏற்றுமதியும்

1904-ம் வருடத்திய உற்பத்தி 150,190 டன்களாகும். அவ் வருடத்திலிருந்து இச் சரக்கின் விலை ஏறுமுகமாகவே யிருந்தமையால் உற்பத்தியும் அதற்கேற்ப அதிகரித்தே வந்துள்ளது. 1905-ம் ஆண்டில் 247,427 டன்களும், அதற்கடுத்த வருடத்தில் சற்றேறக்குறைய அதைப்போன்ற இருமடங்கும்—அதாவது 571,495 டன்களும், 1907-ல் 902,291 டன்களும் வெட்டி யெடுக்கப்பட்டதாகக் கணக்கு விவரங்களால் தெரியவருகின்றன. 1909-ம் வருஷத்தில் விலைகள் சற்று கீழுக்கு இறங்கியதால் உற்பத்தி 642,675 டன்களாகக் குறைவுற்றது. 1910-ல் மீண்டும் 800,907 டன்களாகவும் 1911-ல் 670,299 டன்களாகவும் அதிக உற்பத்தி செய்யப்பட்டது. 1916-ல் சுமார் 1,487,026 பவுன்கள் மதிப்புள்ள 645,204 டன் மாங்கனீஸ் வெட்டி யெடுக்கப்பட்டதாக அவ் வருஷத்திய கணக்கு விவரங்கள் அறிவிக்கின்றன.

வர்த்தக உலகில் இந்திய மாங்கனீஸ் உலோகம் முதன்மையானதாகப் பாராட்டப்படுகிறது. அன்றியும் மற்ற நாடுகளைக்காட்டிலும் மாங்கனீஸ் சத்துள்ள பூமிகள் இந்தியாவிலேயே அதிகமாயிருக்கின்றன. 1913 முதல் 1919-ம் வருஷம் வரையில் இவ்வுலகத்தில் மாங்கனீஸ் உற்பத்தி செய்யும் நாடுகளனைத்தையும்விட 100-க்கு 33 விகிதம் அதிகமான மாங்கனீஸ் இங்கே வெட்டி யெடுக்கப்பட்டது. இந்த உற்பத்தியில் பெரியதோர் பகுதி மத்திய மாகாணச் சுரங்கங்களிலிருந்தே கிடைத்ததாகும். இவ் விடத்தில் வெட்டி யெடுக்கப்படும் சரக்கின் ரகம் வெகு நேர்த்தியானதாகவும், முதல்தரமானதாகவு மிருப்பதால், 500,600 மைல்கள் தூரத்திற்குப் பளுவான ரயில்வேக் கட்டணத்தையும், அதன்பிறகு அமெரிக்கா, ஐரோப்பா முதலிய தூர இடங்களுக்குக் கப்பற்

செல்வம் யாவரிடமும் சரியாய்ப் பாகிக்கப்படாமல், ஒருவரிடம் மிக்க அதிகமாகவும் இருந்தால் பணத்துடன் பணம் சேருகிறதே ஒழிய ஏழைக்கு வழியில்லை.

சார்ஜையும் செலுத்தவேண்டி யிருப்பினுங்கூட அவைகளுக்கு மேனு டுகளில் நல்ல கிராக்கி யிருந்துவருகிறது. இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மாங்கனீஸ் உலோகத்தில் 100-க்கு 90 பாகம் இவ்விடத்தி லிருந்தே வெட்டி யெடுக்கப்படுவ தாகக் கூறலாம். இந்தியாவைத் தவிர உலகத்தில் காகஸஸ் மலைப் பிரதேசத்திலும், அமெரிக்க பிரேஸில் நாட்டிலும், ஙைஜீரியாவிலும் மாங்கனீஸ் உற்பத்தி ஓரளவு நடைபெற்று வருகிறது. ஐரோப் பிய யுத்த காலத்தில் மேற்கூறிய பிரதேசங்களில் இவ்வுலோகத்தை வெட்டியெடுக்கும் வேலையை நிறுத்தவேண்டிய தாயிற்று. தவிர வும் இந்தியாவிலிருந்து வேற்று நாடுகளுக்கு அனுப்பப்படும் மாங்க னீஸ் ஏற்றுமதியின்மீதும் சர்க்காரால் தடை யேற்படுத்தப்பட்டது. யுத்த தளவாடங்கள் பெரும்பாலும் இரும்பினாலும் எஃகினாலும் செய்யப்படுவதால் அவைகளைச் செய்வதற் கின்றியமையாத மூலப் பொருளாகிய மாங்கனீஸ் உலோக சத்தானது சத்துரு தேசங்க ளுக்குக் கிடைக்கவொட்டாமற் தடுத்துவிட வேண்டுமென்று சர்க் கார் விரும்பியதே அதற்குக் காரணமாகும். 1921—1922-ம் வரு ஷத்தில் ஏற்றுமதியின்மீது ஏற்படுத்தப்பட் டிருந்த தடைகள் யாவும் நீக்கப்பட்டதும் கப்பர் சாதனங்களும் ஏராளமாக அகப் பட்டபடியால், அயல்நாட்டு ஏற்றுமதியும் பழையபடியே அதிகரிக் கத் தொடங்கியது. தவிரவும் ஜெர்மனி தேசத்து வியாபாரிகள் இந்திய மார்க்கெட்டுகளில் நுழைந்து இச் சரக்குக்கு ஏராளமான விலை கொடுத்து வாங்குவதற்கு முன்வந்ததும் அதற்கு ஓர் காரணமாகும். அதுமுதல் இப் பண்டத்தின் ஏற்றுமதியும் ஓரளவு வாக உயர்ந்தே வந்துள்ளது. 1922—23 முதல் இந் நாட்டிலி ருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மாங்கனீஸின் அளவையும், அதன் மதிப்பையும் அடியிற் கண்ட அட்டவணையில் காணலாம்.

Manganese ore Exports.

வருடம்	Quantity of Exports ஏற்றுமதியின் அளவு டன் கணக்கில்	Value மதிப்பு ரூ.
1921—22	519,497	35,540,000
1922—23	805,302	48,369,000
1923—24	751,763	57,825,000
1924—25	639,210	71,892,000

மனிதன் மதத்தை அனுசரிக்கும் நோக்கம், அவன் உயர்தரமாய் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்பதே. ஆனால் இப்பொழுது உலகத்தில் அனுசரிக்கப்படும் மதங்கள் பிரிவினையையே உண்டாக்குகின்றன.

பெர்ரோ—மாங்கனீஸ்.

1920—21	3833	டன்கள்
1923—24	69	,,
1924—25	1567	,,

மாங்கனீஸ் உலோகமும் அதன் உபயோகமும்

இந்திய மாங்கனீஸ் உலோகத்தை ரஸாயன ரீதியாகப் பரீ க்ஷித்துப் பார்த்ததில் அதில் 48 முதல் 50% மாங்கனீஸும், 7 முதல் 8% இரும்பு சத்தும் அடங்கியிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறது. இந்தச் சரக்கு இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் முதலிய இடங்களுக்கே பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப் படுகிறது. ஆங்கு மாங்கனீஸ் எஃகு, மாங்கனீஸ் வெண்கலம் போன்ற சாமான்களைத் தயாரிப்பதில் இவ் வஸ்து மிகவும் உப யோகமுள்ளதா யிருக்கிறது.

தற்காலத்தில் எவ்விதமான எஃகு செய்தாலும் மாங்கனீஸ் உலோகம் அதில் கலவாமல் இருக்க முடியாது. அமெரிக்காவி லுள்ள சிலிப் பிரதேசத்திலிருந்து வெட்டி யெடுக்கப்படும் மாங்க னீஸுக்கடுத்த படியாக இந்தியாவில் தார்வார் பிரதேசத்தில் வெட்டி யெடுக்கப்படுவதே முதல் தரமானதாகவும் மிகவும் சிறந்ததாகவும் கருதப்படுகிறது. மாங்கனீஸ் எஃகு என்பது மிகவும் உறுதியுள் ளது, கடினமானது. மிகவும் உறுதியாகவும், நீடித்த காலம் உழைக்க வேண்டியதாகவுமுள்ள யந்திரங்கள் யாவும் மாங்கனீஸ் எஃகினாலேயே இதுபோழ்து செய்யப்படுகின்றன. "பிரோலு சைட்" என்றும் "மாங்கனீஸ்—ஆக்ஸைட்" என்னும் பெயரினால் வழங்கும் வஸ்துவை "ப்ரோமைன்" "க்ளோரைன்" முதலிய ரஸா யன வஸ்துக்களைத் தயாரிப்பதற்காக உபயோகிக்கிறார்கள்.

இரும்பு செய்வதற்கடுத்த படியாக இரஸாயன வஸ்துக்கள் பலவற்றைத் தயாரிப்பதில் மிகவும் உபயோகமுள்ளதாக விருப் பதே இவ் வுலோகத்தின் விசேஷமாகும். மாங்கனீஸ்—பொராக் ஸைட் என்னும் வஸ்துவானது கண்ணாடித் தொழிற்சாலைகளில் கண்ணாடிகளைச் செய்யும்போது, அவற்றில் தோன்றும் பச்சை நிறத்தைப் போக்குவதற்காக மிகுதியும் உபயோகிக்கப்படுகிறது. அன்றியும் கண்ணாடிகளுக்கும் பீங்கான் பாத்திரங்களுக்கும் ஓர்

நம்மைப் போல் எல்லா விதங்களிலும் நல்லவர்களாயுள்ள கோடிக் கணக்கான பேர்களைத் தீண்டாதார் என்று ஒதுக்கி வைத்திருக்கும் நமது சமூக ஏற்பாடுகளுக்கு நாமே காரணம்.

வகைப் பழுப்பு வர்ணம் கொடுப்பதற்கும் அது பயன்படுகிறது. "ஸோடியம்–மாங்கனேட்," "பெர்மாங்கனேட்" ஆகிய இரு ரஸாயன வஸ்துக்களின் சேர்க்கையே "காண்டிஸ் ப்ளுயிட்" (Condy's Fluid) என்னும் வர்த்தகப் பெயரால் மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யப்படுகிறது. அசுத்த ஸ்தலங்களைச் சுத்திகரிக்கும் வேலைகளுக்கு அந்தத் திராவகம் மிகுதியும் பிரயோஜனமுள்ளதாக விருக்கிறது.

சுரங்கங்களில் வேலை நடைபெறும் விதம்

சமீப காலம் வரையில், (Open cast) முறையில் பூமியின் மேற்பரப்பிலேயே வெட்டியெடுக்கும் வேலைகள் நடைபெற்று வந்தன. ஆனால் மேற்பரப்பிலிருக்கும் மாங்கனீஸ் சத்துள்ள மண்ணெல்லாம் அநேகமாய் வெட்டி யெடுக்கப்பட்டு விட்டதால், சுரங்க வேலைகளுக்குப் பலவிடங்களிலும் ஆரம்பம் செய்யப்பட் டிருக்கின்றன. "மெஷின் டிரில்" என்னும் துவாரமிடும் கருவிகளைக்கொண்டு பூமியில் தோண்டியும், வெடிமருந்து வைத்தும், மாங்கனீஸ் கலப்புள்ள மண்ணை வெளியேற்றுகிறார்கள். அதன் பிறகு அம் மண்ணை யந்திரங்களில் நயமாகத் தூள் செய்து, அப்பால் ரகவாரியாகச் சலிக்கும் யந்திரங்களுக்கு அனுப்புவார்கள். மிகவும் நயமாகவும் தூளாகவும் பொடியாக்குவதனால், யந்திரங்களின் உதவியினால் அதைத் தூற்றி யெடுக்கும்போது அதிலுள்ள களிமண், பருக்கைக் கற்கள்போன்ற அன்னிய பதார்த்தங்களை அப்புறப்படுத்துவது சுலபமாகின்றது. அதன்பின் இத் தூளைச் சாக்குகளில் கட்டிப் பிரபலமான துறைமுகங்களுக்கு ரயில் மார்க்கமாக அனுப்புகிறார்கள். உள்நாட்டின் பற்பல பகுதிகளிலிருந்தும் அனுப்பப்பெறும் மாங்கனீஸ் தினுசுகள் இத் துறைமுகங்களில் ஒன்றாகக் கலந்து விடப்படுகின்றன. இந்த முறையில் தயாராகும் மாங்கனீசுக்கு "ஓரியண்டல் மிச்சர்" என்று வர்த்தக உலகில் பெயர் வழங்குகிறது. இந்தச் சரக்கு ஒரே சீராகவும், நேர்த்தியாகவு மிருப்பது பற்றி வியாபாரிகள் அதற்கு அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு முன்வருகிறார்கள்.

மைசூரில் ஒக்லே பௌடன் (Oakley Bowden) கம்பெனியாரின் ஆதரவில் சுரங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. மத்திய மாகாணச் சுரங்கங்களையும் ஓர் கம்பெனியாரே நிர்வகித்து வருகிறார்கள். இருபத்து ஐந்து ஆண்டுகளாக இவ்விரண்டு கம்பெனியாரே பெரும்பாலும் இவ் வியாபாரத்தின் ஏகதேச பாத்ய

நம்மிடையேயுள்ள பல சமூக வேற்றுமைகளுக்கு அரசாங்கத்தார் எவ்விதத்திலும் பொறுப்பாளிகள் அல்லர்.

தையை வகித்துவந்திருப்பதாகக் கூறலாம். ஆனால் ரயில்வேக் கட்டணங்களும், போக்குவரத்துச் சார்ஜுகளும் மிகவும் அதிகமாக விருப்பதனால், இக் கைத்தொழிலின் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக டாடா இரும்புத் தொழிற்சாலையாரும், இந்திய எஃகுத் தொழிற்சாலையாரும் இந்திய மாங்கனீஸ் உலோகத்தை ஓரளவு விலை கொடுத்து வாங்கி, "பெர்ரோ–மாங்கனீஸ்" என்னும் உலோகத்தைத் தயாரித்து வருகிறது பெரிதும் பாராட்டத் தக்கதாகும். மேற்கூறியவைகளைத் தவிர நமது மாகாணத்தில் சிறிய முதலுடன் இவ் வியாபாரத்தி லீடுபட்டிருக்கும் தனிப்பட்ட நபர்களும், வர்த்தக ஸ்தாபனங்களும் இரண்டொன்று காணப்படுகின்றன. ஆனால் பெரும்பாலும் சுரங்க வெட்டு வேலைகளுக்கு ஆரம்பம் செய்யாமல் மேற்பரப்பில் வெட்டியிருப்பதுடனேயே வேலைகள் யாவும் முடிந்துவிடுகின்றன. இத் தொழிலில் கடுமையாகப் போட்டி போடக்கூடிய பெரிய வர்த்தக ஸ்தாபனங்களொன்றும் இதுவரையிலும் முன்வாராததால், தற்காலிகமாக இத்தொழில் இலாபமளிக்கக் கூடியதாகவே யிருந்துவருகிறது. எனினும் புதிய ஆராய்ச்சி முறைகளைத் தழுவியும், சாஸ்திரீய முறைகளை யனுசரித்தும் உற்பத்திச் செலவுகளை மட்டுப்படுத்தி, இவ் வியாபாரத்தை நடத்தாவிடில் வருங்காலத்தில் இப்பொழு திருப்பதைப்போலவே இலாபகரமானதாக யிருக்கக் கூடுமென்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை.

இதர உலோகங்கள்

மாங்கனீஸ் உலோகத்தைத் தவிர "க்ரோம் இரும்பு," "மாக்னஸைட்" முதலிய உலோக வகைகளும் நமது நாட்டில் கிடைக்கக் கூடுமென்று கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது. இவ் வுலோகங்களுக்கும் இரஸாயன உலகில் நல்ல கிராக்கி யிருந்து வருகின்றது. மேற்கூறியன யாவும் உயர்ந்த ரகமான உலோக வர்க்கத்தைச் சேர்ந்தவை. "சேலம் மாக்னஸைட்" என்னும் வஸ்து வெகுதூரத்திற்கப்பாலுள்ள குமார்தூபிக்கும் அனுப்பப்படுகிற தென்றால் அதனுடைய அருமையைப்பற்றிக் கூறவேண்டியதில்லை, இரும்பு உலைக்கூடங்களுக்கு அவசியமாக வேண்டியிருக்கும் நெருப்பினால் சேதமடையாத செங்கற்களைச் செய்வதற்காக டாடா இரும்புக் கம்பெனியார் அவைகளை மிகுதியும் வாங்குகிறார்கள். சாயத் தொழிலிலும் தோல் பதனிடுந் தொழிலிலும் "க்ரோமியம் உப்புகள்" எவ்வள

நாம் நம்முடைய உண்மையான சக்தியைக் காட்டினாலன்றி அந்நியரிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ள முடியாது.

உபயோகமாக யிருக்கின்றன வென்பதைக் குறித்து எழுதுவது அதிசயோக்தியாகும்.

அரசாங்க ஆதரவு

இந்திய சர்க்கார் இதுகாறும் இக் கைத்தொழிலின் அபிவிருத்தியில் அசிரத்தையாக யிருந்துவந் திருப்பதைப்போ லல்லாமல் இனியேனும் "பைக்ரோமேட்டு"களையும், "பெர்மாங்கனேட்டு"களையும் தயாரிப்பதில் தங்களுடைய ஊக்கத்தைச் செலுத்துவார்களேயானால், அதனால் எவ்வளவோ பலனுண்டு. ஆனால் இதுவரையிலும் சர்க்காரின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட தொழில் முயற்சிகள் யாவும் நஷ்டத்திலேயே முடிவுற்றிருக்கின்றன (வேலை செய்து வருகின்றன) வென்பது ஓரளவு உண்மையேயாயினும், அக் காரணமொன்றையே முன்னிட்டு நூதனமான கைத்தொழில் பரீக்ஷைகளில் இறங்குவதற்குச் சர்க்கார் முற்படாம லிருப்பது தவறாகும்.

உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு ஆதரவளிப்பதும், வழிகாட்டுவதும் அரசாங்கத்தின் முக்கியமான கடமைகளில் ஒன்றாகும். ஒவ்வொரு அரசாங்கத்திலும் இவ் வுத்தேசத்தை நிறைவேற்றி வைப்பதற்காகச் சட்ட திட்டங்கள் செய்யப்பட் டிருக்கின்றன. ஆரம்ப தசையிலுள்ள கைத்தொழில்களுக்கு நீண்ட காலக் கடன்களையளித்து உதவுவது அரசாங்கத்தாரின் மறுக்க முடியாத கடமையேயாம். எனினும் இத் துறையில் அவர்கள் அலட்சிய புத்தியே காட்டிவந் திருக்கிறார்கள். மாங்கனீஸ் கனி வேலைகள் இந்தியாவின் முக்கியமான கைத்தொழில்களில் ஒன்றாக இடம் பெற்றிருப்பதுடன், வருங்காலத்தில் வார்ப்பட இரும்புத் தொழிற்சாலைகளைப்போன்ற பெரிய பெரிய தொழில் முயற்சிகள் ஸ்தாபிக்கப்படவும் இடமிருக்கிறது. அதுகாலை மின்சார விசையின் உதவியால் இயங்கும் தொழிற்சாலைகளில் முதல் தரமான மாங்கனீஸ் உலோகமும், எஃகும் உற்பத்தியாவதுடன், பிற நாடுகளுக்கும் அவை தாராளமாக ஏற்றுமதி செய்யப்படக் கூடும். ஆதலின் மாங்கனீஸ் கனி வேலைகள் யாதொரு விக்னமுமின்றி இலாபகரமாக நடைபெறுவதற்கு இன்றியமையாத யந்திர சாதனங்களை வாங்குவதற்காக முன்வரும் வியாபாரிகளுக்கும், முதலாளிகளுக்கும் அரசாங்கத்தார் பெருந்தொகையைக் கடனாக உதவியும், ரயில்வேக் கட்டணங்களைக் குறைத்தும், ஏற்றுமதித் தீர்வை விகிதங்களில் சலுகை காட்டியும், இத் தொழிலிற்கு ஆக்கமளித்துப் செயலளவில் தமது அநுதாபத்தை வெளிக்காட்டுவார்களாயின் மாங்கனீஸ் உலோ

கோஷா முறையை நாம் ஒழிக்க வேண்டும். புருஷர்களுக்குத் துணை செய்யவே ஸ்திரீகள் ஏற்பட்டிருக்கிறார்கள்.

ஏழைச் சின்னான்.

பண்டித ஜனாப். K. அப்துல் சுகூர் அவர்கள்.

கன்னங் கரிய இருளிலே—கடுங்
காற்று மழையுங் கலந்திடச்
சின்னஞ் சிறிய குடிசையில்—ஏழைச்
சின்னா னழுது புலம்புறான் (1)

பாயு மில்லாத நிலத்தினில்—பெற்ற
பாலக னோடிவன் பத்தினி
நோயும் வறுமையுஞ் சேர்ந்திட—மேனி
நொந்து புண்ணாகிக் கிடக்குறாள் (2)

கொட்டும் மழைத்தண்ணீர் வீட்டுளே—புகக்
கூரைகள் காற்றில் பறந்திடத்
தொட்ட மனைவியைத் தோளிலும்—பெற்ற
சுதனை யிடுப்பிலுந் தாங்கியே (3)

பண்ணைக் கெசமானின் வீட்டையே—மின்னல்
பார்த்து நடந்தங் கடுத்துமுன்
திண்ணையிலே தன் மனைவியைப்—பெற்ற
சேயொடு மெள்ளக் கிடத்தினான் (4)

கத் தொழில் இந் நாட்டில் நீடித்து, நிலைத்து நிற்கக்கூடிய கைத்தொழில்களில் ஒன்றாக விளங்குவதுடன், லக்ஷக் கணக்கானவர்களின் பிழைப்பிற்கும் மார்க்க மேற்படுமென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அன்றியும் ஏற்கனவே இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் சாஸ்திரீயமான புதிய முறைகளைக் கையாண்டால் மாங்கனீஸ் ஏற்றுமதி வியாபாரத்தில் உலகத்திலே முதற் பதவியை இந்தியா வகிக்கக் கூடுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இப்பொழுதும் வருஷவாரியில் 170 லக்ஷம் பவுன்களுக்கதிகமான மாங்கனீஸ் உலோகம் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதென்ப தொன்றே இந்த இனத்தில் எவ்வளவு வியாபாரம் நடந்து வருகிறதென்பதை விளக்குவதற்குப் போதுமானதாகும்.

மேல் நாடுகளுக்கு நமது விளை பொருள்களை அனுப்பிவிடுவதால், பூசாரம் குறைந்துகொண்டு வருகிறது. நமது நாட்டு ஜனங்களுக்கெல்லாம் பூசாரந்தான் தொழிலுக்கு முதல். பூசாரந்தான் ஆஸ்தி.

யாரது திண்ணையி லென்றொரு—பெரும்
ஆங்காரச் சத்தம் கிளம்பிடப்
பாரது யாரவனென் றொரு—பெண்
பாவையின் சத்தம்பின் வந்திடக் (5)

கதவு திறந்திடச் சாமிநம்—வயல்
காக்கும் சின்னானுங்கோ சாமியே
மதகு திறந்ததுபோல் மழைத்—தண்ணீர்
வந்து குடிசை புகுந்திடக் (6)

கூரை பறந்தது காற்றிலே—நோய்
கொண்ட மனைவி மகனையும்
வாரியெடுத் துங்கள் திண்ணைக்கே—சாமி
வந்தோ மிரவிங்கு தங்கவே (7)

என்றதைக் கேட் டெசமானுமே—அட
ஈனப் பறப்பய லிப்பவே
கொன்று தொலைக்கிறேன் பாருன்னை—இங்கு
கொஞ்சமும் அஞ்சாது வந்தனை (8)

தீண்டத் தகாதவன் நீயிங்கே—எங்கள்
தெருவுக் குள்ளே வரலாகுமா
ஏண்டிசுமா அங்கு நிற்குறாய்—அந்த
ஈட்டித் தடியை எடுத்துவா (9)

மழையால் குடிசை விழுந்தது—சாமி
மனைவியும் நோயால் வருந்துறாள்
குழந்தை முகத்தைப் பாரையனே—எங்கள்
கோலமும் இப்படி யானதே (10)

கஞ்சி குடித்தொரு மூன்றுநாள்—இடை
கட்டத் துணிவேறு இல்லையே
இஞ்சி மருந்திற்கு வாங்கவே—காசு
இல்லையே என்செய்வோம் சாமியே (11)

கிழக்கு வெளுப்பதன் முன்னமே—நாங்கள்
கிளம்பி விடுகிறோம் சேரிக்கே
வழக்குத் தொடுக்கா தீரையனே—இங்கு
வந்தோம் பெருமழைக்(கு) ஒண்டவே (12)

பாமர ஜனங்களுடைய அறியாமைக்கும் வறுமைக்கும் அரசாங்கமே காரணம்.

ஏண்டா பறையா நான்சொல்குறேன்—உனக்
கின்னமுங் காதில் விழலையா
தீண்டாதோன் ஓடு ஓடென்னவே—ஏழைச்
சின்னானை நையப் புடைத்தனன் (13)

திண்ணையை விட்டுநீ யிப்பவே—நாயே
சேயொடு தாயுஞ் செல்லாவிடில்
கண்ணைப் பிடுங்குவே னென்றலும்—சின்னான்
கண்ணீ ருகுத்து நடுங்கியே (14)

மீண்டும் மனைவியைத் தோளிலும்—மகனை
மெல்ல இடுப்பிலுந் தாங்கியே
நீண்ட மழையில் நடக்கையில்—பாதா
நில்லெனக் கேட்டுத் திரும்பினன் (15)

அன்னை அருள்ஒளி காண்டலும்—சின்னான்
ஆவெனத் தன்னை மறந்தனன்
பொன்திகழ் மேனி ஒளியிலே—அருள்
பூத்த முகத்தினைக் கண்டனன் (16)

எத்துயர் கொண்டனை மைந்தனே—மக்கள்
இன்னமுந் தீண்டாமைப் பேயினால்
சித்தங் கலங்கி ஓர்தாயினால்—பெற்ற
சேய்களைத் தீண்டாதோ ரென்கின்றார் (17)

ஏழைகள் கண்ணீரைப் பாராமல்—மக்கள்
இன்னமுந் தூங்கினால் என்செய்வேன்
கோழைக ளல்லவே பாரதர்—மனங்
கொண்டா லிப்பேயைக் கொல்லார்களா (18)

அருமை மகனே நீவாவெனச்—சின்னான்
ஆடுங் கரத்தினைப் பற்றியே
அருகு நவமணி மாளிகை—உள்
அழைத்துச் சென்றா ளெங்கள் "பாரதி." (19)

நடந்து போன சம்பவங்களைப் பற்றிக் கூறும் சரித்திரங்களிலிருந்து நாம் பாடங் கற்றுக்கொள்கிறோம்.

பேச்சு.

திரு. V. அனந்தகிருஷ்ணன் அவர்கள், B. A.

உலகம் இப்பொழுது இருக்கும் நிலையிலே, மக்களுக்கு வழங்கப்படும் கல்வி வாழ்க்கைத் துறையில் பயனற்றதாயிருக்கிறது. வாழ்க்கைப் போரில் வெற்றி யடைய முயலும் கல்விமான்களின் தொகை சிறிதன்று. இவர்களெல்லாம் தம் மனத்துள்ளே பெருஞ் சக்திகளைத் தாங்கி நிற்கிறார்கள்.

பின் அவர்கள் தோல்வியின் காரணந்தான் என்ன? அவர்களின் சைதன்யத்துள்ளே பொதிந்து கிடக்கும் சக்தி வெளியே வந்து வினை புரியாது தயங்கிக் கிடப்பானேன்? எப்பொழுது இச் சக்தியின் அருவிகள் தட்டுத் தடையின்றித் தாமே வெளிப்படும்?

இரஸாயன சாஸ்திரி பல பொருட்களையும் அக்கக்காக அலசி அவைகளின் மூலாதாரப் பொருள்களை யடைகிறான். அவ்விதமே நாமும் நமது வெற்றி தோல்விகளின் காரணங்களைப் பகுத்து ஆராய்ந்து வரையறுக்கலாம். காரணத்தை யறிந்து கொண்டால் காரியத்தில் அறிவோடு இறங்கி வெற்றி பெறலாம்.

சித்தி—பயன், இது தான் உழைத்தின் காகம். புத்திமான் இந்த லக்ஷியத்தோடு வேலை செய்கிறான். வெற்றி பெறுகிறான். மூடனோ வெற்றுரைகளில் காலங் கழிக்கிறான். சில வேளைகளில் அந்த ஆத்மாவின் பேச்சுக்களில்கூட மணம் கமழ்வதுண்டு! ஆனால் சொற்களைச் செயல்களால் அரண் செய்யமட்டும் அவனால் முடிவதில்லை.

வருங்காலத்திலே சொற்களைக் காட்டிலும் செயல்களே பிரதானியம் பெறும். பேச்சாளர்களை யெல்லாம் ஆட்டு மந்தைகளைப் போல மேய்க்கப் போகிறான் கருமவீரன். பேச்சாளி தன் சொன்மாரிகளின்றே வெளியேற வகை தெரியாது விழிக்கப் போகிறான். செயல் திறம் பெற்றவனே முன்னே சென்று ஏதாவதொரு பெருஞ் செயலைச் செய்து முடிக்கப் போகிறான்.

வாசகர்களே! உங்கள் மனக்கண்ணாடிகளில் முகத்தைப் பாருங்கள். நீங்கள் சொல்லம்புகளைச் சோனாமாரியாகப் பொழிவதுண்டா? பேச்சே புருஷார்த்த மெனக் கருதுகிறீர்களா? அப்படியானால் வருங்கால வாழ்க்கைக் கப்பலில் உங்களுக்கு உட்காருவதற்கு இடம் கிடையாது என்பதை நன்கு தெரிந்துகொள்ளுங்கள்.

அமெரிக்காவில் பத்திரிகைகள்.

திரு. ஸ்ரீநிவாஸ் அவர்கள்.

வட அமெரிக்காவில் ஐக்கிய மாகாணம் ஒரு சுயாதீனமான நாடு. இதில் ஐரோப்பாவில் இருக்கும் ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய சுயாதீன நாடுகளில் வழங்கி வரும் பாஷைகளைப் போல் வெவ்வேறல்ல. ஐரோப்பாவின் பற்பல பாகங்களில் இருந்தும் பற்பல பாஷைக்காரர்கள் அங்கு சென்று குடியேறினாலும், நம் தேசத்து ராஜ பாஷையாகிய ஆங்கிலமே அந் நாட்டாரின் பொதுப் பாஷையாக இருக்கிறது. ஆகையால் அவர்களின் அருமை பெருமையான காரியங்களைப் பத்திரிகைகளின் மூலமாக நாமும் எளிதில் அறியக்கூடியதாயிருக்கிறது.

ஒரு சுயாதீன தேசம் தன் சுயாதீனத்தை ஸ்தாபிக்க எந்த விதத்திலும் தன் குடிகளுக்கு அறிவைப் புகட்டியே தீரவேண்டும். எந்த குடியரசும் படிப்பு வாசனையின்றி நிலைநிற்க மாட்டா. இந்த சத்தியத்தை அந்தக் குடியரசு நாட்டார்கள் புகட்டி வருகிறார்கள். சுயாதீனம் என்ற பதத்தை நன்மைக்கும் தீமைக்கும் பிரயோகிக்கலாம். சுயாதீனத்தின் அர்த்தத்தை அறியாமல் அமெரிக்காவில் அநேகர் தங்களிஷ்டப்படி பேசவும் செய்யவும் துணிபு கொள்ளுகிறார்கள். உண்மையிலேயே சுயாதீனமான மனுஷனை மனுஷனால் செய்யப்பட்ட எந்த சட்டமும் ஒரு நிபந்தனைக்குள் கொண்டுவர முடியாது. ஆகையால் அமெரிக்கா சர்க்கார் தன் குடிகள் அறிவில் முன்னேறும்படியாக அநேக பத்திரிகைகள் தேசத்தில் வெளிவரவும், வெளி நாட்டின் பத்திரிகைகள் தேசத்திற்கு வரவும் வசதி செய்து வைத்திருக்கிறார்கள். உதாரணமாக பாஸ்டன் புஸ்தகசாலையை (பப்ளிக் லைப்ரரி) எடுத்துப் பார்ப்போமானால், அவ்விடத்தில் உலகத்தில் அச்சிடப்படும் எல்லாப் பத்திரிகைகளும் கிடைக்கும். அதே மாதிரியாகப் பற்பல இடங்களில் பத்திரிகைகள் வாசிப்பதற்கும் ஒழுங்கு செய்திருக்கிறார்கள்.

ஜனங்களுடைய விருப்பத்தைக் கவனிக்காத அரசாங்கங்கள் பல வீழ்ந்து போயின.

ஐக்கிய மாகாணத்தின் ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தது ஒவ்
வொரு தினசரிப் பத்திரிகை வெளியேறி வருகிறது. அவற்றில்
நியூயார்க் டைம்ஸ் அல்லது பாஸ்டன் போஸ்ட் அல்லது சிக்காகோ
டெய்லி பத்திரிகைகளை எடுத்து வாசித்தால், தேசம் முழுவதும்
நடக்கும் விஷயங்களைக் காணலாம். இந் நாடானது சுயாதீனமான
படியால், தாராளமாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இடம்
கொடுக்கிறது. ஜனங்கள் சுயாதீனமாக ஜீவிக்கப் பத்திரிகைகள்
வழி வருகின்றன. எப்படியென்றால், தங்கள் நாட்டிற்கு தலைவர்
தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் குடிகள் தங்கள் மனச்சாட்சியையும்
அறிவையும் உண்மையாக உபயோகிக்கத் தூண்டுகின்றன. தேர்
தல் சமயத்தில் ஒவ்வொரு பாகத்திலுள்ளவர்களுக்கும் பத்திரிகை
ஆபீஸ்களில் விஷயங்கள் டெலிபோன் மூலமாக நிமிஷத்திற்கு நிமி
ஷம் வெளியிடப்படுகின்றன. நம் தேசத்தில் தாம்பூலம் தரித்துக்
கொள்ளுவதில் எவ்வளவு ஆவலுள்ளவர்களாய் நம் ஜனங்கள் இருக்கி
றார்களோ, அதைப் போலவே பத்திரிகைகள் வாசிப்பதில் அந் நாட்
டார் பிரீதி உள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆணும்
பெண்ணும் தன் சுய புத்தியை உபயோகித்து வருகின்றனர். பத்
திரிகைகளில் காணப்படும் உண்மைகளைத் தங்கள் நடக்கைகளிலும்
கொண்டுவரப் பிரயாசைப்படுகின்றனர். ஒவ்வொரு குடும்பமும்
இரவில் நெருப்பண்டை குளிர்க்காக உட்கார்ந்து ஒவ்வொரு பத்தி
ரிகைகள் வாசிக்கிறார்கள். பத்திரிகைகளில், தாயானவள் மகளுக்கு
வேண்டிய விஷயங்களை எடுத்துக் காண்பிக்கிறாள். அப்படியே
தகப்பனும் தன் மகனுக்குச் சொல்லுகிறான்.

நான் அமெரிக்கா தேசம் சென்று பாஸ்டன் நகர் சேர்ந்தவுடன்
பத்திரிகைக்கு எழுதுகிறவர் ஒருவர் என்னைப் படம் எடுத்துப்
பத்து நிமிஷம் போல் பல சங்கதிகளைப் பற்றி என்னிடத்தில் பேசி
னார். என் சிநேகிதர்கள் அவரிடம் பணம் கேட்கும்படியாக என்னை
ஏவினார்கள். ஆனால் எனக்கு சங்கதி தெரியாது., 15, 20 டாலர்
கள் கொடுப்பார்களாம். காலையில் கொடுத்த விஷயம் அன்று
மாலையே வெளிவந்துவிட்டது. அதி விரைவில் பத்திரிகைகள் வெளி
வந்துகொண்டே இருக்கின்றன.

பத்திரிகைகளின் மூலமாக அமெரிக்கர் அதிக அறிவாளிகளாக
இருக்கிறார்கள். கடவுள் அளித்த அறிவை எவ்வளவு தூரம் நல்
வழியில் உபயோகிக்கலாமோ அவ்வளவாய் உபயோகித்து மனுஷனை
மனுஷன் மதித்து மனுஷனுக்கு மனுஷன் உதவி செய்து நல்ல
விதமாய் நடந்து கொண்டு மனுஷ ஜென்மத்தை முன்னேற்றுவதே

நமக்குள் ஒற்றுமை இல்லாததால் தான் அன்னிய நாட்டாரும் பல
தேசப் பொருள்களும் இங்கு வர நேர்ந்தது.

தங்கள் சுயாதீனத்தின் மேன்மை என்று நன்குணர்ந்து ஜீவிக்கிறார்
கள். சத்தியத்திற்குக் கீழ்ப்பட்டு நீதியை நடப்பிப்பது சுயாதீனம்
என்றும், சர்க்காருக்கும், மனுஷருக்குப் பயந்து அநீதியை நடப்
பிப்பது அடிமைத்தனமென்றும், பகிரங்கமாகச் சொல்லுகிறார்கள்.

பத்திரிகைகளின் மூலமாக தேசத்தின் நிலைமையைப் பற்றி
பகிரங்கமாகத் தங்களுடைய அபிப்பிராயத்தைக் கூறுகிறார்கள். தங்க
ளுடைய அபிப்பிராயங்கள் பேதப்படும் பக்ஷத்தில் அதைத் திருத்
திக் கொள்ளவும் ஆயத்தமாக இருக்கிறார்கள்.

அமெரிக்கா தேசத்தில் அநேக சங்கங்கள் உண்டு. ஒவ்வொரு
சங்கத்தாரும் மாதாந்தர பத்திரிகையோ, கால் வருஷ பத்திரிகையோ
வெளியிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். நமது நாட்டில் தற்சமயம்
வேலை பார்த்து வரும் அமெரிக்க கிறிஸ்தவ பாதிரிமார்களும் அத்
தேசத்து அமெரிக்கன் போர்ச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அச்
சங்கத்தின் ஆதிக்கத்தில் இந் நாட்டுக் கிறிஸ்தவ வேலைகள் நடந்து
வருகின்றன. அச் சங்கத்தார் பணம் சேகரிக்கும்படியாக தேச
முழுவதிலும் பலவிதமான பத்திரிகைகள் கிளம்பி நம் தேசத்தின்
பரிதாபமான நிலைமையைப் பெரிதாகக் கூறிப் பணம் வசூலிக்க
முயற்சிக்கிறார்கள்.

அமெரிக்கா பத்திரிகைகளைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்ல
வேண்டுமானால் தினசரிப் பத்திரிகைகளும், மாதாந்திரப் பத்திரிகை
களும், ராஜ்ய விஷயமாகவும், மத விஷயமாகவும், சாஸ்திர விஷய
மாகவும், யந்திரங்கள் விஷயமாகவும், கல்வி விஷயமாகவும், வியாபார
விஷயமாகவும், தொழிலாளர் விஷயமாகவும், பொது ஜன நன்மை
களின் விஷயமாகவும் ஏராளமாக இருக்கின்றன. இவைகளில்
ஏதாவதொன்றைப் பற்றி விசாலமாக வர்ணிக்கவாவது அதன் நோக்
கத்தையாவது பொருளையாவது தெளிவாக விஸ்தரிக்க வேண்டு
மானால், தற்கால அமெரிக்க பத்திரிகைகள் நம் தேசத்தில் அதிகமாக
வாசிக்கப்பட வேண்டும்.

அமெரிக்கா தேசத்து தினசரிப் பத்திரிகை ஒன்றை எடுத்துப்
பார்த்தால் முக்கியமான காரியங்களை அறிந்து கொள்வது லேசான
காரியமல்ல. பிரிட்டிஷ் ராஜ்யங்களில் விளையாடும் புட்பால், கிரிக்
கெட் விளையாட்டுகளைப் போன்ற பேஸ்பால், பாக்ஸிங் பந்தயங்களைப்
பற்றி இந்த நாட்டு பத்திரிகைகளில் ஏராளமாக எழுதியிருக்கக்
காணலாம். வியாபார முயற்சிக்கு வேண்டிய விளம்பரங்கள் தான்
எல்லாப் பக்கங்களிலும் படங்களாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

ஒரு தேசத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவரக் கூடியது கைத்தொழி
லும் வியாபாரமும்.

ராஜா கேசவதாஸ்.

திரு K. S. சாமி அவர்கள்.

இவ்வுலகின் கண் உத்தமர் பலர் தோன்றி அரிய பெரிய தொண்டுகள் பல ஆற்றி மறைவது அனுபவ சித்தாந்தமன்றோ. சுதந்திரம், சமதர்மம், சகோதரத்துவம், தீண்டாமை விலக்கு, பெண் மக்கள் விடுதலை முதலிய நற்செய்கைகளிலீடுபட்டு, இதந்தரும் எதையும் தியாகம் செய்த அவதார புருடர்கள் நம் நாட்டில் பலர் உளர் என்பது மறுக்கப்பாலதன்று. சுத்த வீரத்திலும், அரசியல் ஆராய்ச்சியிலும், அபார ஆற்றல் படைத்த பெரியாரின்

உலக முழுவதிலும் நடக்கும் காரியங்களைச் சில இடங்களில் ஆங்காங்கு இப் பத்திரிகையில் அறிவிக்கப்படுகின்றன.

இதைத் தவிர்த்து இங்கிலாந்து பத்திரிகைகளும் இந் நாட்டில் பிரசுரமாகி வருகின்றன. காலம் சென்ற லார்ட் நார்த்க்ளிப் என்பவர் கோடி பவுன் முதல் போட்டு ஒரு பத்திரிகை நடத்தி வந்தார். அதை அமெரிக்காவிலும் பிரசுரிக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார். நான் அமெரிக்காவில் இருந்த காலத்தில் நமது தேசத்து மாணவர்களும் ஒரு பத்திரிகை வெளியிட்டு வந்தார்கள். அதற்கு சந்தாதாரர்கள் கொஞ்சமாக இருந்த போதிலும், சில தனவான்கள் இந்தியா விஷயங்களை அறிய ஆவல் கொண்டு அதற்குத் தக்க பண உதவி அளித்து ஆதரித்தார்கள். இதே மாதிரி அநேக அமெரிக்கா தனவான்கள் தங்கள் பணத்தை நல்ல வழியில் உபயோகிக்கத் தங்களுக்கு பிரியமான ஒரு பத்திரிகைக்குப் போதுமான பண உதவி புரிகிறார்கள். நமது பாரத நாட்டின் பெரியோர்களும் தனவந்தர்களும் இம்மாதிரியைப் பின்பற்றுவார்களானால் நம் தேசத்திலும் பத்திரிகைகள் அதிகமாவதுடன் ஒழுங்காகவும் பிரசுரிக்கப்பட்டு, அதினால் நம் தாய் நாடு அறிவிலும் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும், செல்வத்திலும் விருத்தியடைந்து நாடு செழித்தோங்கும் என்பதற்கு ஐயமில்லை.

அவரவருக்கு இஷ்டமான தொழிலை வியாபாரத்தைச் செய்யல் வேண்டும்.

ஜாபிதாவில் பிரதம பதவி பெற்றிலங்கும் கேசவ பிள்ளை திவான்ஜி அவர்கள் பாரத நாட்டின் பூங்காவனம் (Garden of India) என்று புகழ்ந்து கூறி வரும் திருவிதாங்கூரில் இற்றைக்கு சுமார் 180 வருடங்களுக்கு முன்னர் எளிய குடும்பத்தில் உதித்தவராவர். அவ்வுத்தமர் அவ்வேளை அரசரா யிருந்த கார்த்திகை திருநாள் ராமவர்ம மஹாராஜாவின் மந்திரியா யமர்ந்து நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நற்காரியங்கள் பல செய்து நல்ல பெயர் நாட்டி எல்லோராலும் புகழப்பெற்று வாழ்ந்து வந்தார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக—அஃதின்றி தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் சொல்லுக்கு இலக்காகி புகழுடம்பெய்தி இன்றும் என்றும் மக்களிடையே வாழ்ந்து வருகின்றார். அவ் வுத்தம வீரனின்—அரசியல் ஞானியின்—சரிதையை ஈண்டு சுருங்கக் கூறுவாம்.

பத்மனாபுரம் அரண்மனையின் பண்ணை வேலை பார்த்த ஓர் பரம ஏழை பெண்ணுக்கும்; சோதிடம் கூறி வயிறு பிழைத்த வறுமையாள னொருவனுக்கும் 920-ம் ஆண்டு (மலையாளம்) சித்திரைமீ 10௳ பிறந்தார். அக்கால முறை யனுசரித்து குழந்தைப் பருவத்தில் கேசவ பிள்ளையைத் திண்ணைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். தர்மமாகவே தமது 12 வயது வரை கல்வி கற்று வந்தார். பின்னர் தாய் தந்தையரைக் காப்பாற்ற எண்ணம் கொண்டு வேலை பார்த்து வெளிக் கிளம்ப வேண்டியதாயிற்று. இளம் பிராயத்திலேயே கல்விக் கேள்விகளில் அபார ஆற்றலுடையவராகத் தோன்றியதோடு, கணக்கில் மகா நிபுணராகக் காணப்பட்டார். அலுவல் நோக்கித் திருவனந்தபுரம் போகும் வழியின் மத்தியில் பூவாற்றுக்குச் சமீபம் ஓர் பிரபல வியாபாரியைத் தற்செயலாகக் கண்டு அன்னாருடன் மிக பணிவாக நடந்து பழக்க மேற்படுத்திக் கொண்டார். வியாபாரியின் கேள்விகளுக்கெல்லாம் தக்க விடைகள் தயங்காமல் சொல்லியதால், கேசவனைப் புகழ்ந்து, மாதம் 2 ரூபாய் சம்பளத்தில் அந்த வர்த்தகன் அமர்த்தினான். உண்மை உரைத்தல், பணிவு அடக்கம், புத்தி நுட்பம், வியாபாரத் திறமை, இன்சொல், எளிய நடை, சுறுசுறுப்பு ஆகிய அரிய குணங்கள் அமையப்பெற்ற கேசவன் நாளடைவில் வியாபாரியின் அந்தரங்க அபிமானத்திற் குரியவனானானென்று கூறின் தவறாகாது.

வியாபார விஷயமாக அரசரோடு கலந்துகொள்வது அக்கால வழக்கமாகும். கேசவ பிள்ளையையும் அழைத்துக்கொண்டு வியாபாரி அரசரைச் சந்திக்கச் சென்றான். கேசவரை அழைத்து வராமல்,

தான் மட்டும் திருப்தி யடைதல் என்பதை நீக்க வேண்டும். பரோபகாரத் தன்மை ஒவ்வொருவர் மனதிலும் உதிக்கட்டும்.

வியாபாரி அரண்மனையை விட்டு போந்தார். கேசவரின் நற்கதிக்கு நாளிட்ட நன் முகூர்த்த மிதுவேயாமென்று, அவரது பிற்கால சரித்திரம் தெற்றென விளக்குகின்றது.

மறு நாள் அதிகாலை வேளையில் அரசன் பள்ளி யெழுந்ததும், முற்றத்தில் மலின உடை தாங்கி, மாசடைந்த மேனியுடன் அயர்ந்து தூங்கும் சிறுவனைக் கண்ணுற்றார். பொழுது புலர்ந்ததும் கேசவனின் கண்ணில் விழித்தமையால் என்ன கேடு நேரிடுமோ என்று நினைத்து கடுங் கோபம் கொண்டு சிறுவனைச் சிறைக்கு அனுப்பக் கட்டளை யிட்டார். ஆனால் அரசரின் எண்ணத்துக்கு நேர்மாறாக அன்று சுபச் செய்திகள் பல வந்தமையால் சிறுவனைச் சிறையிலிருந்து நீக்கி, அரண்மனையிலேயே ஒரு வேலை கொடுக்கப்பட்டது. நாளடைவில் இளைஞனின் நன் முயற்சியால், நல்ல பதவி கிடைத்தது.

நாட்டு மக்களின் நலத்திலேயே கண்ணும் கருத்தும் கொண்ட மன்னவன் அறிஞர்களையும், கவிஞர்களையும் ஆதரித்து வந்தார். குஞ்சன் நம்பியார்—உண்ணாயிவாரியர்—ஆகியோர் சமஸ்தான வித்துவான்களா யமர்ந்து அரச சபையை அலங்கரித்து வந்தது சரித்திர உண்மையாகும். மக்களும் ஆனந்த வாழ்வெய்தி க்ஷேமமுடன் வாழ்ந்து வந்தார்கள். நாள் ஆக ஆக கேசவ பிள்ளை, நற்குண நற் செய்கைகளினாலும், உண்மை உழைப்பின் உயர்வாலும், மன்னனின் மாசற்ற அன்பிற்குரியவரானதோடு, மக்களின் மதிப்பிற்குரியவராகி மகிழ்ந்து வாழ்ந்து புகழ் படைத்து போற்றி ஏற்றப்பட்டார். ஏற்கெனவே வியாபார முறையில் ஞானம் பெற்ற கேசவ பிள்ளை அக் காலத்து பிரபல வியாபாரிகளா யிலங்கிய ஆங்கிலேயரோடு பழகிக் கிழக்கிந்திய கம்பெனி (East India Company) கணக்குகளை நன்கு கற்றுக் கொண்டார். அஃது பிற்காலம் பேருதவியா யிருந்தது. நல்ல மிளகு, இஞ்சி, ஏலம், பட்டை, பத்திரி முதலிய வாசனைப் பொருள்களை அளித்து நாட்டின் பாதுகாப்பிற்கு (அக் காலத்திற்கு வேண்டிய வெடி மருந்து, துப்பாக்கி ஆகியவைகளை வாங்கி உதவி வந்தமையால் எதிர்பார்த்த படையெடுப்புக ளில்லாது நிம்மதியான வாழ்வு திருவாங்கூரில் நிலைப்பெற்ற தெனினும், மைசூர் மன்னன், ஹைதர் ஆலி திருவிதாங்கூர்மேல் படையெடுக்கப் போகின்றான் என்ற அச்சம் நிலவியது. திருவிதாங்கூர் சேனைத் தலைவனாகிய டிலினாயி என்னும் ஆங்கிலேயனோடு கலந்து அதற்கான ஏற்பாடுகள் செய்து முடித்தது, அன்னாரின் அரசியல் திறத்தைப் பெரிதும் விளக்குகின்றதன்றோ! கேசவ பிள்ளையின் திறமைக்கு வியந்து அரசர் அவருக்கு தளவா (மந்திரி) உத்தியோகமளித்தார்.

இவ் வுலக வியாபாரங்களை யெல்லாம் வியாபாரமென்றே சொல்லல் வேண்டும்.

கேசவ பிள்ளை கருதியது போல ஹைதர் ஆலி போர் தொடுக்கவில்லை யெனினும், கொச்சி, வட கேரளம் முதலிய தேசங்களில் படை யெடுத்துத் பல அட்டூழியங்கள் செய்து வந்தமையால், அந் நாட்டு சிற்றரசர்கள் அஞ்சித் திருவிதாங்கூரில் அபயமாயினர். ஹைதர் ஆலி, அவ்வரசர்களை விட்டுக்கொடுக்க வேண்டுமென்று திருவிதாங்கூர் மன்னனோடு வேண்ட, அடைக்கல முற்றோரைக் காட்டிக் கொடுப்பது அரச நீதி யல்ல வென்று கூறி மறுத்த காரணத்தினால் திருவிதாங்கூர் மன்னனோடு பகைமை கொண்டார். கேசவ பிள்ளையும் இதைப் போற்றினமையாலும், ஏற்கெனவே அவர் மீது அன்பு கொண்ட மக்களின் ஆனந்தம் பன்மடங்கு பெருகிற்று.

பொறாமை, ஒற்றுமை யின்மை ஆகிய அற்ப குணங்கள் நிரம்பிய அரசர் வதிந்த அக் காலத்தில் திடீர் திடீர் என்று படை யெடுப்புகள் தோன்றுவது வழக்கமா யிருந்தது. போர் வேளைகளில் ஜனங்கள் பெருந் துயரெய்தி வந்தனர். இல்லங்கள் தீ வைக்கப்படும். பெண்களின் ஆபரணங்கள் பறிக்கப்படும். எங்கும் திருட்டும், கொலையும் நடக்கும். இதை யெல்லாம் நன்கறிந்த தளவா கேசவ பிள்ளை தற்காப்புக்கு வேண்டிய எல்லாக் காரியங்களும் மிகவும் எச்சரிக்கையாக செய்து முடித்தனர். ஹைதர் அலியின் மகன் திப்புவுக்கு 958-ம் ஆண்டில் பட்டம் கட்டினர். இதைக் கேள்வியுற்ற ஏனைய சிற்றரசர்கள் அஞ்சித் திருவிதாங்கூர் மன்னரோடு உறவாட நேர்ந்தது. திப்பு சுல்தான் திருவிதாங்கூர் அரசரோடு, மற்றைய சிற்றரசர்களுக்கு சலுகை காட்டக் கூடாது என்று அறிவித்தானெனினும், தன்னையன்றித் தஞ்சம் வேறில்லை யென்றவர்களைச் சாட்டிக் கொடுப்பது ஆண்மையன்று என்று கூறி மறுத்தமையால், போர் வெறி படைத்த திப்பு சுல்த்தான் திருவிதாங்கூரை நோக்கி புறப்பட்டான். போர் நிகழ்ந்தது. தன்னலம் பாராட்டாது பிற நலம் பேணிய பெருந்தகையாளராகிய திருவிதாங்கூர் அரசர் வெற்றி பெற்றார். திப்புவின் விலை யுயர்ந்த ஆபரணங்கள் பறிக்கப்பட்டன.

திப்பு சுல்த்தான் இரண்டாவதாகப் பெரும் படையுடன் போர் தொடுத்தான். யோசிக்கும் தன்மை படைத்த கேசவ பிள்ளை தளவா, மாற்றானின் வலிமையை யறிந்து திப்புவைச் சந்திக்காமலேயே, பின் வாங்கினர். நாட்டு மன்னர்களின் ஒற்றுமைக் குறைவையும், பொறாமைக் குணத்தையும் சதா கவனித்து வரும் கிழக்கிந்தியா வியாபார சங்கத்தார், திருவிதாங்கூருக்குத் துணையாக நின்று திப்புவை முறியடித்து முடக்கினர். இதன் ஏதுவாக மைசூர் நாட்டின் நேர் பகுதி கம்பெனிக்குச் சொந்தமாகியது. மேலும் திருவிதாங்கூரி

வாய்ப் பேச்சிலேயே வியாபாரம் நடக்காது. உன் கண்ணும் கருத்தும் தொழிலில் இருக்க வேண்டும்.

விருந்து பெருத்த பணத் தொகையும் கிடைத்தது. தன்னையே தஞ்சமென்ற சிற்றரசர்களுக் கெல்லாம் தத் தம் தேசங்களை விட்டுக் கொடுக்க தளவா கேசவ பிள்ளை தக்க ஏற்பாடுகள் செய்தார்.

நாட்டின் நன்னிலைக்கு இன்றியமையாத தாகிய வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமென்ற பேரவா பூண்டு, கடலோரத்தைச் சோதனை செய்து குளச்சல், விழிஞ்சம், ஆலப்புழை மூன்று இடங்களிலும் கேசவ பிள்ளை, துறைமுகங்கள் அமைத்தார். அக் காலத்தில் அடவியாயிருந்த இடங்களை யெல்லாம் நகரங்களாகச் செய்து ஜனங்களுக்கு பெருத்த வசதிகள் செய்து கொடுத்தார். அயல் நாடுகளிலிருந்து பிரபல வியாபாரிகளை வரவழைத்துத் தங்க இடமளித்து வியாபாரத்தை நாட்டில் பெருகச் செய்தனர். இத்துடன் விவசாயத்தையும் நன்கு கவனித்து வந்தமையால், நாட்டில் எங்கணும் இன்பம் நிலவியது. திருவிதாங்கூரில் பிரபல விவசாய இடமாகிய நாஞ்சி நாட்டில் விவசாய வசதிக்காக பல கால்வாய்கள் வெட்டி உதவியதால், விவசாயிகளுக்குச் சாதாரணமாக ஏற்படும் தண்ணீர்ப் பஞ்சம் நாஞ்சி நாட்டாருக்கு இல்லை யென்றே கூறலாம். புதுவல் நிலங்கள் ஏழை விவசாயிகளுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டது. கள்ள நாணயங்கள் செய்வது சகஜமா யிருந்தமையால் அழுக்கு நாணயங்கள் மாற்றி யமைக்க தக்க ஏற்பாடுகள் செய்தார். இவ்வாறு நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் பல காரியங்களைச் செய்து வந்த கேசவ பிள்ளை அவர்களைப் போற்றாதார் திருவிதாங்கூரில் இல்லை யென்றே துணிந்து கூறலாம்.

பெருத்த பணச் செலவில் ஆங்கிலேய படையொன்றை நாட்டில் வைத்திருப்பது அவசியமின்று என்ற கருத்தை வெளிக் காட்டி, உறுதியுடன் கேசவ பிள்ளை, சேனையைக் கலைத்துவிட உத்தரவிட்டனர். சென்னைக் கவர்னர் இதை யறிந்து கோபமுற்றாரெனினும், நாட்டிற்கு நலனளிக்கும் நற்காரியம் புரிவதில் அணுவளவேனும் அச்சம் கொள்ளாத கேசவ பிள்ளை, கவர்னரின் கோபத்தையும், தாபத்தையும் பொருள்படுத்த வில்லை. இது விஷயமாக வெள்ளையருக்கு பெருத்த பரபரப்புண்டாயிற்று. கவர்னர் ஜனரலுக்கு விஷயம் அறிவிக்கப்பட்டது. ஆங்கிலேயருக்கும் திருவிதாங்கூர் அரசாங்கத்திற்கும் புதிய ஒப்பந்த மேற்பட்டது. என்றாலும், அவ் வொப்பந்தத்திலும் நாட்டின் பாதுகாப்பிற்காக ஆங்கிலேயச் சேனை அவசியமில்லை யென்ற கேசவ பிள்ளையின் கொள்கை நிறைவேறப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இதுகாறும் தளவா, கேசவ பிள்ளையின் அரசியல் நிர்வாகத் திறமையைக் கவனித்து வந்த வங்காள கவர்னர் (Governor of

அனுபவம் பழக்கம்.

Bengal) வியந்து கேசவ பிள்ளைக்கு ராஜா கேசவதாஸ் என்று பட்டமளித்துக் கௌரவித்தார். அப்பொழுதுதான், தளவா என்ற பெயரை மாற்றித் திருவிதாங்கூர் மந்திரிகளுக்கு திவான்ஜி என்ற ஸ்தானப் பெயர் நல்கப்பட்டது. இன்றும் திருவிதாங்கூர், மைசூர், கொச்சி, புதுக்கோட்டை முதலிய தேசங்களில் மந்திரிகளுக்கு திவான்ஜி என்ற பெயரே வழங்கி வருகிறது. திருவிதாங்கூர் திவான்ஜிகளி லெல்லாம் முதன்மை பதவி பெற்றிலங்கும் ராஜா கேசவதாஸை பெரிய திவான்ஜி என்றே இன்றும் கூறப்பட்டு வருகின்றது.

உத்தம குணக் குன்றும் கார்த்திகைத் திருநாள் ராமவர்மா ராஜா அவர்கள் 973-ம் ஆண்டில் மண்ணுலகை விட்டு மறைந்தார். இளவரசன் பாலராம வர்மாவுக்கு 16-வயதுப் பருவத்தில் பட்டமளிக்கப்பட்டது. "இளமறி குணமறியாது" என்ற சொல்லுக்கேற்ப ராஜா கேசவதாஸை அவன் மதிக்கவில்லை. அரசன் என்ற இறுமாப்புற்றான். திவான்ஜியின் யோசனையை நிராகரித்துத் தன்னிஷ்டம்போல நடக்கத் தலைப்பட்டான். அரசனுக்கு அந்தரங்க நண்பனாகிய சங்கரன் நம்பூதிரி என்ற பார்ப்பனன் ஒருவருக்குத் திவான் பதவியில் மோகம் ஏற்பட்டது. அதற்காக அரசனிடம் திவான்ஜியைப் பற்றிக் கோள் சொல்வதில் கருத்தைச் செலுத்தி அல்லும் பகலும் உழைத்து வந்தமையால், ஏற்கெனவே திவான்ஜியின் மேல் வெறுப்புற்ற இளவரசன் கேசவதாஸை அறவே வெறுத்தானெனக் கூறின் தவறாகாது. பகைமை நாள் ஆக ஆக வலுத்துக்கொண்டே யிருந்தது. ராஜா கேசவதாஸை அரண்மனைக்குள் வரக்கூடாது என்று அரசன் கட்டளை யிடும் அளவுக்கு வந்துவிட்டதெனின், கோள்க் கூறியதின் கூரிய தன்மைதான் என்னே!

இளவரசனின் கோபம் இத்துடன் தணியவில்லை. ராஜா கேசவதாஸ் சிறையிலிடப்பட்டார். இச் செய்கை நாட்டு மக்களுக்கு எத்துணை தூரம் துன்பத்தை யளித்திருக்கு மென்று கூறவும் வேண்டுமோ! அவமானத்தினால், கேசவதாஸின் வதன ஒளி குன்றியது; மேனி வாடி வதங்கியது. மானமிழந்த பின் இறப்பதே நன்று என்ற எண்ணம் உள்ளத்தில் இலங்கியதை வதனம் காட்டிற்று. சுருங்கக் கூறின் சிறையிலடைக்கப்பட்ட பத்தாம் நாள் பெரிய திவான்ஜி என்று பெரும் பெயர் பெற்றிலங்கிய சிறந்த புருடர் பிணமாகக் காணப்பட்டார்.

அனுபவமே ஒரு சக்தி—வழி காட்டும் தீட்சண்ய புத்தி—யுக்தி.

ஆராய்ச்சி மேடை.

ஆரோக்கிய வழி.

மகாத்மா காந்தி இயற்றியது.

விலை அணா நாலு.

கிடைக்குமிடம்: சுதந்திரச் சங்கு காரியாலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

அறிவுக் கடலிலும், அன்பர் பணியிலும், தேசத் தொண்டிலும்,
அனுஷ்டான முறையில் இணையற்ற ஞான வீரர் காந்தி மகான் அருள்
வாக்கான "ஆரோக்கிய வழி" என்ற நூல் ஆங்கிலத்தினின்று தமி
ழில் செம்மை நிறத்தில் தீட்டப்பட்டு, உள்ளொளி பெருக்கி, முன்
கூறிய குறைகளை நிவர்த்திப்பான் வேண்டி, "சுதந்திரச் சங்கு காரி
யாலயம்" வெளியிட்டதுபற்றித் தமிழ்த் தாய் அகமகிழ்ந்தாள்; அள
வற்ற பெருமை கொண்டாள். இந் நூல் அனுபவ ஆராய்ச்சிகள்
நிரப்பித் தற்காலத்திற் பெரிதும் வேண்டப்படும் சீர்திருத்தமா
யிருப்பதொரு புறமிருக்கத் தமிழன்னையின் தற்காலப் பழிச் சொல்
லின் ஒரு பகுதியைத் துடைத்து நிற்கின்றதென்று துணிந்து கூறு
வோம்.

மாந்தரும் மகளிரும் ஏங்கப் பெரிய திவான்ஜி இறந்த பின்னரும்
அரசனின் கோபம் குறையவில்லை. ராஜா கேசவதாஸ் அவர்களை
விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார் என்றும் சிலர் கூறுகின்றனர்.
கேசவதாஸின் ஆஸ்திகளும், அவ் வுத்தமனின் மனைவியின் ஆடை
ஆபரணங்களும் அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

சனனத்திலும், நினைவிலும் தன்னலம் பேணாது, பிற நலம் நாடி
இதந்தரும் எதையும் தியாகம் செய்த பரிசுத்த வீரனின்—சிறந்த அர
சியல் ஞானியின் பிற்காலக் கதியை நோக்குங்கள். இறுதியில்
மாசற்ற கேசவ பிள்ளை திவான்ஜியின் மரணத்தைக் காண்மின்! தியாக
புருடர்களுக்கும், அரசியல் ஞானிகளுக்கும், பரிசுத்த கர்ம வீரர்க
ளுக்கும் ஆண்டவன் அளிக்கும் நன்கொடை இதுதானோ!

சுதந்திர ஸ்தாபனத்திற்குக் கஷ்டங்களைத் தாங்குவதே முக்கிய தர்மம்.

"ஆரோக்கிய வழி" என்ற நூலில் நமது வாழ்க்கை நலம்பெற இரண்டு பாகமாகப் பிரித்து முதற் பாகத்தில் ஆரோக்கியத்தை விளக்கி, உடலமைப்பைக் காட்டி, அது நிலைத்திருக்க வேண்டிய அவசியப் பொருள்களை அழகாக விஸ்தரித்துக் கூறியிருப்பது மிகவும் வியக்கத் தக்கது. இரண்டாம் பாகத்தில் சில சுலபமான சிகிச்சைகளை ஆண் பெண் இருபாலரும் அனுஷ்டிக்கக் கூடிய விதமாக அவ்வளவு அழகாக விவரித்துத் தீட்டியிருப்பது மிகமிகப் போற்றத் தக்கது. இதனைக் காந்தியடிகள் பிறநாட்டு மேதாவிகளின் நூல்களின் ஆராய்ச்சிகளையும், அபிப்பிராயங்களையும், தமது அனுபவ ஆராய்ச்சிகளையுஞ் சேர்த்து நமக்குகந்தாற்போல் எழுதியிருப்பதால், அவர் கூறுவதுபோல, "இப் புத்தகத்தைப் படிப்பவர்கள் வைத்தியர்களின் உதவியைத் தேட அவசியமேயில்லை" என்று சுருக்கமாகக் கூறிவிடலாம்.

B.Sc.

உத்தம வாழ்க்கை.

மகாத்மா காந்தி இயற்றியது.

விலை அணா இரண்டு.

கிடைக்குமிடம்: சுதந்திரச் சங்கு காரியாலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

"உத்தம வாழ்க்கை" என்ற நூல் மகாத்மாஜீ அவர்கள் ஏரவாடா தவக்கோட்டத்தினின்று சபர்மதி ஆசிரமத்தினருக்கு எழுதிய கடிதங்களின் மொழிபெயர்ப்பாகும். இது ஆசிரம வாசிகளுக்காகச் சிறப்பாக எழுதப்பட்டபோதிலும், பொதுவாக உலக மக்கள் உத்தம வாழ்க்கையில் ஈடுபட்டு, புதிய மலர்ச்சிபெற்று உய்ய இப் புதிய நூல் மக்கள் உள்ளத்தில் புத்துணர்ச்சியை மெத்தவும் எழுப்புகிறது. இதனிலடங்கிய அனேக அற்புத அருள் வாக்குகளில், சத்தியம், அஹிம்சை, பிரும்மச்சர்யம், நாவையடக்கல், திருடாமை, எளிய வாழ்க்கை, தீண்டாமை விலக்கு, தொண்டு, சுதேசியம் முதலியவைகளை விளக்கியிருப்பதைப் படிக்கப் படிக்கப் பரவசப்படுத்துகின்றன. படித்து முடிந்ததும் "நான் உத்தமனானேன்" எனக் கர்வங்கொள்ளத் தூண்டுகிறது. உலகம் போற்றும் உத்தம புருஷராம் காந்தி மகான் வாழ்க்கையை விரும்பாதவருமுளரோ? அதனைச் சந்தேகம் நீங்க,

---

சுதந்திரத்தை இழந்த ஜாதியார் மகத்தான கஷ்டங்களைத் தாங்கினாலன்றி மீண்டும் சுதந்திரத்தை ஸ்தாபிக்க முடியாது.

வெகு எளிதில் கடைப்பிடித் தொழுகச் சுருங்கக் கூறி விளங்கவைத்திருக்கும் இந் நந்நூல் ஒவ்வொரு தமிழர் அல்ல ஒவ்வொரு இந்தியர் கையிலுமிருக்கவேண்டும்.

இந் நூல்களின் பொருளடக்கங்களின் உண்மை உயர்வு ஒருபுறமிருக்க, அவைகளைச் சகலரும் எளிதில் படித்துப் பயன் பெறுமாறு, சிறு சிறு வாக்கியங்களோடு பிழையின்றி இனிமை பயப்பதாய் மொழிபெயர்த்து, பரம ஏழையும் வாங்கிப் பயனடையுமாறு மிகக் குறைந்த விலையில் பதிப்பித்து வெளியிட்டதுபற்றிச் "சுதந்திரச் சங்கு" காரியாலயத்தாருக்கு நாம் பெரிதும் கடமைப்பாடுடையோம். எம் மதத்தினருக்கும், எப் பாலருக்கும் எளிதிற் பொருள் விளங்குமாறு மொழிபெயர்த்திருப்பது மிகவும் போற்றத் தக்கது. இந் நூலை ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும் பெற்றுப் படித்துப் பெருவாழ்வு வாழ்ந்து நித்யானந்த வாழ்வு பெற எல்லாம் வல்ல இறைவனருள்புரிவானாக!

B.Sc.

நீதி தர்மம்.

மகாத்மா காந்தி இயற்றியது.
விலை அணா 2 பக்கம் 36.
கிடைக்குமிடம்: சுதந்திரச் சங்கு காரியாலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

இந்தச் சிறு புஸ்தகத்தில் மகாத்மா காந்தியின் வாழ்க்கைக்கு அடிப்படையானவைகளும், மற்றவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டுமென்று அவர் போதிக்கின்றவைகளுமான கொள்கைகள் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

மகாத்மா காந்தி மதப் பற்றுள்ள வாழ்க்கையை வாழ்பவர். மதத்தின் பெயரால் இழைக்கப்படும் கொடுமைகளையும், அதனால் ஆத்திரமேற்பட்டு "மதம் என்பதே விரும்பத் தகாதது" என்று எண்ணுபவர்களுடைய மனப்பான்மையையும் கண்டு, "உண்மையான மதம் எது?" என்பதை அலசி ஆராய்ந்து, கடைசியில் "நீதி மதம்" என்ற ஒன்று எல்லா மதங்களுக்கும் அடிப்படையானதாகக் கூறப்பட்டது. அந்த "நீதி மதத்"தைத்தான் மகாத்மா இப் புஸ்தகத்தில் வர்ணிக்கிறார்.

இனியும் நீ முயலலாம்; முன்னேறலாம். முன்னேறுங் காலம் ஓடிப் போய்விடவில்லை. முயற்சி செய். தயங்காதே. எக் காரணம் பற்றியும் உன் முயற்சியைக் கைவிடாதே.

"மதம் வேறு, சன்மார்க்கம் வேறு" என்ற அபிப்பிராயத்தை மகாத்மா கண்டதுண்டமாக்குகிறார். மதப் பற்றற்ற சன்மார்க்கம் வெறும் வாய்ப் பேச்சில் நின்றுவிடுமென்றும் சன்மார்க்கமில்லாத மதப்பற்று வெறும் ஆசார சம்பிரதாயங்களுக்கு அடிமைப்பட்டிருத்தலாகுமென்றும் விளக்குகிறார். தங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சன்மார்க்கிகள் உண்மையில் மதப் பற்றுள்ளவர்களே என்று சொல்லுகிறார். எப்படி என்று விளக்கவில்லை; ஆனால் மதம் என்பது இவர்களையெல்லாம் உள்ளடக்கும்படி "நீதி தர்மம்" என்று கூறப்படுகிறது.

அதி உத்தமமான சன்மார்க்கத்தைப் பரோபகாரம், சுயநலத் தியாகம் என்று வர்ணிக்கிறார். சுயநலம், கீர்த்தி, பயம் முதலான புற நோக்கங்களால் ஒழுகப்படும் நீதி அலசிப்பார்த்தால் பாபமே என்றும், அப்பேர்ப்பட்ட நீதியால் பயனில்லை என்றும் வெகு அழகாக விளக்குகிறார்.

தன்னை மறந்து, குடும்பம், ஜாதி, தேசம், உலகம் முதலானவைகளின் நன்மைக்காக உழைப்பவன் படிப்படியாகச் சித்தியையடைந்தவன் என்றும், சுயநலத்தை மட்டுமே கவனித்தால் அதோசதிதான் ஏற்படும் என்றும் காட்டுகிறார். "அப்படிச் சித்தியடைந்தவர்கள் பயம் என்பதைச் சற்றும் அடையார்; தங்கள் பலக் குறைவையும் எதிரிகளின் பலத்தையும் கண்டு கலங்கார்; சன்மார்க்கத்துக்கு விரோதமான ராஜாங்கத்தையும், பழக்க வழக்கங்களையும் தைரியமாக எதிர்ப்பார்" என்று சொல்லும்போது மகாத்மாவின் வாழ்க்கையின் முக்கியமான காரியங்களுக்குக் காரணம் விளங்குகிறது.

"ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுடைய சிறு சிறு எண்ணமும் ஜனசமூகத்தைப் பெரிதும் பாதிக்கும்" என்று மிகவும் பிரயாசைப்பட்டுக் காட்டுகிறார். எனவே சன்மார்க்கியானவன் சதா ஜாக்கிரதையுடன் விஷயங்களைத் தீரயோசித்துப் பிறகு தைரியமாகக் காரியத்தில் இறங்கவேண்டும்.

மிகப் பழைய மதங்களின் அடிப்படையான கொள்கைகளைக் காலத்துக் கேற்றவாறு விளக்கி வற்புறுத்துவது மகான்களின் வேலை. இதை மகாத்மா நமக்குச் செய்ததற்காக நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். புத்தகத்தை நன்றாக வாசித்து, அதன்

வறுமை உன்னை அமுக்கிவைக்க ஏற்பட்ட தடையென்றெண்ணாதே. உன்னுள் இருக்கக்கூடிய நற்குணங்களை உனக்கே எடுத்துககாட்டி, எவ்வளவு சக்தி உன்னிடம் அடங்கியிருக்கிறதென்பதை வெளியாக்கி, மென்மேலும் முயற்சிக்க உன்னை உற்சாகப்படுத்தும்.

உண்மைகளை யறிந்து, சரி என்று தோன்றுபவைகளை யனுஷ்டிப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

ரா. ஸ்ரீ. ஸ்ரீ.

“ருஷியப் புரட்சி” முதற் பாகம்.

இப் பெயரிய புத்தகமொன்றை மதிப்புரைக்காக வரப்பெற்றோம். இதனை எழுதி வெளியிட்டவர் மதுரை திரு. எஸ். சையது அஹமது அவர்கள் ஆவர். தற்போது இந்தியரின்—ஏன், உலக மக்களின் கவனத்தையே கவர்ந்து வருவது ருஷியா தேச மென்பதற்குச் சந்தேகமில்லை. இதுகாறும் உலகில் கோனாட்சி, குடிக் கோனாட்சி, குடியாட்சி என்ற முத்திறத்தனவாய அரசாங்கங்கள் தோன்றியுள்ளன. எனினும் அவ் வரசாங்கங்கள் அனைத்திலும் ஏழை பணக்காரன், கூலியாள் முதலாளி என்ற பேதங்கள் இருந்து வந்திருக்கின்றன. நாட்டின் உடைமைகள் அனைத்தும் ஒரு சில கூட்டத்தாரின் தனி உடைமைகளாக விருந்தன. பெரும் பகுதியோராகிய மக்கள், சிறு கூலியைப் பெற்று நாளெல்லாம் உழைத்து வரும் ஏழைத் தொழிலாளர்களாக விருந்தனர். சோம்பேறி வாழ்க்கை நடத்தும் முதலாளிகள் சுகம் பெறுவதும், நாட்டுக் கவசியமான பல தொழில்களைப் புரிந்து கஷ்டப்படும் தொழிலாளிகள் உணவுக்கும், உடைக்கும், இருப்பிடத்திற்கும் வழியற்றுத் துன்பமடைவதுமாகிய வாழ்க்கை இவ் வுலகம் தோன்றிய நாள் தொட்டுத் தொடர்ந்தே வந்துகொண் டிருக்கின்றது. அத்தகைய நிலைமையை அடியுடன் மாற்றி, ஒரு நாட்டின் உடைமைகள் அனைத்தையும் அந் நாட்டு மக்களின் பொது உடைமையாக்கிப் பணக்காரன், ஏழை, முதலாளி, வேலையாள் என்ற வேற்றுமைகளை யொழித்துப் புதிய அரசியலை நிறுவி, வேலை செய்துவரும் ருஷிய சோவியத் குடியரசாங்கத்தின் பிறப்பு வளர்ப்புகளைப்பற்றி அறிய விரும்பாதவர் யார்? எனவே ருஷிய புரட்சியின் வரலாறுகளைப்பற்றித் தெளிவாகவும், சுருக்கமாகவும் ஆசிரியர் இச் சிறு நூலில் விளக்கிக் கூறியிருப்பது படிக்க இன்பமூட்டுகிறது. ருஷிய புரட்சி தோன்றிய காரணங்களையும், புரட்சி நடந்த விதங்களையும், ஜார் அரசாட்சியின் வீழ்ச்சியையும், புதிய ஜனநாயக ஆட்சியின் தோற்றத்தையும், பொது உடைமைத் தத்துவத்தைக் கொண்ட “லெனின்” கட்சியின் வளர்ச்சியையும்பற்றிக் கூறுவதோடு இம் முதற்பாகம் முடிவாகிறது. இரண்டாம் பாகத்தில் ஜனநாயக சர்க்காருக்கும் பொது உடைமைக் கட்சிக்கும் நடைபெற்ற கலகங்களும், சண்டைகளும், பொது உடைமைக் கட்சித் தலைவர்கள் அடைந்த கஷ்டங்களும், ஈற்றில் லெனின் அரசாங்கம் ஏற்பட்டதும், பிறவும் கூறப்படுமெனத் தெரிகிறது. இரண்டாவது பாகத்தின் வரவை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம். தமிழகத்தில் பாட்டாளிகளாகிய ஏழை மக்கள் அனைவரும் படித்துப் புத்துணர்ச்சி யெய்துவதற் கேற்றபடி இச் சிறு புத்தகம் முன்னிடப்பட் டிருக்கிறது. இதன் விலை இரண்டணா. தனிப் பிரதி வேண்டுவோர் மதுரை, கான்பாளையம் 1-வது தெருவிலுள்ள நூலாசிரியரின் பெயருக்கு 2½ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம்.

N. V.

ஆசிரியக் குறிப்புகள்.

அரசியல் வானம்

இந்திய அரசியல் வானத்தில் மேகங்கள் திரண்டு கறுத்துக் குமுறிக்கொண் டிருந்தது. அது ஒழிந்துபோய் மறுபடியும் மந்தாரமாயிருந்தது. அரசியல் வானத்தில் மந்தம் மறைந்து அதிர்ச்சி ஏற்படப்போகிறது. அரசியல் வாதிகளுக்கு ஆயாசம் போய் உற்சாகம் உண்டாயிருக்கிறது. தேசிய வாதிகள் இனிமேல் கைகளைக் கட்டிக் கொண்டு மௌனமாக இருக்க முடியாது. தேர்தல் முழக்கம் இப்பொழுதே கேட்க ஆரம்பித்துவிட்டது. சிறை பயம் கொண்ட, அடக்குமுறைத் திகில் கொண்ட தேச பக்தர்களுக் கெல்லாம் சந்தோஷம் உண்டாயிருக்கிறது. மூலையில் பதுங்கிக் கிடந்தவர்களெல்லாம் முன்னால் வர ஆரம்பித்திருக்கிறார்கள். இனிமேல் தேர்தல் பேச்சு, ஓட்டுப் பேச்சு, பிரச்சாரப் பேச்சு! அடிமை நாட்டில் எல்லாம் ஆச்சர்யம் தான்! எல்லாவற்றையும் கவனித்துக்கொண் டிருப்போமாக.

விவசாய உலகில் மின்சாரம்

மேலை நாடுகளில் விவசாய விஷயங்களில் மின்சாரத்தை உபயோகப்படுத்தி அதிகமான நன்மைகளை அடைந்து வருகிறார்கள். அங்கு மின்சார சக்தி உபயோகத்தினால் ஏக்கர் ஒன்றுக்கு 200 பவுன் செலவாகிறது. மின்சாரத்தை விதைகளுக்குள் புகுத்துவதால் விதைகள் கெடாமலிருக்கின்றன. விதைத்தால் நன்றாய் முளைக்கின்றன. செழிப்புடன் வளருகின்றன. அப் பயிர்களை நோய்கள்

பிடிப்பதில்லையாம். விதைகளை வைத்திருந்தாலும் அவைகள் கெட்டுப்போகாமல் நெடுநாளைக்கு இருக்கின்றதாம். உழுதல், பரம்படித்தல், தண்ணீர் இறைத்தல், தண்ணீர் பாய்ச்சல், அறுவடை செய்தல், களமடித்தல், சமையல் செய்தல், பால் கறத்தல், மோர் கடைதல், நெய்யுருக்குதல் முதலான வேலைகள் பலவும் மின்சாரத் துணையால் நடைபெறுகின்றன. இங்கிலாந்தில் இப்பொழுது 5000 மின்சாரப் பண்ணைகளிருக்கின்றன. ஸ்வீடன் தேசத்திலுள்ள 40 லட்சம் ஏக்கர் நிலத்தில் 100-க்கு 40 வீதம் மின்சாரம் உபயோகிக்கப்படுகிறது.

நமது சர்க்கார் நமது பொன் விளையும் நிலங்களை என்றுதான் கவனிப்பார்களோ அறியோம். நமது நாட்டில் விவசாயத்திற்கு வேண்டும் உதவிகளைச் செய்தால், இந்திய விவசாயிகள் உலகில் முதன்மை பெற்று விளங்குவார்கள்.

காங்கிரஸ் தடை ரத்து

காங்கிரஸ் மீது சர்க்கார் போட்டிருந்த தடைகளை நீக்கிக்கொண்டது நியாயமே. அடக்குமுறைச் சட்டங்கள் அனைத்தையும் சர்க்கார் ரத்து செய்யவேண்டும். சிறையிலிருக்கும் காங்கிரஸ் வாதிகளை எல்லாம் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யவேண்டும். சட்ட மறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ்காரரும், காந்தியடிகளும் நிறுத்திக்கொண்ட பிறகும் சர்க்கார், காங்கிரஸ்மீது சந்தேகப்படுவது சரியல்ல.

மலேயா நாட்டில் புதிய சட்டம்

மலேயா நாட்டில் பாங்குத் தொழில் நடத்துகிறவர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும் அதற்காக லைசென்ஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் ஒரு மசோதா மலேயா நாட்டுச் சட்ட சபையில் வந்திருக்கிறது. இப் புதிய சட்டத்தினால் அங்கு லேவாதேவி செய்யும் நகரத்தார்கள் மிகவும் பாதிக்கப்படுவார்களென்று நம்புகிறோம். சைகோனில் லேவாதேவித் தொழில் நடத்தி வந்த செட்டியார்களுக்குச் சமீபத்தில் வந்த கஷ்டத்தை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆகையால் புதிதாக ஏற்படப் போகும் இச் சட்டத்தைப் பற்றி இந்தியர்கள் கிளர்ச்சி செய்து இதை மாற்ற வேண்டியது அவசியம். இந்தியர்களின் செல்வத்தாலும் தேகப் பிரயாசையாலும் போக்கு வரத்தாலும் மலேயா நாடு வளமுற்ற தென்பதை எவர் மறுக்க முடியும்?

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரஸில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

இந்திய மூலதனம்! சுத்த சுதேசிக் கம்பெனி!

தமிழ் நாடு
அஷ்யூரன்ஸ் & பாங்கிங்
கம்பெனி Ltd.,

போடிநாயக்கனூர்.

அக்கிராசனாதிபதி:

மதுரை ஜில்லா போர்ட்
மெம்பரும் போடிநாயக்கனூர் பிரபல லாண் லார்டுமான
1. மகா-ள-ள-ஸ்ரீ S. A. ரெங்கசாமி செட்டியா ரவர்கள்.

டைரக்டர்கள்:

2. ,, S. P. சுல்தான் அஹமெட் பதரதீன்
ரவுத்தர் அவர்கள், லாண் லார்டு, போடி.

3. ,, V. புன்னைவனம் பிள்ளை, லாண். லார்டு
& முனிசிபல் கவுன்சிலர், போடி.

4. ,, B. K. ஒன்னுராம் செட்டியார்,
லாண் லார்டு, போடி.

5. ,, S. S. M. பழனியப்பன் செட்டியார்.
வர்த்தகம், போடி.

6. ,, T. S. சாமிநாதன் அவர்கள்,
K. D. H. P. Co. Ltd., மூணார்.

7. ,, Dr. ஜான் ஜோசப்,
அங்க வைத்தியர், பெரியகுளம்.

8. ,, P. O. நயினான், கொட்டகுடி.
ரோட் ஓவர்சியர், போடி.

மானேஜிங் டைரக்டர்:

9. ,, T. S. கிருஷ்ணசாமி அய்யர்,
கொட்டகுடி ரோப்வே, போடி.

10. ,, செக்ரட்டரி: பாஸ்கரன்.

மேற்கண்ட கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்த டைரக்டர்களால் இக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு நன்கு நடந்து வருகிறது. அன்னிய நாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் மூலமாக நமது திரவியம் அகலுவதை நிறுத்தி, இக் கம்பெனியில் சேர்ந்து பாலிசி எடுத்துக்கொண்டு பொருள் சேகரிக்க முயலுங்கள். எல்லா விவரங்களுக்கும் இக் கம்பெனி காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளுங்கள்.

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

"தமிழ் நாடு" ஆசிரியர்
டாக்டர் P. வரதராஜலு நாயுடு அவர்களின்
முகவுரையுடன் கூடியது.

தோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்
ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற
சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.

விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்
படங்களுடன் கூடிய
ஆர்ட் & கிளேஸ் பதிப்பு விலை ரூ. 1—4—0.

தபால் செலவு வேறு

ராட்டூர்-
-வீரன்- துர்க்கா தாஸ்

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசிய நாடகம்)
வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.

அவரது நாடகங்கள் எல்லாவற்றிலும்
இத் துர்க்கா தாஸே முதன்மையானது

ஆரம்ப முதல் இறுதி வரை
அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!
மயிர் சிலிர்க்கும் செயல்கள்!!!

கிரௌன் 8 சைஸ்
380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—4—0.

தபால் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.